
கல்கி

KALKI
2.8.87
ரூ. 1.50

ஆண்டு மலர்



தங்கவயல்
தமிழர்கள்




நான்தான் ரூபாய் நோட்டு... என்னைக் கவனமாகக் கையாளுங்கள்.


நான்தான் ரூபாய் நோட்டு...என்னுடைய மதிப்பு குறித்து நான் சொல்லத் தேவையில்லை...உங்களுக்கே தெரியும். ஆண்டுதோறும் 660 கோடிக்கும் மேலான எண்ணிக்கையில் ரூபாய் நோட்டுகள் அச்சிடப்படுகின்றன. அவற்றை அச்சிட ஆகும் செலவு மிகமிக அதிகம்.

எங்கள் வாழ்நாள் மிகவும் குறுகியது. இந்த மனிதர்கள் எங்களை நாங்கள் வாழ வேண்டிய காலம் வரை வாழ விடுவதில்லை. உண்மையைச் சொல்லப் போனால், உலகின் எந்தப் பகுதியையும் விட நமது நாட்டில் தான் கரென்சி நோட்டுகளின் ஆயுள் மிகவும் குறைவு. ஒவ்வொரு ஆண்டும் சராசரி 300 கோடி எண்ணிக்கைக்கும் அதிகமான ரூபாய் நோட்டுகள் அழிக்கப்படுகின்றன—எவ்வளவு பெரிய சேதம்!

ஆகவேதான் என்னைக் கவனமாகக் கையாளும்படி உங்களை நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.



என்னைச் சேதப் படுத்துவதால் நஷ்டம் உங்களுக்கு மட்டு மல்ல—நாட்டுக்கும் தான்.



என்னைக் கையாளும் போது நீங்கள் நினைவில் கொள்ள இதோ சில குறிப்புகள்:

- எண்ணெய் அல்லது ஈரம் படிந்த கைகளால் என்னைத் தொடாதீர்கள்
- என்மீது எக்காரணம் கொண்டும் எதனையும் எழுதாதீர்கள்.
- என்னைச் சுருட்டி, மடக்கி, கசக்காதீர்கள்—நான் கிழிந்து விடக் கூடும்.

அளவுக்கதிகமாக என்னை நீங்கள் சேதப்படுத்தினால், மற்றவர்களிடம் என்னை நீங்கள் கொடுக்கும்போது அவர்கள் என்னை ஏற்க மறுக்கலாம். என்னுடைய ஏதேனும் ஒரு பகுதி காணாமல் போயிருந்தாலோ, என்னுடைய எண் சரியாகத் தெரியாத அளவுக்கு நான் சேதப்படுத்தப்பட்டிருந்தாலோ அல்லது மிக மோசமான அளவுக்கு நான் கிழிக்கப்பட்டிருந்தாலோ, வங்கிகள் கூட என்னை ஏற்க மறுக்கலாம்.

ஆகவே என்னைக் கவனமாகக் கையாளுங்கள்.

பப்ளிக் செக்டர் பாங்குகள்

—எங்கிருந்தாலும் என்றும் உங்கள் வாழ்வோடு இணைந்தவை.

ஜாயின்ட் பப்ளிசிட்டி கமிட்டி
பப்ளிக் செக்டர் பாங்குகள்

28 உறுப்பினர் பாங்குகள்

- அலகாபாத் பாங்க்
- ஆந்திரா பாங்க்
- பாங்க் ஆப் பரோடா
- பாங்க் ஆப் இந்தியா
- பாங்க் ஆப் மகாராஷ்டிரா
- கனரா பாங்க்
- சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா
- கார்பொரேஷன் பாங்க்
- தேனா பாங்க்
- இந்தியன் பாங்க்
- இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்
- நியூ பாங்க் ஆப் இந்தியா
- ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ்
- பஞ்சாப் நேஷனல் பாங்க்
- பஞ்சாப் & சிந்து பாங்க்
- ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
- ஸ்டேட் பாங்க் ஆப் பிகானீர் & ஜெய்ப்பூர்
- ஸ்டேட் பாங்க் ஆப் ஹைதராபாத்
- ஸ்டேட் பாங்க் ஆப் இந்தூர்
- ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர்
- ஸ்டேட் பாங்க் ஆப் பாட்டியாலா
- ஸ்டேட் பாங்க் ஆப் சௌராஷ்டிரா
- ஸ்டேட் பாங்க் ஆப் திருவிதாங்கூர்
- சிண்டிகேட் பாங்க்
- யூகோ பாங்க்
- யூனியன் பாங்க் ஆப் இந்தியா
- யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா
- விஜயா பாங்க்

தங்கவயல் தமிழர்கள்



சொற்சித்திரம்: **சுபா**

சில சட் சட் சந்திப்புகள் 2

"சட்டசபையில் பெரிய கலாட்டா செய்வோம்!" 6

சுரங்கத்தில் சுற்றிய வினாடிகள் 9

கிளர்ச்சி நடந்தது: நல்லுறவு எரிந்தது! 65


கன்னடத் தமிழர்களாகவே வாழ விரும்புகிறோம்! 66

தங்கத் துணுக்குகள் 70





படப்பிடிப்பு: **யோகா**










• ரெமி இனவரசி
— கனவுகளோடு காத்திருக்கிறேன்.



• சங்கர்





• ஜெயமேரி

சில சட் சட் சந்திப்புகள்

தாய்மொழிப் பற்று தவறாகுமா?

கலர் கலராய் எம். ஜி. ஆர்.; கறுப்பு வெள்ளையில் எம். ஜி. ஆர்.; ஒரே ஒரு ஜெயலலிதா என்று சுவரெங்கும் படங்கள் நிறைந்த அண்ணா தொழிற்சங்கப் பேரவை அலுவலகம். பொதுச் செயலாளர் எம். பக்தவத்சலம் எனும் பக்தன். மாஜி எம். எல். ஏ. சதா இனிய சிரிப்பைச் சுமக்கும் முகம்.

''கன்னடர்களும், தமிழர்களும் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருந்த போது, தமிழகத்தின் இரு மாநிலக் கட்சிகள்தான் தங்க வயலில் மொழி வெறியைத் தூண்டி விட்டுக் கலகம் வரக் காரணமானார்கள் என்று பொதுவாக ஒரு குற்றச்சாட்டு இருக்கிறதே?''

''எங்கள் மீது எந்தத் தவறுமில்லை. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களிடத்தில், நாங்கள் தாய்மொழி உணர்வை வளர்த்தோம் அவ்வளவுதான். இந்த இரு கட்சிகளைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் தமிழ் உணர்வு இல்லை. நாங்கள் கன்னடத்தை



* ஸ்ரீதர் பிள்ளை



* ராஜகோபால்



* எம்.ஜி.ஆர். பக்தன் பக்தவத்சலம்



* தயாளன்
— நினைத்தால் சம்பாதிக்கலாம்

எதிர்க்கவில்லை. தமிழை ஆரம்பக் கல்வியி லிருந்து விலக்கக் கூடாது என்று மட்டுமே போராடினோம்.''

''82 இல் நடந்த கிளர்ச்சிக்குப் பிறகு தமிழர்களுக்கு மதிப்பு இல்லாமல் போய் விட்டதே?''

''உண்மைதான். கன்னட மொழித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதில்லை என்று குண்டுராவ் உறுதி கொடுத்தார். மாநில அரசு மாறி ஹெக்டே வந்தவுடன் கன்னடத்தை ஒவ்வொரு வழியிலும் புகுத்து கிறார். நாங்கள் கன்னடத்தை எதிர்ப்ப தாகத் தவருக அர்த்தம் செய்து கொண்டு, தங்கவயல் தமிழர்களுக்கு ஒவ்வோர் இடத் திலும் புறக்கணிப்பு நடக்கிறது. நான் எம். எல். ஏ. ஆக இருந்த போது கர்நாடக சட்ட சபையில் தமிழில்தான் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டேன். ஆனல் தங்கவயல் பிரச்னைகள் பற்றிப் பேசும்போது, சபை யினருக்குப் புரியும் கன்னடத்தில்தான் பேசி வந்தேன்.''

எப்படி முன்னேறும்?

காஸ் சிலிண்டர்களுக்கான ஏஜென்ஸி ஆபீஸ். அழுத்தந்திருத்தமான தமிழ். அதிக அலட்டல் இல்லாத பேச்சு. எல்லாக் கட்சிகளிலும் புகுந்து புறப் பட்டவர் என்ற பெருமை! தங்கச் சுரங் கத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஐ. என். டி. யூ. சி. யூனியனின் செயலாளர் ராஜ கோபால்:

''தங்கவயல் தொகுதிக்கு எப்பொழுதும் ஒரு துரதிர்ஷ்டம். கர்நாடகாவில் எந்தக் கட்சி ஆளுகிறதோ, அதற்கு எதிரான கட்சி யைச் சேர்ந்தவர் தான் எம்.எல்.ஏ.வாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். அதனல் எங்கள் தொகுதியின் பிரச்னைகள் கவனிக்கப்படா மலே போகின்றன...''

''என்ன பிரச்னை?''

''நகராட்சியை எடுத்துக் கொள் வோமே. ராபர்ட்சன்பேட், ஆண்டர்சன் பேட், மார்கர்ம் பேட் இவையெல்லாம் முனி சிபல் ஏரியா. தொழிலாளர்களின் வீடு கள் இருக்கும் மற்றப் பகுதி சுரங்க ஏரியா. அங்கே நிர்வாகம் தொழிலாளர் நலத்திட்டங் கள் மூலம் வசதிகள் செய்து கொடுக்கிறது. ஆனல் முனிசிபல் ஏரியா? முனிசிபல் சேர் மன் சுயேச்சையாக வெற்றி பெற்றதும் ஆளும் கட்சியான ஜனதாவில் சேர்ந்தார். ஆனல் உள்ளூர் ஜனதா அவரை அங்கீகரிக் கவில்லை. அதனல் மாநில அரசு ஒத்துழைப்ப தில்லை. இந்த வட்டாரம் எப்படி முன்னே றும்?''

பந்தா இல்லாத எம். எல். ஏ.

ராபர்ட்சன் பேட்டையைச் சேர்ந்த சங்கர்:

எங்கள் ரோடுக்குத் தண்ணீரே வரா மல் இருந்தது. இப்போது ஒரு போர் வெல் போட்டுக் கொடுத்திருக்கிறர்கள். ராத்திரி முழுக்கத் தண்ணீர் அடித்துப் பெண்கள் எடுத்துச் செல்வதால் தெரு விளக்கு தேவை என்றோம். அதையும் உடனே செய்து விட்டார்கள். எந்தவித பந்தாவும் இல்லா

மல் இதையெல்லாம் உடனே ஏற்பாடு செய்து கொடுத்தது எம். எல். ஏ. திருமணி தான்.''



எம். சுப்பிரமணி



ஆறுமுகம்

வாரப் பத்திரிகைகளுக்கு மவுசு

பத்திரிகைக் கடையில் இருக்கும் ஸ்ரீதர் பிள்ளை:

''இங்கிருக்கும் தமிழர்கள் தமிழ்நாட்டு அரசியலை விமர்சிக்கும் பத்திரிகைகள் அதிகம் வாங்குவார்கள். அடுத்தபடி வாரப் பத்திரிகைகளுக்கு மவுசு. மாதாந்திர நாவல்களில் இவர்களுக்கு அதிக ஆர்வம் இல்லை. அதே போல் சினிமாப் பத்திரிகைகளும் அதிகம் விற்பதில்லை...''

துணிவே துணை!

நட்பான சிரிப்பு. லேசான தாடி மீசை. ஆட்டோ டிரைவர் எம். தயாளன்:

''என் அப்பா சுரங்க வேலையிலிருந்து ரிடையரானார். நான் பி. யூ. சி. படித்தும், ஐ. டி. ஐ. ஃபிட்டர் கோர்ஸ் படித்தும் சுரங்கத்திலும் வேலை இல்லை — வெளியிலும் வேலை இல்லை. அப்பா ரிடையரான போது கிடைத்த பணத்தில் சொந்தமாக ஒரு ஆட்டோ வாங்கி ஓட்டுகிறேன். ஒரு நாளைக்குப் பெட்ரோலுக்குப் போக 70 ரூபாய் கிடைக்கும். தமிழர்களை நிராகரிக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் துணிந்து நின்றால் தொழில் கிடைக்காமலா போய்விடும்?

ஒரு நாளைக்கு 70 ரூபாயா என்று ஆச்சரியப்பட்டோம். ஆனால் மனிதர் எங்களிடமே அடம் பிடித்து அன்றைய பொழுது சவாரி செய்வதற்கு நூற்றுப்பத்து ரூபாய் வாங்கி விட்டார்! ஆட்டோ ஓட்டிகளை கோலார் போங்கள்.

நூறு வருஷம் உழைத்தும்...

சுரங்கத் தொழிலில் இருந்து ஓய்வு பெற்று விட்ட ஆறுமுகம்:

''ரிடையர் ஆனப்புறம் ரிடையர் ஆவுற தொழிலாளி மவனுக்கே வேலை கொடுக்கணும்னு யூனியனோட பேசி மேனேஜ்மெண்டில் முடிவெடுத்தாங்க. அப்பால அந்த ஸிஸ்டமே வேண்டாம்னு அதே யூனியன், மேனேஜ்மெண்ட் கிட்ட ஒப்புக் கொண்டுடுச்சு! பொதுவா அரசு நிறுவனங்களிலே தமிழனுக்கு வேலை இல்லைங்கறானுங்க. கன்னடம் படிச்சவனுக்குத்தான் வேலைங்கறானுங்க. நம்ப பசங்க கன்னடமும் படிக்கிறானுங்களே. அப்பாலயும் ஏன் உத்தியோகம் போட்டுக் கொடுக்க மாட்டேங்கறே? கவர்ன்மெண்டு, நாங்க, தேர்ந்தெடுக்கிறோம் உன்னை. எங்களுக்கு வேலை கொடுக்க முடியலேன்னா எதுக்காக இருக்கறே நீ? நூறு வருஷமா நாங்க வந்து இங்க வேலை செய்ஞ்சிக்கினுகிறோமே, அதுக்கு இதுதான் பலனா?

தமிழனுக்கு வேலை கொடு!

சுரங்க வேலையில் இருந்து ஓய்வு பெற்ற இன்னொரு தொழிலாளி. எம். சுப்ரமணி:

''இந்தச் சுரங்கத்தில் இனிமேல் தமிழர்களை வேலைக்கு வைக்கப் போவதில்லை. தமிழர்கள் வேறு எங்கேயும் போகிற மாதிரியும் இல்லை. தமிழர்களுக்கு வேலை கொடுப்பதற்காகவே தொழிற்சாலைகள் இங்கே தொடங்கப்பட வேண்டும். பையன்கள் எல்லாம் ஐ. டி. ஐ. படித்திருக்கிறார்கள். பட்டப் படிப்பு படித்திருக்கிறார்கள். இவர்களுக்கு வேலை தர வேண்டும். இங்கே சுரங்கத்தில் வேலை இல்லை என்று நிர்வாகம்

எங்களை ஒரிஸ்ஸா, ராமகிரி, மேற்கு வங்காளம், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய இடங்களில் இருக்கும் சுரங்கங்களுக்கு அனுப்புகிறது. அங்கே போனால் அந்த ஊர்க்காரர்கள் 'எங்களுக்கே இங்கு வேலை இல்லை. உங்களுக்கு ஏது இங்கே வேலை?' என்று துரத்துகிறார்கள். மேற்கு வங்கத்தில் தமிழர்கள் இரண்டு பேரைக் கொலையே செய்துவிட்டார்கள். பல தொழிற்சாலைகள் தொடங்கி வேலையில்லாத அத்தனை தமிழருக்கும் வேலை கொடுப்பதைத் தவிர வேறு வழியே இல்லை.

கண்களில் கனவுகள்!

கண்களில் கனவுகளுடன், உதடுகளில் மங்காப் புன்னகையுடன் எதிர்ப்பட்ட ரெமி இளவரசி. இவர் சுரங்கத் தொழிலாளி ஒருவரின் தங்கை.

''எங்க வீட்ல எங்க அண்ணன் மட்டும் வேலைக்குப் போவுது. எண்ணூறு ரூபாய் சம்பளம். பிடிப்புப் போக நானூறு ரூபாய் கொண்டு வரும். ரேஷன்ல கோதுமை அரிசி ரெண்டும் ரெண்டு ரெண்டு கிலோ கொடுப்பாங்க. எண்ணெய், சூஜி ரெண்டு ரெண்டு கிலோ கொடுப்பாங்க. நாங்க மாடல் ஹவுஸ்ல இருக்கறதால மாசத்துக்கு அஞ்சு ரூபா வாடகை. நானூறு ரூபாய்ல நாங்க எட்டுப் பேர் சாப்பிடணுங்க. எப்படி பத்தும்? சுரங்கத்தில லேடீஸுக்கு வேலை கெடையாது. கே.ஜி.எப் கோர்ஸ்ஸு வெளியிலயும் வேலை கிடைக்காது! நான் பிரைவேட்டா கன்னடம் படிக்கிறேன். செகன்ட் பி.எஸ்.ஸி வரைக்கும் படிச்சிருக்கேன். நர்ஸிங் தொழிலுக்கு அப்ளை பண்ணியிருக்கேன். என்ன பிரயோஜனம்? வேலை கிடைக்க மாட்டேங்குது.''

கல்யாணம், கணவனுடன் கூடிய சந்தோஷமான வாழ்க்கை என்றெல்லாம் கூட இவரது கனவுகள் விரியவில்லை. ஒரு வேலை, குடும்ப பாரத்தைச் சேர்ந்து சுமக்க ஒரு வேலை. கிடைக்குமா?

ஒரு சிலோன் ஆகணுமா?

சுரங்கத் தொழிலாளி ஒருவரின் மனைவி. ஜெயமேரி:

''என் பொண்ணுங்களை நான் யாருக்குக் கட்டிக் கொடுப்பேன்? உள்ளூர்ப் பையனுங்களுக்கு வேலை இல்லை. வெளியூருப் பசங்க நம்ப ஊர்ப் பொண்ணுங்கன்னு யோசிக்கறாங்க. வர்றவருமானத்திலேவாய்க்கும் கைக்கும் சரிக்கட்றதுக்குள்ள போதும் போதும்னு ஆய்டுது. எங்களுக்கெல்லாம் தண்ணியும் சரியாக் கெடைக்கறதில்ல. எங்க புள்ளைங்களும் இப்ப கன்னடம் படிக்குதுங்க. ஃபிட்டர் வேலை தச்சு வேலைன்னு தெரிஞ்சி வச்சிருக்குதுங்க. இனிமேலேயும் வேலை கிடைக்கலேன்னு வெச்சிக்குங்க, கே.ஜி.எப் ஒரு சிலோனு ஆனாலும் ஆயிடுங்க!''

* டி. எஸ். மணி — எம். எல். ஏ.

“சட்டசபையில் பெரிய கலாட்டா செய்வோம்!”



தங்கவயல் தொகுதியின் தற்போதைய எம். எல். ஏ.டி. எஸ். மணி கம்யூனிஸ்ட் கட்சி ஸி. பி. ஐ. (எம்) டிக்கெட்டில் வெற்றி பெற்றவர். மதியம் ஒன்றரை மணிக்கு எங்களை வரச் சொல்லிவிட்டு மூன்றரை மணி வரை நாங்கள் சொன்ன இடத்தில் காத்திருந்தும் வராமல், அப்புறம் நாங்கள் வீடு தேடிப் போய் ஏமாந்து, ஒரு வழியாக இரவு ஒன்பதரை மணிக்கு அவரைச் சந்தித்தோம்.

''தங்கவயல் முனிசிபாலிடி பற்றிப் பார்க்கிறவர்களெல்லாம் புகார் சொல்கிறார்களே?''

''ஆமாம். முனிசிபாலிடி. ஊழலோ ஊழல். ரோடையே கூட விற்று விட்டார்கள். சாலையை மறித்துக் கட்டடம் கட்டச் சிலருக்கு அனுமதி வழங்கினார்கள். எங்கள் எதிர்ப்பை மீறி, சாக்கடை மீது கூடக் கட்டடம் கட்டினார்கள்!''

''இருங்கள். நீங்களும் முனிசிபல் கவுன்ஸில் உறுப்பினர்தானே?''

''இருந்தேன். இப்போது ராஜினாமா செய்து விட்டேன்!

''ஆனால் கிட்டத்தட்ட மூன்றரை வருடங்களுக்கு முனிசிபல் கவுன்ஸிலில் இருந்திருக்கிறீர்கள். அப்போதெல்லாம் என்ன செய்தீர்கள்?''

''நாங்கள் சேர்மனை எதிர்த்துத் தர்ணா செய்திருக்கிறோம். மைக் போட்டுப் பேசியிருக்கிறோம். சி. எம்., முனிசிபல் மினிஸ்டர், முனிசிபல் கமிஷனர் எல்லோரிடமும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஒன்றும் நடக்கவில்லை என்பதால் ராஜினாமா செய்தோம்...''

''தங்கவயல் தமிழர்களுக்குப் போகும் இடமெல்லாம் நிராகரிப்பு என்ற நிலை வந்துள்ளதாமே. அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?''

''தங்கவயல் ஒரு குட்டித் தமிழ்நாடு. இங்கிருப்பவர்கள் தமிழ் நாட்டிலிருந்து வரும் பேப்பர்களைத்தான் படிக்கிறார்கள். கர்நாடக மாநிலத்தில் இருப்பதை மறந்து, தமிழ்நாட்டு அரசியலையே பேசுகிறார்கள். இப்போது மைசூர் ரிஸர்வ் போலீஸ் இண்டர்வியூ ஒன்று நடந்தது. தங்கவயலிலிருந்து வந்தவர்கள் பலருக்கு ஹெக்டே யார் என்று பதில் சொல்லக் கூடத் தெரியவில்லை. எம்.ஜி.ஆர்., தெரியும். கருணாநிதி தெரியும். ஆனால் கர்நாடக மந்திரிகளைப் பற்றித் தெரியாது! கன்னடம் தெரியாது. திருப்பி அனுப்பி விட்டார்கள்...''

கன்னடத்தைக் கட்டாயமாகக் கற்க வேண்டும் என்பது சரியா?''

''ஆரம்பக் கல்வி தாய்மொழியில் இருக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் இருக்கும் உரிமையை நீங்கள் மறுக்க முடியாது என்று சட்டசபையில் நான் சொல்லியிருக்கிறேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள்? கர்நாடக மாநிலத்தில் இருக்க வேண்டுமானால், நீ கன்னடத்தில் எழுதிப் படிக்க வேண்டும், கன்னடத்தில் பேச வேண்டும்!''

''உங்களுக்குக் கன்னடம் தெரியுமா?''

தர்மசங்கடமான சிரிப்பு. சற்று மௌனம்.

''தெரியாது. கொஞ்சம் கொஞ்சம் கற்று வருகிறேன்.

''தெரியாது எனில் அவசியமான சமயத்தில் சட்டசபையில் உங்கள் கருத்துக்களை எப்படித் தெரிவிக்க முடியும்?''

''தகராறு என்று வரும்போது, கத்திக் கூச்சல் போட்டு, சட்டசபையில் பெரிய கலாட்டா செய்வோம்!'' என்றார், பெருமையாக!

''சரோஜினி மகிஷி கமிஷன் அறிக்கை செயலானால் 85% வேலை கன்னடர்களுக்குத்தானாமே?''

''அந்த அறிக்கையை ஆராய இன்னொரு குழுவை நியமிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளோம். எனவே அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.''

''தங்கவயல் தொகுதிக்கு என்ன செய்வதாக இருக்கிறீர்கள்?

''110 போர்வெல் போட்டார்கள். ரோடு போட்டார்கள். பள்ளிக்கூடங்கள் கட்டப்படுகின்றன. புது ரூட்களில் பஸ் வசதி செய்யப்பட்டிருக்கிறது. இங்கு ஒரு தொழிற்சாலை வேண்டும் என்று தில்லியில் மனு கொடுக்கப் போகிறோம். பத்து லட்ச ரூபாய் செலவில் பெண்கள் ஹாஸ்டல் கட்டப்பட்டிருக்கிறது.... ஆண்கள் ஹாஸ்டலும் கேட்டிருக்கிறோம்...

நண்பர் படை ஆளுக்கு ஒன்றை நினைவூட்ட, பட்டியல் நீண்டது.

சிவசங்கரியின் சிறந்த நாவல்கள் கதைகள்

	ரூ. பை
இதுவும் தாஜ்மஹால்தான்	6.00
ஆயிரம் காலத்துப் பயிர்	13.00
தெப்பக்குளம்	9.50
கருணைக் கொலை	18.00
எதற்காக?	9.25
நவம்	9.25
ஆயுள் தண்டனை	17.50
பிராயசித்தம்	9.50
சுறாமீன்கள்	10.75
காற்றுள்ள போதே	7.50
மூக்கணாங்கயிறு	6.00
உண்மைக் கதைகள்	7.00
டிரங்கால்	11.00
ஒரு சிங்கம் முயலாகிறது	6.75
ஓவர்டோஸ்	9.00
நட்பு	7.00
கண் கெட்ட பின்	4.50
இன்னொரு காரணம்	5.75
பொய்	10.00
தீர்வு	7.25
ஒற்றைப் பறவை	10.75
மண் குதிரைகள்	7.25
ருசி கண்ட பூனை	6.00
தப்புக் கணக்கு	10.00
அது சரி, அப்புறம்	16.00
அரவிந்தர் சொல்லுகிறார்	8.00
இனி தொடராது	6.50
அவன்	20.00
மனம் கவர்ந்த மலேஷியா	12.00
ஒரு பகல் ஒரு இரவு	19.00
ஒரு அப்பாவும் இரண்டு பெண்களும்	6.75
பிரதமருடன் ஒரு பயணம்	8.50

அனுராதா ரமணன்

புவனா என்னும் புயல்	13.00
யாருமிங்கே ராமனில்லே	10.50
எத்தனை காலம் உனக்காக	16.00
துணையாக ஒரு பறவை	16.00
விளக்கில்லா சந்திரங்கள்	6.00

லட்சுமி

அம்மா எனக்காக	15.00
வசந்த கால மேகம்	10.75
தேடிக் கொண்டே இருப்பேன்	28.00
கால முழுதும் காத்திருப்பேன்	15.00
உயிரே ஓடி வா	10.00
சொர்க்கத்தின் கதவுகள்	15.00
மங்களாவின் கணவன்	25.00
காஞ்சனையின் கனவு	24.00

திருமகள் நிலையம்,
55, வெங்கட்நாராயணா
ரோடு, தி. நகர்,
சென்னை — 600 017.
போன்: 442899.

ACE EDUCATIONAL SYSTEMS

Rathna Complex, 2nd Floor,
Opp. Ranganathan street,
80, Usman Road, T.Nagar,
Madras - 600 017.

To the readers of KALKI

During the last ten months I have had the special privilege of meeting over 10,000 teachers and parents of children in nearly 250 English medium schools all over the country. They were all, without exception, very enthusiastic about the syllabus and the methodology that I presented to them for teaching small children to speak in English.

Now you too can do your children a big favour by ordering a set of audio tapes containing the much-acclaimed teaching items. We have two sets of audio tapes accompanied by illustrated texts.

1. Spoken English for KG children: Two C-60 tapes with two illustrated texts. Price. Rs. 80/- for the set.
2. Spoken English for Primary school children: Two C-60 tapes with an illustrated text. Price Rs. 80/- for the set.

You can order them by V P P or send M.O. or Cheque/DD payable to ACE EDUCATIONAL SYSTEMS.

These audio tapes are, by common consensus, among the best teaching aids to appear on the educational scene in recent times.

Thanking you,

Yours sincerely,

R Ramakrishnan

TAPES THAT TEACH

சுரங்கத்தில் சுற்றிய விழிகள்



* சுரங்கத்தின் வெளித்தோற்றம்.

'தங்கச் சுரங்கம்' என்ற சொற்றொடரைக் கேட்டாலே உடலெங்கும் ஒரு கிளுகிளுப்பு நமக்கெல்லாம் பரவுகிறது. அப்படி, கேட்டவுடன் மயங்க வைக்கும் சக்தி படைத்த அந்தத் தங்கச் சுரங்கத்திற்குள் நுழைந்து பார்த்து விடுவது என்று தீர்மானித்தோம்.

தங்கச் சுரங்கத்திற்குள் நுழைவதற்குண்டான அனுமதியைப் பெறுவதற்காக அலைந்த அலைச்சல், காத்திருந்து விரயமான தங்கமான நேரம் இவை பற்றியெல்லாம் இந்தக் கட்டுரையில் சொல்லப் போவதில்லை.

நேரே சுரங்கத்தின் முன்வாசலுக்கு வருவோம்.

பிரிட்டிஷ் காலத்தில் போடப்பட்ட, மூடப்பட்ட கதவுகள். பக்கத்தில் திட்டி வாசல் போல் இன்னொரு சின்னக் கதவு. அந்தக் கதவு வழியே நாங்கள் கொண்டு சென்றிருந்த பாஸை வாங்கிக் கொண்டு உள்ளே அனுமதித்தார்கள்.

கதவுகளுக்கு இருபுறமும் கிண்ணென்று இழுத்துக் கட்டப்பட்ட முள்வேலி. அந்த முள்வேலி காம்பவுண்டிற்குள் ஒரு பெரிய திறந்த வீடு போல் கட்டடம் அமைந்திருக்கிறது. அந்தக் கட்டடத்தின் உச்சியில் இரண்டு ராட்சஸ உருளைகள் பொருத்தப்பட்டு அந்த உருளைகளில் தேர்வடம் அளவிற்கு இரும்புக் கயிறு சுற்றப்பட்டுள்ளது — சுமார் 20,000 அடி நீளமுள்ள இரும்புக் கயிறு! இந்தக் கயிற்றின் இரண்டு நுனிகளில்தான் இரண்டு கூண்டுகள் பிணைக்கப்பட்டிருக்கின்றன.

இரும்பு உருளைகளைச் சுழற்றவும் அவற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்தவும் ஒரு ராக்ஷஸ மிஷின். பிரிட்டிஷ் காலத்து மிஷின். அதனை இயக்க ஓர் ஆசாமி. நாங்கள் அந்தக் கூண்டு இருந்த அறைக்கு முன்னறையில் (வரவேற்பு அறை?) உட்கார வைக்கப் பட்டோம். கீழே, பூமிக்குக் கீழே, கீழே போகப் போவதைப் பற்றி ஒரு மெலிதான பயம் நெஞ்சில் உலா நடத்திக் கொண்டிருக்க, சுரங்கத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி எங்களிடம் ஒரு கார்டை நீட்டிக் கையெழுத்துப் போடச் சொன்னார். அந்தக் கார்டில் எழுதியிருந்ததைப் படித்தோம்.



நாங்கள் எங்கள் சுய விருப்பத்தின் பேரில் சுரங்கத்திற்குள் இறங்குகிறோம். அப்படிப் போகும்போதோ, சுரங்கத்திற்குள்ளோ விபத்து ஏற்பட்டு, அங்க ஹீனம் அடைந்தாலோ, உயிரிழக்க நேரிட்டாலோ அதற்கு முற்றிலும் நாங்களே பொறுப்பு.

* 19.7.87 இதழில் வெளியான 'கையைப் பிசைகிறார் ரிபைரோ' தலையங்கம் படித்தேன்! 'பஞ்சாப் தீவிரவாதிகளின் இன வெறி—பிரிவினைப் படுகொலைகள், வரைமுறையின்றி வளர்ந்துவிட்டிருக்கும் சூழலில், அதிகாரவர்க்கம் என்ன செய்ய வேண்டுமென்பதை மிகத் தெளிவாக வலியுறுத்திவிருக்கிறீர்கள்!'

வேலாயுதம்பாளையம். எம். சம்பத்.

* பக்ஷும் பந்தலும் சிறுகதையின் ஒட்டுமொத்த ஜீவனையும் கடைசி நாலே வரிகளில் அடக்கிய அசோகமித்திரனுக்குப் பாராட்டுக்கள்.

கடலூர்—2. ஆர். வேணுமணி.

* 19.7.87 இதழில் அட்டைப் படக் கட்டுரை என் நெஞ்சைக் கலங்க வைத்தது. அரசுத் துறையில் மனிதர்களே இல்லையா? நாளை நமக்கும் இந்தக் கதி வரலாம் என்ற சிந்தனையே அவர்களுக்கு வரவில்லையா? நமது அரசு, ஆணை இடுவதிலும், அடிக்கல் நாட்டுவதிலும் காட்டும் தீவிரத்தைச் செயல்முறையிலும் காட்டட்டும்.

கோவை—6. ஆர். ரமணன்.

* 'இந்தியாவின் நட்சத்திரம்' என்ற அவார்டைப் பெற்றும் பயனில்லாமல் பிரபாகரனின் வாழ்க்கை வீணடிக்கப்பட்ட சோகக் கதை மிகுந்த வருத்தத்தை அளித்தது. வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்பட்டால்தான் இம்மாதிரி விளையாட்டுத் துறைகளில் இருப்பவர்கள் ஜொலிப்பார்கள். விளையாட்டுத் துறைப் பிரமுகர்களாவது இம்மாதிரி கண்ணுக்குத் தெரிந்து கஷ்டப்படுகிறவர்களைக் கைதூக்கிவிட உதவி செய்யலாமே.

சென்னை—17. எஸ்.வி. ராஜசேகர்.

* ஜவ்வாது மலையின் பெயரில்தான் மணம் வீசுகிறது! அங்கு வாழும் மக்களின் வாழ்க்கையில் மணம் வீசவில்லை! இதற்கு மனம் இல்லாத அதிகாரிகளே காரணம் என்பதை நினைக்கும்போது எங்கள் மனம் குமுறுகிறது சார்!

திருவிடைமருதூர். —எஸ். நாதன் பாபு.

* 'மந்திரி பட்டா வழங்குகிறார்' கதை படித்தேன். பியூனிலிருந்து ஆரம்பித்துத் தாசில்தார், துணை தாசில்தார், கலெக்டர், மந்திரி ஒருவரையும் விடவில்லை. தூள் தூளாக்கிவிட்டார் கதாசிரியர்.

சென்னை—53. கே.எஸ்.எஸ். மணியன்.

* இந்தியத் திருவிழா கட்டுரை ஏறக்குறைய ஒரு நேர்முக வர்ணனை போல அமைந்திருந்தது. ரஷ்யாவைச் சம்பந்தினை வர்ணித்திருந்தது மிகப் பொருத்தம். முதுகில், தட்ட வேண்டிய இடத்தில் தட்டியும் தலையில் குட்ட வேண்டிய இடத்தில் குட்டியும் எழுதப்பட்ட அருமையான கட்டுரை.

புத்தாம்பூர் இரா. செல்வ பாண்டியன்

* 'அடைக்கலம் தேடி வரும் அகதிகள்' என்னும் வாஸந்தி கட்டுரை படித்தேன். வாழ்க்கை என்பதிலே, லே இனி அர்த்தமில்லை என்பது போன்ற இலங்கைத் தமிழர்களின் இதயக் குமுறல்களில் உள்ள உண்மை,

இதைப் படித்தவுடன் அடிவயிற்றில் ஒரு லேசான பிசைவு. கையெழுத்துப் போடும்போது எங்கள் இதயம் எழுப்பிய படக் படக் (போகாதே, போகாதே) எங்களுக்குக் கேட்டது. கையெழுத்துப் போட்டுவிட்டோம்.

"கொஞ்சம் காத்திருங்கள். கேஜ் (கூண்டு) கீழே போயிருக்கிறது. மேலே வந்தவுடன் அழைத்துப் போகிறேன்" என்றார் கார்டை நீட்டிய அதிகாரி.

கூண்டு மேலே வருவதற்காகக் காத்திருந்தோம். கூண்டு மேலே வந்தது. கூடவே ஒரு பரபரப்பு!. ஒரு தொழிலாளி மயங்கிய நிலையில் இருக்க, அவரை இருவர் சுமந்து வந்து ஒரு பெஞ்சில் படுக்க வைத்தார்கள்.





மயங்கி இருந்தவர் கண்களைத் திறந்து வைத்திருந்தார். பார்வை சூன்யத்தை வெறித்துக் கொண்டிருந்தது! இரண்டு பேர் அவரை அழைத்துப் பார்க்க — மௌனம். யாரோ சுள்ளென்று முகத்தில் தண்ணீர் அடித்தார்கள். அப்போதும் அவர் எழவில்லை. கைகள் அவ்வப்போது இழுத்துக் கொண்டன.

'சுரங்கத்தில் ஏணியில் ஏறுகையில் தவறி விழுந்து விட்டார்' என்றார்கள். கூடவே, 'இவருக்கு வலிப்பு நோயும் இருக்கிறது' என்றார்கள். தொடர்ந்து,

"நீங்க உள்ளே போங்க" என்றார்கள் எங்களைப் பார்த்து.

"டாய்லெட் எங்கே இருக்கு?" என்று

உள்ளத்தை உலுக்கி மனம் கனக்க வைத்தது.

காட்டூர், எஸ். அருள்மொழி.

* யாழ்ப்பாணத்தில் திடீரென்று விமானம் மூலம் உணவுப் பொருள் போட்டபோது, மக்கள் பயந்து ஓடினார்களே தவிர, 'வாழ்க கோஷம்' போடவில்லை. இது பற்றித்தான் நான் கேள்வி கேட்டிருந்தேன். சில வாசகர்கள் ஞாபகப்படுத்தியிருப்பது, கப்பல் மூலம் உணவுப் பொருட்கள் கொடுத்தபோது, 'ராஜீவ் வாழ்க, எம்.ஜி.ஆர். வாழ்க' என்று கோஷம் போட்டார்கள் என்பதையே. விமானம் மூலம் உணவுப் பொருள் போட்டபோது 'புரட்சித் தலைவர் வாழ்க' என்று குரல் எழுப்பினார்கள் என்று அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் மட்டும்தான் பேசியிருந்தார். சில வாசகர்கள் கூறுவதுபோல தராசுக்கோ கேள்வி கேட்ட எனக்கோ இதில் விஷமத்தனம் ஏதுமில்லை.

வலங்கைமான், ஜி. ராஜசேகர்.

* கல்கி 19.7.87 இதழ் வட்டமேஜை பகுதியில் எனது கதை 'வேண்டாம் பெருந்தன்மை' பற்றிச் சென்னை — 18 இலிருந்து எழுதிய விமர்சனம் குறித்து...

கதையை நான் இந்த வாசகர் குறிப்பிட்டிருந்த கருத்தின்படிதான் முடித்திருந்தேன். கதையின் முடிவைத் தாங்கள்தான் வித்தியாசமானதாக்கி, தலைப்பையும் 'வேண்டாம் பெருந்தன்மை' என்று மாற்றிப் பிரசுரித்திருந்தீர்கள்.

கோவை, கா. சு. வேலாயுதன்.

(முடிவுக்கு அழுத்தம் தருவதற்காக அவ்வாறு கதை மாற்றி அமைக்கப்பட்டது. பெருந்தன்மை கூட சில சமயங்களில் தர்ம சங்கடமாகிறது என்பதைக் கூற வந்ததால் கதாசிரியரோ, கல்கி நிறுவனமோ அல்லது அந்தக் கதையின் நாயகனோகூட பெருந்தன்மைக்கு விரோதிகளாகிவிட மாட்டார்கள். 'பெருந்தன்மையின் தலையில் இடி விழ' என்ற இறுதி வசனத்தைக் கதாநாயகனின் நொந்து போன மனத்தின் அந்தக் கண உணர்ச்சி வெளிப்பாடாக மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்)

* 'நீங்கள் கேட்டவை' பகுதியில், 'கேரள சபாநாயகர் எந்த சந்தர்ப்பச் சூழ்நிலையில் அப்படிப் பேசினார் என்று தெரியவில்லை என்று தராசு குறிப்பிட்டிருக்கிறார்.

''ஒருவர் பொய் சொல்லுகிறார்'' என்பது அவைக்கு ஒவ்வாத சொற்றொடர் என்றும், ''ஒருவர் பொய்யான செய்தியைப் பரப்புகிறார்'' என்பது அவைக்கு ஒவ்வாத சொற்றொடர் அல்ல என்றும் சட்டசபையில் தீர்ப்புக் கொடுத்துள்ளார், கேரள சபாநாயகர். சட்டசபையில் பயன்படுத்தக் கூடிய — பயன்படுத்தக் கூடாத சொற்றொடர்கள் பற்றிய விவாதத்தின்போது அளிக்கப்பட்ட தீர்ப்பு இது.

சென்னை—40, மா. சண்முகசுப்பிரமணியன்.

கேட்டார் உடன் வந்த நண்பர்!

கூண்டின் வாசலை நெருங்கினோம். தலையில் அணிந்து கொள்ள ஒரு ஹெல்மெட் கொடுத்தார்கள். ஒரு பாட்டரிப் பெட்டி. அந்தப் பெட்டியுடன் இணைந்த ஒயர். ஒயர் நுனியில் ஒரு விளக்கு — ஹெல்மெட்டில் பொருத்திக் கொள்கிற மாதிரி.

விளக்கை ஹெல்மெட்டில் பொருத்திக் கொண்டு, ஸ்விட்சைப் போட்டோம். ஓர் ஒளிக்கற்றை, மின்மினிப் பூச்சி ஒளிர்வதுபோல, எங்கள் தலையில் இருந்து நேரே கீழே பாய்ந்தது. கூண்டில் ஏறிக் கொண்டோம். சுற்றிக் காட்ட வந்தவர் கூண்டில் ஏறிக் கதவைச் சாத்திக் கொண்டார்.

கூண்டு ஒரு முறை குலுங்கியது. இறங்கத் தொடங்கியது. அவ்வளவுதான் தெரியும். அப்புறம் ஏற்பட்ட அனுபவங்களை இப்போது நினைத்தாலும் கனவு போலத்தான் நினைக்கத் தோன்றுகிறது. அந்தக் கூண்டு அறுந்துவிட்டாற் போன்ற ஒரு வேகத்துடன் கீழே இறங்கியது. சர்ரென்று ஒரு வேகம். உடம்பில் இருக்கும் அத்தனை ரத்தமும் தலைக்கு ஏற, காது திடீரென்று அடைத்துக் கொள்ள, நிற்க முடியாமல் கால்கள் தொய்ந்துவிட்ட உணர்வு. தொண்டை வறண்டு போகிறது. லேசாக மயக்கம் வருகிறது. கூண்டுக்குள் தொங்கும் சங்கிலியை, துரும்பு ஆதாரமாக நினைத்துப் பற்றிக் கொள்ளத் தோன்றுகிறது. சுற்றிலும் இருட்டு. தலையில் இருக்கும் விளக்கு நம்மைச் சுற்றிக் கீழே இறங்கும் இரும்புக் குழாய்களையும், குழாய்களுக்கு அப்பால் வெறும் கரும்பாறைகளையும் காட்டுகின்றது.

'இந்தப் பயணத்திற்கு ஒரு முடிவே இல்லையா என்ன?' என்று பயணம் தொடங்கிய சில வினாடிகளுக்குள் தோன்ற, கூண்டின் வேகம் குறையத் தொடங்கி, ஒரு குலுங்குக் குலுங்கி கூண்டு நிற்கிறது.

கூண்டின் கதவு திறக்கப்பட, வெளிப்படுகிறோம். கூண்டின் கதவு மூடப்பட்டு, தொலைபேசி வழியே நாங்கள் கூண்டை விட்டு வெளியேறிய விஷயம் சொல்லப்பட்டுக் கூண்டு மேலும் கீழே போகிறது.

நாங்கள் இறங்கிய இடம் ஒரு குகைப்



பாதை. ஒரு ட்யூப்லைட் அங்கே சிங்காரத்துடன் எரிந்து கொண்டிருந்தது. அந்தக் குகைப் பாதையின் முகப்பில் 32 என்று ஆஸ்பத்திரி வார்டு நம்பர் போல் ஒரு போர்டு தொங்கியது. அது என்ன போர்டு என்று யோசிக்க, கூட வந்த வழிகாட்டி, "இந்த 32 என்னும் போர்டு நீங்கள் 32 வது லெவலில் இருப்பதைச் சொல்கிறது. ஒரு லெவலுக்கும் இன்னொரு லெவலுக்கும் இடையே உள்ள தூரம் 100 அடி. நீங்கள் பூமி மட்டத்திலிருந்து மூவாயிரத்து இருநூறு அடி கீழே இருக்கிறீர்கள்'' என்றார்.

தலையை அண்ணாந்து பார்த்தோம். எங்கள் தலைக்கு ஓர் அடி மேலேயே பாறை தெரிந்தது. பாறையைத் தட்டிப் பார்த்தோம். ஸ்ட்ராங்காக இருந்தது. கீழே விழுந்து நம்மை மூடாது.

"போகலாமா?'' என்று கேட்டு, அவர் அந்தக் குகைப் பாதையில் தெரிந்த ஒரு கதவை நோக்கி நடந்தார். அந்தப் பகுதி ஏறக்குறைய ஏர் – கண்டிஷன் செய்யப்பட்ட மாதிரி சில்லென்று இருந்தது. இரும்புக் கதவை ஒரு தொழிலாளி திறந்து விட்டார். அதன் உள்ளே நுழைந்தவுடன் இருட்டு எங்களைச் சூழ்ந்து கொண்டது. கொஞ்சம் வெப்பமும் கூட.

அந்தக் குகைப் பாதை ஏழடி அகலம். ஏழடி உயரம். ஜெலட்டின் வெடிகளை வைத்துத் தகர்க்கப்பட்ட குகைப்பாதை. இதில் காலுக்குக் கீழே தண்டவாளம் ஓடிக் கொண்டே இருக்கிறது. தலைக்கு மேலே இரண்டு குழாய்கள் ஓடிக் கொண்டே இருக்கின்றன. அந்தக் குழாய்களில் ஒன்றில் காற்று. அந்தக் காற்று பாறைகளை ஓட்டை போடும் ட்ரில்லர் இயந்திரத்தை இயக்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மற்றபடி சுவாசிப்பதற்குப் பூமி மட்டத்திலிருந்து குளிரூட்டப்பட்ட காற்று வேறு ஒரு வழியில் செலுத்தப்பட்டு, அந்தக் காற்று பதினான்காயிரம் அடி வரை கீழே பரவி, தொழிலாளர்கள் அதைச் சுவாசித்து, கார்பன் – டை – ஆக்ஸைடை வெளிப்படுத்தியவுடன் அது இன்னொரு வழியாக, ஜெனரேட்டர்கள் விடும் புகை, பாறை வெடித்ததால் உருவாகும் கார்பன் மோனாக்ஸைட் ஆகிய அசுத்தக் காற்றோடு கலந்து வெளியேறுகிறது.

இந்த அசுத்தக் காற்று வெளியேற வழி இல்லையென்றால்சுரங்கத்தின்உள்ளேபோனவர்கள் அங்கேயே சமாதிதான்.

வழிகாட்டியுடன் நாங்கள் இருட்டில் நடந்தோம். எங்கள் தலையில் இருந்த ஒளிக்கற்றைகள் பக்கத்தில் இருந்த பாறைகளைக் காட்டிக் கொண்டு வந்தன. எங்கேயோ தண்ணீரின் சலசலப்புக் கேட்டது. மூவாயிரத்து இருநூறு அடிக்குக் கீழே ஓரிடத்தில் இடைவிடாமல் சுவர்க்கோழியின் ரீங்காரம். காலுக்குக் கீழே சேறும் தண்ணீரும் கலந்த ஒரு கலவை.

"இந்தப் பாதை உள்ளே இரண்டு, மூன்று கிலோ மீட்டர் வரை போகும். அங்கே இன்னொரு பாதையுடன் இணையும். அந்த இன்னொரு பாதையில் நடந்தால் வேறொரு 'கேஜ்' வழியாக நீங்கள் பூமியை எட்டி விடலாம்'' என்றார் வழிகாட்டி. எட்கர், ஹென்றி, சாம்பியன் ரீஃப் என்று ஒவ்வொரு சுரங்கத்திற்கும் ஒரு பெயர். ஒரு சுரங்கத்தில் இறங்கி மறு சுரங்கத்தில் வெளிப்படலாம். கோலாரில் இருக்கும் சுரங்கப் பாதைகளை நீளவாக்கில் போட்டால் சென்னையை அடைந்துவிடும்!

குகைப்பாதையில் இன்னோர் இடத்தில் நின்றார் வழிகாட்டி. சுவரில் விளக்கு அடித்துக் காட்டினார். "தங்கம் தெரிகிறதா, பாருங்கள்!'' என்றார். விளக்கொளியில் பாறை அங்கங்கே மஞ்சளாய் மினுமினுத்தது. பக்கத்தில் ஒரு குகைப்பாதை, மேல் நோக்கிச் சென்றது.

"இந்த இடத்தில் தங்கப் பாறை கிடைத்ததால் தொழிலாளிகள் வெடி வைத்துத் தகர்த்துக் கொண்டே மேலே போயிருக்கிறார்கள். அவர்கள் எலி மாதிரி நோண்டிக் கொண்டே நூறடி வரை மேலே போய் அடுத்த லெவலை அடைந்துவிடுவார்கள்.''

அந்தப் பாதை பத்தடிக்கு மேல் சட்டென்று வளைந்து மேலேறியது.

"மேலே ஏறுகையில் பாறை எங்காவது சரிந்தால்...?''

"அப்படி மாட்டிக் கொண்டால் அது அவனுடைய துரதிர்ஷ்டம். உயிரை விட வேண்டியதுதான்! அப்படி எங்கேயாவது எக்குத்தப்பாகப் பாறை சரிந்து மூடப்பட்டால் உடலை குடும்பத்தாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சட்டம். அதற்காகத் தான் இங்கே பாருங்கள்'' என்று குகை ஓரத்தில் மூடப்பட்டிருந்த ஒரு பெட்டியைத் திறந்து காட்டினார். சில ஜெலட்டின் குண்டுகளும், திரிகளும் அந்தப் பெட்டியில் இருந்தன. "அவசரத்திற்கு இதை வைத்து வெடித்து இடிபாடுகளை அகற்றி உடலை மீட்போம்.

உடல் சிலிர்த்துக் கொண்டது. இருட்டுச் சுரங்கத்தில் பாறைகளில் துளை போட்டு, வெடிகுண்டு வைத்து வெடித்துப் பாறைகளைத் துண்டாடி பூமியின் மேல் மட்டத்திற்குக் கொண்டு வர அசாத்திய மனோதிடம் வேண்டும்; அசாதாரண ஆற்றலும் தேவை!

கால்கள் ஏறக்குறையத் தொய்ந்து கொள்ள, "போகலாம் போகலாம்'' என்றோம். திரும்பி நடக்கத் தொடங்கினோம். "புதிதாக இந்தச் சுரங்கத்தில் யாராவது வந்து வழி தெரியாமல் மாட்டிக் கொண்டால் அவ்வளவுதான்'' என்று வழிகாட்டி வாக்கியத்தை முடிக்காமல் மேலும் பீதியைக் கிளறி விட்டார்.

எங்களுக்குப் பின்னே ஏதோ ஓர் என்ஜின் ஒலி மெலிதாகக் கேட்டது. "ஒதுங்குங்கள், ஒதுங்குங்கள்'' என்று வழிகாட்டி

சின்டெக்ஸ் என்றால்...?



சென்னை நகரெங்கும் கறுப்பு வண்ணத்தில் குடிநீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. அவை பற்றிய அரசியல் சர்ச்சைகள் ஒருபுறமிருக்க, அந்தத் தொட்டிகளைப் பற்றிய சில விஷயங்கள்:

அடர்த்தி அதிகமான — அழுத்தமான இட வகை பிளாஸ்டிக்கில் இந்தத் தொட்டிகள் செய்யப்படுகின்றன. இந்தப் பிளாஸ்டிக் வகையை "ஹை டென்ஸிடி பாலிஎதிலீன்" என்று சொல்கிறார்கள். அகமதாபாத்தில் இருக்கும் ஒரு கம்பெனிதான் தயாரிக்கிறது.

இந்தத் தொட்டிகள் தயாரிப்பதில் அல்ட்ரா வயலட் ஸ்டெபிலைசர் என்கிற ரசாயனப் பொருள் பயன்படுத்தப்படுவதால், தொட்டிகளை வெயிலிலும், மழையிலும் படும்படி வைத்தாலும் — மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளாய்ப் பயன்படுத்தும் போதும் — இவை தட்பவெட்ப மாறுபாட்டால் பாதிக்கப்படுவதில்லை. தவிரவும், இதன் மேல் பகுதி சூரிய ஒளி புகா வண்ணம் டைட்டாய் மூடப்படுவதால், உள்ளே உள்ள தண்ணீரில் பாசி பிடிப்பதும் தவிர்க்கப்படுகிறது.

கான்கிரீட் தண்ணீர்த் தொட்டிகள் போலன்றி இவை ரெடி மேடாகக் கிடைக்கின்றன.

200 லிட்டர் முதல் 20,000 லிட்டர் வரை கொள்ளளவு கொண்ட தொட்டிகள் விற்பனைக்கு வருகின்றன. 200 லிட்டர் தொட்டி சுமார் 700 ரூபாய் விலை.

தகவல்: ஜூலி

எங்களைப் பாறையோரம் ஒதுங்க வைத்தார். ஒரு சின்ன என்ஜினும், அதன் பின்னால் நான்கைந்து திறந்த பெட்டிகளும் ஊர்ந்து வந்தன. அந்தப் பெட்டிகளில் தங்கப் பாறைகள் குவிந்து கிடந்தன. எங்களை அந்தப் பாறைகள் வசீகரிக்கவே இல்லை.

"ஒரு டன் பாறைக்கு ஐந்து கிராமும் கிடைக்கும், இல்லை ஐந்து கிலோவும் கிடைக்கும்; சொல்ல முடியாது. ஒரு சமயத்தில் ஒரே இடத்தில் 42 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம், பாளம் பாளமாகக் கிடைத்தது. நமக்கு முன்னால் இந்தச் சுரங்கத்தைத் தோண்டிய பிரிட்டிஷ்காரர்கள் நிறையத் தங்கத்தை அவர்கள் தேசத்திற்கு எடுத்துச் சென்று விட்டார்கள். இந்தப் பாறைகளை மேலே கொண்டு சென்று மில்லில் அரைத்து அங்கே அவற்றிலிருந்து தங்கத்தைப் பிரிக்கிறோம்."


அங்கங்கே வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் நாங்கள் திரும்பி மேலே போவதை ஏக்கத்துடன் பார்த்தார்கள். வேலை நேரம் முடியுமட்டும் அவர்களால் வெளியே வர முடியாதே! சிலர் கையசைத்தார்கள். உடம்பெல்லாம் புழுதி படிந்திருந்த போதிலும் அந்த உள்ளங்களில் இன்னும் புழுதி படியவில்லை என்பதை அவர்களின் சிரிப்பு உணர்த்தியது.

எங்களுடன் ஒரு சில தொழிலாளர்கள் அவர்களின் கடமைக்காலம் முடிந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். மேலே வந்ததும் அவர்களை செக்யூரிட்டி ஆசாமிகள் அலசினார்கள். தலைமுடியை உதறிப் பார்த்தார்கள்; சட்டை, பான்ட், பனியன், ஜட்டி— என்று எல்லாவற்றையும் களைந்து பார்த்த பிறகுதான் வெளியேற அனுமதித்தார்கள்.

தொழிலாளர்கள் வெளியேறி, அன்றையப் பொழுது உயிருடன் வெளி வந்தமைக்காக ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

அந்தத் தொழிலாளர்களின் வீடுகளுக்குச் சென்று பார்த்தோம். அந்த இல்லங்களில் வாழும் பெண்களின் காதில், கழுத்தில், மூக்கில் — எங்குமே பொட்டுத் தங்கம் இல்லை!


துப்பாக்கியிலிருந்து தோட்டாவுக்குப் பதிலா சமாதானப் புறாக்கள் கிளம்புது! பலே!
புதிய சமாதானத் திட்டம்
பிரபாகரன்



வி.பி.சிங்
நேர்மை
சத்தியம்
அந்நிய வங்கிக் கணக்கு ஊழல்
போஃபர்ஸ் ஊழல்
சப்மெரின் ஊழல்


உள் நாட்டுச் சதி
வெளி நாட்டுச் சதி
இந்திய மக்கள்
ஐயையோ!... உள் நாட்டுச் சதியும் வெளி நாட்டுச் சதியும் சேர்ந்து ஆட்சிக் கவிழ்ப்புச் சதி நடக்குது!
பயப்படுங்க.. பயப்படுங்க!



கல்கி

1987 ஆகஸ்ட் 2
மலர் 46 இதழ் 1
பிரபவ ஆடி 17



வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம்; விடையளிக்கிறோம்!

இந்திரா காந்தி மறைந்த கையோடு பிரதமர் பதவிக்கு ராஜீவ் காந்தியே ஏற்றவர் எனக் கருதி, பதவிப் பிரமாணம் செய்து வைத்த ஜெயில்சிங், சமீப காலமாகப் பாரதப் பிரதமருடன் கருத்து மாறுபட்டு மோத நேர்ந்தது துரதிர்ஷ்டவசமானது. 'பதவி முடியும் தறுவாயில்தான் நமது ஜனாதிபதிகளுக்குத் திடீர் ஞானோதயம் ஏற்படும்' என்று கிண்டலாகப் பேசப்படுவது ஒருபுறமிருக்க, ராஜீவ் காந்தியின் சமீபத்திய போக்குத்தான் ஜெயில்சிங்குக்கு வருத்தத்தை அளித்துத் தட்டிக் கேட்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது என்பதையும் மறுப்பதற்கில்லை. எனவே, 'இத்தனை நாள் ஏன் சும்மா இருந்தார்?' என்று ஏளனம் செய்வதைவிட, கேட்க வேண்டிய சமயத்தில் தயங்காமல் தட்டிக் கேட்டாரே என்பதற்காக மகிழ வேண்டும். இப்படி நடந்து கொண்டதன் மூலம், பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் உறவுமுறை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிப் பல அறிஞர்களும் அலசி ஆராய்ந்து தங்கள் கருத்துக்களை வெளியிட வழி வகுத்தார் ஜெயில்சிங். இதற்காக இந்திய ஜனநாயகம் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறது. 'ஜனாதிபதிக்கு எந்தத் தகவலையும் அறிந்து கொள்ள உரிமை இருக்கிறது; அவர் கேட்கிற தகவலை மட்டுமின்றி, கேட்காத தகவல்களைக் கூட அவ்வப்போது தந்து கொண்டிருக்க வேண்டிய 'கடமை பிரதமருக்கு இருக்கிறது' என்பதை ஜெயில்சிங் உணர்த்தியிருக்கிறார். இதனைப் பிரதமர் முழுமையாக ஒப்புக் கொண்டு விட்டதாகத் தெரியவில்லை என்றாலும் ஜனாதிபதியை அலட்சியப்படுத்தக் கூடாது; அப்படி அலட்சியப்படுத்துவது ஆபத்தாக முடியும் என்ற அளவுக்காவது புரிந்து கொண்டு பணிந்து போயிருக்கிறார். இதுவே ஜெயில்சிங்குக்குக் கணிசமான வெற்றிதான்.

இப்படி ராஜீவுடன் மல்லுக்கு நின்ற ஜெயில்சிங், 'ராஜீவ் மீது வழக்குத் தொடர அனுமதிக்க வேண்டும்' என்ற கோரிக்கையை நிராகரித்துத் தமது வன்மமில்லாத, நடுநிலை உள்ளத்தை நமக்குக் காட்டியிருக்கிறார். பயங்கரமான ஊழல் குற்றச்சாட்டுக்கள் பல சுமத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ராஜீவ் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதற்கான வலுவான சாட்சியம் ஏதும் ஜனாதிபதிக்குக் கிடைக்காத நிலையில் அவர் வேறு விதமாக முடிவெடுத்திருந்தால் ஜனாதிபதி பதவியின் கண்ணியமும் நாட்டின் கௌரவமும் பாதிக்கப்பட்டிருக்கும்.

விடுதலைப் போராட்ட வீரரும் தேச பக்தருமான ஜெயில்சிங்குக்குப் பிரியா விடை கொடுத்து அனுப்பும் நாம், ஜனாதிபதி தேர்தலில் தோல்வி நிச்சயம் என்பதை முன்கூட்டியே உணர்ந்திருந்தும் ஜனநாயக மரபுகளைக் காக்க, வெங்கடராமனை எதிர்த்துப் போட்டியிட முன்வந்த கிருஷ்ணய்யருக்கு வாழ்த்துத் தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். கிருஷ்ணய்யரிடம் சில குறைகளைக் கண்டவர் இருந்தனர் என்றால், வெங்கடராமனிடமும் குறைகள் இல்லாமல் போகவில்லை என்பதை இந்தத் தேர்தலின் போது நடந்த வாதப் பிரதிவாதங்கள் நமக்கு உணர்த்தின. குறைகளே இல்லாத மனிதன் யார்? ஆனால் எப்படியும் தோற்கத்தானே போகிறோம் என்று அலட்சியமாக இராமல், கடுமையாக உழைத்து, அற்புதமாகப் பிரசாரம் செய்த கிருஷ்ணய்யரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். டி. வி. யில் நேரம் ஒதுக்க வேண்டும் என்று போராடியது மட்டுமின்றி, ஒவ்வொரு மாநிலத் தலைநகரிலும் அவர் செய்த பிரசங்கங்கள், அளித்த பேட்டிகள் ஆகியவற்றின் தொகுப்பு, எதிர்காலத்தில் பதவிக்கு வரக் கூடிய எத்தனையோ ஜனாதிபதிகளுக்கும் பிரதமர்களுக்கும் வழிகாட்டும் தகுதி பெற்ற, பேரிலக்கியங்கள். கடைசியாக, வெற்றி பெற்ற ஆர். விக்கும் பிரதமருக்கும் அவர் எழுதிய கடிதங்கள், காலம் கடந்து நிற்கக் கூடிய பொக்கிஷங்கள்.

ஓர் இக்கட்டான நிலையில் பதவி ஏற்றுள்ள புதிய ஜனாதிபதி ஆர். வி.யை வரவேற்று மகிழும்போது காமராஜரால் உருவாக்கப்பட்ட அவர், தமிழகத்தில் தொழிலமைச்சராக இருந்த சமயம் நிகழ்த்திய சாதனைகள்தான் நமக்கு முதலில் நினைவுக்கு வரும். ஆனால் வெகு சீக்கிரமே ஆர். வி., தமிழகத் தலைவர் நிலையிலிருந்து தேசத் தலைவர்களுள் ஒருவராக உயர்ந்தார். கறுப்புப் பணப் பத்திரம் வழங்கிய தருணம் உள்பட, நாம் அவருடன் கருத்து மாறுபாடு கொண்ட சந்தர்ப்பங்கள் பல உண்டு. ஆனாலும் தலைவரைப் போற்றுகிற அவரது குணமும் கட்சிப் பற்றும் நாடறிந்தவை. அவரது ஆழ்ந்த ஞானமும் பழுத்த அனுபவமும் அவருக்குத் துணை நின்று, அவர் இனி விசுவாசத்துடன் இருக்க வேண்டியது நாட்டுக்கும் அரசியல் சாசனத்துக்கும் மட்டுமே; எந்தத் தனி மனிதருக்கோ அல்லது கட்சிக்கோ அல்ல என்பதை அவருக்கு உணர்த்தும் என்று நம்புகிறோம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1987 முடிவு

நடுவர்கள்:

* சிவபாதசுந்தரம்



* ஜோதிர்லதா கிரிஜா



* வையவன்



* கோமல் சுவாமிநாதன்



நடுவர்கள் கூட்டம் 19.7.87 அன்று கூடிப் பின்வரும் சிறுகதைகளைப் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுத்தது:

ரூ. 1500 முதல் பரிசு:

பின்னணி

எழுதியவர்: பாரதி வீரராகவன்,
மொரப்பூர் போஸ்டு,
அரூர் தாலுகா,
தருமபுரி மாவட்டம்
— 635 305.

ரூ. 750 இரண்டாம் பரிசு:

மணிமணியாய் ஐம்பது இளைஞர்கள்

எழுதியவர்: தமிழினியன்
E2/94, குடியிருப்புப் பகுதி,
பாய்லர் தொழிற்சாலை,
திருச்சி — 620 014.

ரூ. 375 மூன்றாம் பரிசு (இரு கதைகளுக்கு):

அம்மா

எழுதியவர்: ஆர். ஜெயலக்ஷ்மி (அறிமுக எழுத்தாளர்)
101, மகரிஷி கார்வே சாலை, பம்பாய் — 20.

அடப்பாவிங்களா!

எழுதியவர்: "அபூர்வன்" — ரா. ராஜா (அறிமுக எழுத்தாளர்)
தொலைபேசி நிலையம்,
கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்,
—643 217.

பிரசுரத்துக்கு ஏற்கப்பட்டுள்ள கதைகளின் பட்டியல் அடுத்த இதழில் இடம் பெறும்.

புகைப்படங்கள்: சுபா ரவிசங்கர்



நீந்த நிழல் வேண்டும்!

வரதர்

1

ஜன்னல் குறட்டில் உட்கார்ந்திருந்த ஜயசீலன் வெளியே தெரிந்த உலகத்தை வெறித்துப் பார்த்தான். கடந்த எத்தனையோ மாதங்களாகத் தான் பார்த்து வரும் இந்தக் காட்சியில் எந்தவித மாறுதலும் இல்லை என்று நினைவுக்கு வந்தது. நேற்று போல் இன்றும் இன்றுபோல் நாளையுமாக ஒரு சங்கிலித் தொடராகப் போய்விடுமோ என்கிற பயம் கூட இப்பொழுதெல்லாம் எழாத அளவுக்கு மனத்துக்கு ஞானமேற்பட்டுவிட்டது.

நாளையைப் பற்றிய எதிர்பார்ப்புப் போய் வெகு நாட்கள் ஆகிவிட்டன. இன்றுதான் — இந்தத் தருணம் தான் நிஜம்……

''நீ மட்டும் ஏன் இங்கேயே இருக்கே? தமிழ்நாட்டுக்கு ஏன் தப்பிச்சுக்கிட்டுப் போகல்லே?''

அவன் உலுக்கப்பட்டவன் போல் சுயநினைவுக்கு வந்து உள்பக்கம் திரும்பினான்.

தரையில், சுவரில் சாய்ந்த நிலையில் அமர்ந்து அவனை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் அந்தப் பொடியன் பிரபு. தில்லியிலிருந்து வேலை மெனக்கெட்டு இங்கு வந்து சேர்ந்திருக்கும் பத்திரிகையாளன். தமிழ் பேசுகிறான். லோலோ என்று யாழ்ப்பாண வீதிகளில் பேயாய் அலைந்து கொண்டிருந்த இவனை வீட்டுக்கு அழைத்து வந்தது தப்பாகப் போய்விட்டது. இவனும் இவனது கேள்விகளும்! அதற்கெல்லாம் பதில் சொல்லி எனக்கு என்ன ஆகப் போகிறது?

''ஓம், போக இல்லே'' என்றான் அசுவாரஸ்யத்துடன்.

''அதான் ஏன் இல்லேங்கறேன்?''

''அட, போக இல்லே அவ்வளவுதான்! நீர் ஏன் துளைக்கிறீர்?''

பிரபுவின் அதரங்களில் இளநகை அரும்பிற்று. வலக்கையைப் பரவலாக வீசி,

''நாம் உம்மைத் துளைக்கவில்லை!'' என்றான் நாடக பாணியில்.


''இதப்பார். நீ எதுவுமே சொல்லல்லேன்னா எனக்கு எழுத விஷயம் எப்படிக் கிடைக்கும்?'' என்றான்.

''ஓ. உமக்கு விஷயம் சொல்ல கன பேர் கிடைப்பார்கள் வெளியிலே!''

''கன பேரா? சில பேர் கூட இல்லே! எல்லாரும் பேசவே பயப்படறாங்க. பேசினாலும் பாதி விஷயம் புரிய மாட்டேங்குது. உன்னோடு இந்த இரண்டு நாட்கள் இருந்ததிலே கொஞ்சம் புரிஞ்சுக்கறேன். ஆனா, நீ பலே ஆள். எதைக் கேட்டாலும் சரியா பதில் சொல்ல மாட்டேங்கறே. நீ ஒரு விடுதலைப்புலியா?''

''ஓ!''

'''ஓ'ன்னு ஏன் சொல்றே?''



'''சீ'ன்னு இல்லேண்டு அர்த்தம்.''

''ஓ! அப்ப நீ வேற ஏதாவது இயக்கத்தைச் சேர்ந்தவனு?''

ஜயசீலன் ஜன்னலுக்கு வெளியே மீண்டும் பார்வையைப் பதித்தான்.

''சேர்ந்திருந்தேன். இப்ப இல்லே.''

பிரபு நிமிர்ந்து உட்கார்ந்தான். ''ஏன்?''

ஜயசீலன் சுரீரென்று அவனைத் திரும்பிப் பார்த்தான்.

''நா ஏன் உமக்கு இதையெல்லாம் கதைக்கணும்? இதென்ன கரைச்சல் ஆண்டவனே?''

பிரபு அவனை ஆழமாகப் பார்த்துச் சுரணையில்லாமல் சிரித்தான்.

''நீ எனக்கு எதுவும் சொல்ல வேண்டாம். உனக்கு நா பிரச்னை யாவும் இருக்க விரும்பல்லே. மூணாவது வீடு ஒண்ணு இருக்கே, முன் சுவரெல்லாம் இடிஞ்சு, அந்த வீட்டிலே சுமார் உன் வயசுக் காரன் ஒருத்தனை முந்தா நாள் பார்த்தேன். அவனோடு பேசு வம்னு பார்த்தா பிறகு ஆளே கிடைக்கல்லே.''

''கிடைக்க மாட்டான் இனி'' என்றான் ஜயசீலன், வெட்ட வெளியைப் பார்த்து. ''ஆமி கொண்டுட்டுப் போயிட்டது.''

''ஐய்யய்யோ, எப்ப?

''முந்தாநாள்தான், ராவுலே.''
''என்ன காரணம்?''
''தமிழன் எண்ட ஒரே காரணம், சரியா?''
''இயக்கத்தைச் சேர்ந்தவனு?''
''இ.''
''பின்னே ஏன்?''
ஜயசீலனுக்குச் சுருசுருவென்று கோபம் வந்தது.
''தமிழன் எண்ட காரணம்னு நா கதைக்க இல்லே? இண்டைய நிலேயிலே ஒண்ணு — இயக்கம்மார் பொடியன்களைக் கொண் டிட்டுப்போகணும். இல்லே ஆமி கொண்டுட்டுப் போகணும்— சரியா? ஆமிக்குக் கணக்கு ஒப்பிக்கணும். இத்தனே பயங்கர வாதிகளைப் பிடிச்சம்னு, எல்லாப் பொடியன்களையும் இஷ்டத் துக்கு வாரி, கொண்டு போகும்!''

பிரபு சற்று நேரம் பதில் சொல்லாமல் தன் புத்தகத்தில் எதையோ கிறுக்கிக் கொண்டிருந்தான்.

ஜயசீலன் அலுப்புடன் வெளியே பார்த்தான். இவர்கள் எல்லாம் எதற்காக வேலே மெனக்கெட்டு உயிரையும் பணயம் வைத்துக் கொண்டு இங்கு வருகிறார்கள்? இவர்களுடைய எழுத் தினால் ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கிறதோ? இரண்டு நாட்கள் இங்கு தங்கியதால் இங்கிருக்கும் நிலேமை என்ன புரியப் போகிறது?''



''இப்ப அந்தப் பையனை ராணுவம் என்ன செய்யும்?''

''என்ன?'' என்றான் அவன் திடுக்கிட்டு. ''ஓ. அந்தப் பொடியனையா? என்ன வேணும் ஞாலும் செய்யும். தலைகீழாக் கட்டி வெச்சு உதைக்கும். 'நீ கொட்டியாவா'ன்னு அடிக்கும்.''

''அப்படீன்னா?''

'''நீ விடுதலைப் புலியா?'ன்னு அர்த்தம்.

''இல்லேன்னா?''

''ஓம்'னு சொல்ற வரை அடிக்கும்.''

பிரபு மறுபடியும் ஏதோ கிறுக்கினான் புத்தகத்தில்.

ஜயசிலன் குறட்டிலிருந்து இறங்கினான்.

''டீ வேணுமா?'' என்றான்.

தீவிர யோசனையுடனேயே அவனைப் பார்த்து, 'ஓம்' என்றான் பிரபு, மெலிதாகப் புன்னகைபுரிந்தபடி.

ஜயசிலனின் முகத்தில் கூடச் சிறிது மலர்ச்சி ஏற்பட்டது போல் தோன்றியது.

சமையலறைக்குச் சென்று கெரஸின் ஸ்டவ்வைப் பற்ற வைத்துத் தேயிலை டப்பாவைத் திறந்தான். சிறிதளவே தூள் இருந்தது. இன்னும் ஒருவேளைக்கு மேல் காணாது. இந்த இந்தியன் இன்னும் எத்தனை நாட்களுக்கு இங்கு உட்காரப் போகிறானோ? பாத்திரத்தில் நீரை ஊற்றி அடுப்பில் ஏற்றுகையில் ''ஏய், ஜயசிலன், இங்கே வா!'' என்றான் பிரபு.

பழகிப் போய்விட்ட பாய்ச்சலுடன் ஜயசிலன் விரைந்தான். ''பார், அந்தப் பையன் திரும்பி வந்துட்டான்!'' ஜன்னல் வழியே தெரிந்த காட்சியில் ஜயசிலனின் முகத்தில் மிக லேசாக இளக்கம் கண்டது.

பையனின் அம்மா நடுத்தெருவிலேயே நின்று அவனை அணைத்து ஏதோ சொல்லிச் சொல்லி அழுது கொண்டிருந்தாள்.

''வரதநாதன் அதிர்ஷ்டக்காரன்தான்!''

பிரபு தன் கைப்பையை எடுத்துக்கொண்டு ''வா, என்ன நடந்ததுன்னு கேட்டுட்டு வருவோம்'' என்றான் சுறுசுறுப்பாக.

''டீ?''

''இப்ப வேண்டாம்.''

ஜயசிலன் ஸ்டவ்வை அணைத்துவிட்டு அவனுடன் கிளம்பினான்.

வரதநாதனின் முகம் சோர்ந்திருந்தது. பீதி குடிகொண்டிருந்தது. வார்த்தைகள் வெளியில் வராமல் கண்களில் துளித்த நீர், தொண்டையை அடைத்தாற்போல் மென்று விழுங்கினான். அவனுடைய அம்மாவும் மற்றவர்களும் அவனைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் விட்டார்கள்.

''அதான் வந்துட்டான் இல்லே? ஏன் அழுவுறீங்க?'' என்றான் பிரபு. ''என்ன நடந்தது வரதநாதன்?''

வரதநாதன் தலையைக் குனிந்து கொண்டு நிற்கையில்....

''நகக் கண்ணுக்கள்ளே ஊசி ஏத்திஇருக்காங்கள். சோறு கொடுக்காம கடத்தண்ணியைக் குடிக்கக் கொடுத்திருக்காங்கள்'' என்றாள் அம்மாள்.

''உயிர் தப்பி 'வழுக்கிட்டு' வந்தது பெரிசு'' என்று ஜயசிலன் முணுமுணுத்தான்.

''எப்படி விட்டாங்க?'' என்றான் பிரபு.

''நாலு தலையாட்டியை என் முன்னாலே நிறுத்தி, 'இவன் கொட்டியாவா?'ன்னு கேட்டாங்கள். தலையாட்டி 'சி'ன்னு தலையாட்டினதும் விட்டுட்டாங்கள்'' என்றான் வரதநாதன்.

''அது என்ன தலையாட்டி?''

''பிடிச்சு வெச்சிருக்கிற இயக்கக்காரங்களை முகத்திலே ஒரு கோணியை மாட்டிக் கண்ணுக்கு மட்டும் துவாரம் போட்டு அழைச்சு வருவாங்க. அவங்ககிட்ட கேட்கிற கேள்விக்குத் தலையை ஆட்டிப் பதில்சொல்லணும். அதுக்குப் பேரு தலையாட்டி.''

நிலைக்குத்திய பார்வையுடன் ஜயசிலன் உட்கார்ந்திருந்தான்.

வரதநாதனின் அம்மா அவன் தோளில் கைவைத்து மிருதுவாகச் சொன்னாள்.

''சீலியாவும் வந்துடுவாத் தம்பி''

''யாரு சீலியா?'' என்றான் பிரபு வெடுக்கென்று.

ஜயசிலன் சட்டென்று நிமிர்ந்தான். ''இது எண்டை சொந்த விஷயம், சரியா?'' என்றான் பிரபுவைப் பார்த்து. பிறகு அந்த அம்மாளிடம்,

''எப்படியாவது 'போட்'டுப் பிடிச்சு ராமேசுவரம் போயிடுங்கள். ஆமி ஜாஃப்னாவைக் கைப்பற்றப் போகிறதாம். இயக்கக்காரங்களுக்குத் தெரியாமல் ரகசியமாப் போகணும்!'' என்றான்.

''ஓமய்யா, இனிமேல் இங்கே இருக்கவே இயலாது.....

திடீரென்று ஜயசிலனின் உடல் விறைத்துக் கொண்டது. செவிகள் கூர்மையாயின. கண்கள் பீதியில் லேசாக விரிந்தன.

''ஓ, சோப்பர்! கிடங்குக்கு ஓடுங்கள்'' என்றான் அவசரமாக. பிரபுவின் கையை இழுத்துக் கொண்டு மற்றவர் தொடரக் கொல்லைப் பக்கம் ஓடினான்.

வானத்தில் ஹெலிகாப்டர்களின் சப்தம் தொலைவில் கேட்டது.

நிலத்தில் இலைச் சருகுகளால் மூடப்பட்டிருந்த கிடங்குக்குள் எல்லாரும் அவசரமாக நுழைந்தார்கள். ஐந்து பேர்களுக்கு அதில் இடம் போதவில்லை. கைப்பையையும் வைத்துக் கொண்டிருந்த பிரபுவுக்கு மூச்சு முட்டிற்று. ''எல்லார் வீட்டிலேயும் இப்படிக் கிடங்குத் தோண்டியிருக்காங்களா?'' என்றான்.

''ஓம்'' என்ற ஜயசிலன், வெளியே எட்டிப் பார்த்து,

''நம்ம வீட்டுக் கிடங்குக்குப் போவம், சிக்கிரம்'' என்று அவன் கையைப் பிடித்து வெளியில் வந்தான். இருவரும் வேகமாக ஓடிக் கிடங்கை அடைந்து பதுங்கினார்கள்.

'சோப்பர்'கள் தலைக்கு நேர் மேலாகப் பறப்பது போல் பயங்கர சப்தம் கேட்டது. மிகவும் அருகில் வெடி ஓசை கேட்டது.

பிரபுவின் முகத்தில் தெரிந்த பரபரப்பையும் பீதியையும் பார்க்க ஜயசிலனுக்குப் பரி



தாபமாக இருந்தது.

இப்படிப்பட்ட இக்கட்டில் மாட்டிக் கொள்ள இவனுக்கு ஏன் தலையிலெழுத்து? இவன் இங்கு செத்துத் தொலைத்தான் என்றால் யாருக்கு லாபம்?'

'சோப்பரின்' சப்தம் சற்று அடங்கி மெலிந்தது. இருவரும் வெளியே வந்தார்கள். சற்றுத் தொலைவில் இரண்டு வீடுகள் உருக்குலைந்து விழுந்திருந்தன, குண்டு வீச்சில் — நெருப்பும், புகையும், புழுதி மண்டலமுமாய்.

''ஓ மைகாட்!'' என்றான் பிரபு அவசரமாகத் தன் காமெராவை வெளியில் எடுத்தபடி.

ஒரு நிச்சலனப் பார்வையுடன் ஜயசீலன் நின்றான். நல்ல வேளையாக இரண்டு வீடுகளிலும் ஆட்கள் இல்லை. சென்ற வருஷமே இந்தியாவுக்குப் போய்விட்டார்கள். நேற்று விடுதலைப் புலிகள் ஒரு ராணுவ முகாமில் வெடி வைத்தார்கள். அதற்குப் பதில் அடி இது. அப்பாவித் தமிழன்தான் அகப்பட்டுக் கொள்வான் இடையில்....

மறுபடி சோப்பரின் சப்தம் கேட்டது.

''படம் எடுத்தது போதும் வாரீர்!'' என்றான் ஜயசீலன் சப்தமாக.

மளமளவென்று படம் எடுத்த பிரபுவின் முகத்தில் ஒரு பளபளப்புத் தெரிந்தது.

''இந்த மாதிரி ஓர் அருமையான சந்தர்ப்பத்திலே வீட்டிலே உட்கார்ந்திருக்கிறதாவது?''

பிரபு சோப்பரின் சப்தம் வந்த எதிர்த் திசையில் ஓட ஆரம்பித்தான்.

''ஏய், போக வேண்டாம்! ஆபத்து!'' என்று கத்தியபடி ஜயசீலன் அவனைத் தொடர்ந்து ஓடினான்.

அவன் கத்தக் கத்தக் காதில் விழாதவனைப் போல, அங்கங்கே நின்று காமெராவை வேகமாக முடுக்கித் தொடர்ந்து ஓடினான் பிரபு. ஜயசீலன் ஆத்திரத்துடன் பாய்ந்து அவனைப் பிடித்து நிறுத்தினான்.

''என்னக்கிறுக்குத்தனம் இது! ஆமிசெல் லடிக்குது. நீர் இப்படி ஓடுறீர்!''

நெற்றியைத் துடைத்தபடியே பிரபு சிரித்தான்.

''இது என் பிழைப்புப்பா. போட்டோ எடுத்துப் போட்டாத்தான் எழுதற கதைக்கு சுவாரஸ்யம் வரும். நீயோ உன் கதையும் சொல்ல மாட்டேங்கறே.''

ஒதுக்குப்புறத்துக்கு அவனைத் தள்ளிக் கொண்டு ஜயசீலன் முணுமுணுத்தான். ''இப்ப எல்லாத் தமிழருக்கும் ஒரே சரித்திரம் தான். என்டுடையது வித்தியாசமானதில்லை.''

''அதனாலேதான் கேக்கறேன். உயிர் தப்பி இந்தியா போனா எழுதலாம்.''

''முதலில் இப்ப உயிர் தப்பணும். சரியா?''

''சரி'' என்று பிரபு சொல்வதற்குள் ஒரு லாரி வரும் சப்தம் கேட்டது. அவர்கள் மீண்டும் தலைதெறிக்க ஓட ஆரம்பித்தார்கள்.

(தொடரும்)

சின்னக்





ஒரு ஞாயிறு மாலை சித்ராவை அவரது வீட்டில் சந்தித்தபோது, மலையாள உச்சரிப்புடன் ஆங்கிலத்திலும் தமிழிலும் மணிப்பிரவாளமாகப் பேசினார். அவரை அறியாமல் மலையாள வார்த்தைகளும் உரையாடலில் கலந்து வந்தன. எல்லாவற்றையும் விட ஆச்சரியம், ஆறரை கட்டைக்கும் மேலான சுருதியில் பாடும்போது அவர் குரலில் இருக்கும் இனிமை அவர் பேச்சுக் குரலில் இல்லாமல் போனதுதான்!

நிருபர்: குரல் வளம் என்பது இயற்கையாகவே அமைகிற விஷயமா?

சித்ரா: நிச்சயமாய் இயற்கையின் வரப்பிரசாதம்தான் அது! அது பிறவியிலேயே இருக்க வேண்டும். முறையான பயிற்சி மூலமாய் மெருகூட்டிக் கொள்ள முடியுமே தவிர, குரல் வளத்தைப் புதிதாக ஏற்படுத்திக் கொள்ள முடியாது. கடுமையான பயிற்சி, குடும்பப்பாரம்பரியம் — இவற்றுக்கும் குரல் வளத்துக்கும் தொடர்பு உண்டு என்பது என் கருத்து.

நிருபர்: அப்படியெனில் உங்கள் குடும்பம் இசைக் குடும்பமா?

சித்ரா: ஆமாம்! என் அப்பா கிருஷ்ணன் நாயர் ஆல் இந்தியா ரேடியோ, டெலிவிஷன் ஆகியவற்றில் நிறைய இசை நிகழ்ச்சிகள் வழங்கியவர். என் தாயும் வீணை வாசிப்பார். நன்றாய்ப் பாடுவார். என் சகோதரி பீனா சில மலையாளப் படங்களில் பின்னணி பாடியுள்ளார். ஒரு சகோதரன் நன்றாய் கிடார் வாசிப்பான். கேரளாவில் புரொபசர் ஒம்மணக் குட்டி என்பவர்தான் என் குரு. என் அம்மாவும் எனக்கு நிறைய பாட்டுகள் சொல்லிக் கொடுத்திருக்கிறார். திருவனந்தபுரத்தில் ஸ்கூலில் படித்தபோதே

குயில் சித்ரா

நான் நன்றாகப் பாடிப் பெயர் பெற்றிருந்தேன். ஒன்பதாம் வகுப்பிலிருந்து பி.ஏ. டிகிரி முடிக்கும்வரை இசைத் திறமைக்கான அரசாங்க ஸ்காலர்ஷிப் எனக்குக் கிடைத்தது. காலேஜிலும் பல பரிசுகள் வாங்கினேன்.

நிருபர்: உங்களுக்கு முதல் சினிமா வாய்ப்பு எப்படிக் கிடைத்தது?

சித்ரா: என் குருவின் சகோதரர் எம்.ஜி. ராதாகிருஷ்ணனுக்கு சினிமா உலகில் பலரைத் தெரியும். என் அக்காவும் பின்னணி பாடியிருக்கிறார். எனக்கு நல்ல திறமையும் இருந்தது. இதனால் சினிமாவில் நுழைவது கஷ்டமான விஷயமாய் இல்லை. ஆனால் திறமை மட்டுமே இருந்தாலும் சினிமா உலகில் நுழைந்துவிட முடியாது. கூடவே அதிர்ஷ்டமும் வேண்டும். அந்த அதிர்ஷ்டம் தான் எனக்கு முதல் முறையே ஜேசுதாஸுடன் இணைந்து பாட வாய்ப்பளித்தது!

நிருபர்: அப்போது எப்படி உணர்ந்தீர்கள்?

சித்ரா: ரொம்ப பயமாகத்தான் இருந்தது. ஆனால் ஜேசுதாஸ் மிகவும் சகஜமாக இருந்தார். என் பயத்தைப் போக்கி, ஊக்கமளித்தார்.

நிருபர்: இளையராஜாவின் அறிமுகம் எப்படிக் கிடைத்தது?

சித்ரா: இயக்குனர் பாசில் தமிழில் 'பூவே பூச்சூட வா' எடுக்க நினைத்தபோது, அதன் மலையாள மூலப் படத்தை இளையராஜாவுக்குப் போட்டுக் காட்டினார். பாட்டுகளைக் கேட்ட இளைய ராஜா என்னைப் பற்றி விசாரித்துவிட்டு திருவனந்தபுரத்திலிருந்தென்னை வரவழைத்தார்.

நிருபர்: அப்போதும் ரொம்பப் பயமாக இருந்ததா?

சித்ரா: ஆமாம்...! என்னைப் பாடிக் காட்டச் சொன்னார். சில கீர்த்தனைகளைப் பாடிக் காட்டினேன். அவற்றில் இருந்த தவறுகளைச் சுட்டிக் காட்டினார். 'சரி! போய் விட்டு வா' என்றார். வாய்ப்புத் தருகிறேன்; தரவில்லை என்று ஒன்றுமே சொல்லாததால் எனக்கு ஒரே சஸ்பென்ஸ். சஸ்பென்ஸுடனே திருவனந்தபுரம் திரும்பிப் போனேன். 'என்ன ஆயிற்று?' என்று ஆர்வத்துடன் கேட்டவர்களுக்குப் பதில் சொல்ல முடியாத தர்மசங்கடமான நிலைமை. இரண்டு நாள் கழித்து, உடனே சென்னை வரச் சொல்லித் தகவல் வந்தது. புறப்பட்டு வந்தேன். இளைய ராஜாவின் கம்பீரமான இசையமைப்பில் நான் பாடிய முதல் பாட்டு 'பூஜைக்கேற்ற பூவிது.'

நிருபர்: எஸ். ஜானகிக்குப் போட்டியாக இன்னொருவரை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணத்தில்தான் இளையராஜா உங்களை அறிமுகப்படுத்தினார் என்று ஒரு சமயத்தில் சொல்லப்பட்டதே...?

சித்ரா: (திகைப்பு) அப்படிச் சொல்லப் பட்டதே எனக்குத் தெரியாது! வீணான கற்பனைகள். 'எஸ். ஜானகியின் பாட்டுக்கள் ரெஃபரன்ஸ் புத்தகம் மாதிரி. நிறைய அவருடைய பாட்டுக்களைக் கேள்' என்று இளையராஜாவே என்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறார். 'குரலில் ஏற்ற இறக்கங்கள் சீராக இருப்பதைத் துல்லியமாய் உணர்வாய். மிக உபயோகமாக இருக்கும்' என்பார். நானும் எஸ். ஜானகியின் பாடல்களை நிறையக் கேட்பேன். எனக்கு அவர் இன்ஸ்பிரேஷன் என்று சொல்லலாம். போன நவராத்திரி சமயத்தில்கூட அவர் வீட்டுக்குப் போயிருந்தேன். பாட்டுப் பாடினேன். வெற்றிலைப் பாக்குக் கொடுத்தார். நான் அவரது குடும்பத்தில் ஒருத்தி மாதிரி! அப்படிப்பட்டவருக்குப் போட்டியாய் நானா...? நோ.... நோ.... நெவர்!

நிருபர்: சினிமாவில் நடிக்கிற நடிக நடிகைகளுக்கு ஏற்பக் குரலை மாற்றிப் பாட வேண்டாமா? இப்போதுள்ள பின்னணிப் பாடகர்கள் அப்படிச் செய்வதில்லையே?

சித்ரா: பாத்திரங்களுக்கோ, நடிகைகளுக்கோ ஏற்பக் குரலை மாற்றிக் கொள்வது எனக்கு உடன்பாடான விஷயம் இல்லை; எனக்கு அப்படிப் பாடவும் வராது. குழந்தை பாட வேண்டிய பாட்டானால், குரலை மாற்றிப் பாடுவதில் தப்பில்லை. இதிலே இன்னொன்றும் கவனிக்கப்பட வேண்டும். இப்போதெல்லாம் பெரும்பாலான நடிகைகளுக்கு டப்பிங் வாய்ஸ்தானே! அவர்கள் எல்லாருக்கும் குரல் கொடுப்பதென்னவோ ஒரு சில டப்பிங் ஆர்ட்டிஸ்டுகள். அப்படி இருக்கும்போது, பாத்திரங்களுக்கேற்பவும், பர்சனாலிடிகளுக்கு ஏற்பவும் பாடுவது என்பதே அர்த்தமற்றுப் போய்விடவில்லையா?

நிருபர்: நீங்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்று நான்கு மொழிகளில் பாடுகிறீர்கள். இந்த நான்கு மொழிகளையும் உங்களால் படிக்க முடியுமா?

சித்ரா: மலையாளம் நன்றாகத் தெரியும்.



உதிரிப் பூக்கள்

- மெல்லிசை மற்றும் கர்நாடக இசை கேஸட்டுகளைச் சேர்ப்பதில் சித்ராவுக்கு ஆர்வம் அதிகம். சுமார் 500 கேஸட்கள் இவரிடமிருக்கின்றன. பாதி சென்னையிலும், மீதி திருவனந்தபுரத்திலும் உள்ளன. ரொம்பக் கஷ்டப்பட்டுக் கிடைத்தது: ஆஷா போஸ்லே — குலாம் அலி வழங்கிய கஜல் கேஸட்.

- தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஆகிய நான்கு மொழிகளிலுமாகச் சுமார் 500 படங்களில் 750 பாடல்களுக்கும் அதிகமாய்ப் பாடிவிட்டார் இவர்.

- சித்ராவுக்கு ரசிகர்களிடமிருந்து வரும் கடிதங்கள் பல. 'அன்புள்ள சின்னக் குயிலுக்கு' என்றுதான் ஆரம்பமாகிறது.

- 'சிந்து பைரவி' படத்துக்காகத் தேசிய விருது பெற்ற சித்ராவுக்கு, ஒரு மலையாளப் படத்தில் பம்பாய் இசையமைப்பாளர் ரவியின் இசையமைப்பில் பாடிய 'மஞ்சள் பிரசாதமு நெற்றியில் சாற்றி' என்கிற பாடலுக்காகத் தொடர்ந்து இரண்டாம் முறையாகத் தேசிய விருது கிடைத்துள்ளது.

- சித்ரா ஒரு பிள்ளையார் பக்தை. அருணாசலம் ஸ்டுடியோ அருகே உள்ள பிள்ளையார் கோவிலுக்கு அடிக்கடி போவார்.

தமிழும் ஓரளவு கற்றுக் கொண்டுவிட்டேன். தெரியாத மொழிப் பாடல்களை மலையாளத்தில் எழுதி வைத்துக் கொண்டு பாடுகிறேன்.

நிருபர்: இதனால் உச்சரிப்புக் கச்சிதமாக இல்லாமல் போகக் கூடுமே?

சித்ரா: பலமுறை ஒத்திகை பார்த்துக் கொண்டு, உச்சரிப்பில் தவறு இருந்தால் சரி செய்து கொண்டுவிடுவேன்.

நிருபர்: இதுவரை நீங்கள் பாடிய பாடல்களிலேயே மிகவும் கடினமானது என்று எதைக் குறிப்பிடுவீர்கள்?

சித்ரா: சிந்து பைரவியில் இடம் பெற்ற 'பாடறியேன்; படிப்பறியேன்' தான். வழக்கமாக இரண்டு,மூன்று மணி நேரத்தில் ஒரு பாட்டை ரிக்கார்ட் செய்துமுடித்துவிடுவேன். ஆனால் இந்தப் பாட்டு, எனக்குப் பெரிய சவாலாய் அமைந்தது. ஒத்திகை மேல் ஒத்திகையாகப் பார்த்துக் கொண்டேன். இருந்தும் இதை ரிக்கார்ட் செய்ய ஏழு மணி நேரம் ஆகிவிட்டது. அத்தனை நேரமும் இளையராஜா பொறுமையாய் இருந்து, சொல்லிக் கொடுத்தார்; சரியாய் அமைந்தபோது பாராட்டினார். அத்தனை கஷ்டப்பட்டுப் பாடினதற்காகத் தேசிய விருது கிடைத்தது மிகவும் சந்தோஷமான விஷயம் எனக்கு.

நிருபர்: உங்கள் குரல் இனிமையைப் பாதுகாக்க என்ன செய்கிறீர்கள்?

சித்ரா: ஐஸ்கிரீம் தொடவே மாட்டேன்; ஐஸ் தண்ணீர் குடிக்கமாட்டேன். சாதாரணமாகவே தண்ணீரைக் காய்ச்சித்தான் குடிப்பேன். உணவு விஷயத்தில் பெரிய கட்டுப்பாடு ஒன்றுமில்லை.

நிருபர்: உங்களுக்குப் பிடித்த பாடகி யார்?

சித்ரா (கொஞ்சம் சங்கடமாய் நெளிந்து): எல்லாப் பாடகர்கள், பாடகிகளையுமே பிடிக்கும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் என்னைக் கவர்ந்தவர்களே!

நிருபர்: சாதாரணமாய்ப் பாடகர்கள், பாடகிகள் தமக்கென ஒரு மெல்லிசைக் குழுவை வைத்துக் கொண்டு நிகழ்ச்சிகளை வழங்குவார்கள். நீங்கள் ஏன் அதுபோல மெல்லிசைக் குழு வைத்துக் கொள்ளவில்லை?

சித்ரா: எனக்குப் பாடத்தான் தெரியும். ஒரு இசைக் குழுவை நிர்வாகம் செய்யும் திறமை எனக்குச் சுத்தமாய் இல்லை. அதனால் நான் அதில் இறங்கினால் அனாவசியமான பிரச்னைகள்தான் வரும். அதனால் கங்கை அமரன் போன்றவர்களின் மெல்லிசைக் கச்சேரிகளில் என்னைப் பாடக் கூப்பிட்டால் போய் வருவதோடு சரி.

நிருபர்: சமீப காலமாகப் பாடலே இல்லாமல் படங்கள் வந்துள்ளன. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

சித்ரா: பாடகி என்ற முறையில் இதை நான் வரவேற்பேனா? நீங்களே சொல்லுங்கள்!

நிருபர்: பர்சனலாய் ஒரு கேள்வி. உங்கள் கணவர் பற்றி....

சித்ரா: என் கணவர் விஜய சங்கர் ஒரு இஞ்சினியர். திருவனந்தபுரத்தில் அவருக்கு வேலை. அவர் ஒரு இசைப் பிரியர். எனக்கு நிறைய ஊக்கம் தருகிறார். ஆனால் என் துரதிர்ஷ்டம் அவர் திருவனந்தபுரத்திலும், நான் சென்னையிலுமாய் வாழ வேண்டிய சூழ்நிலை. மாதத்தில் நாலைந்து நாட்கள்தான் நான் என் கணவருடன் இருக்க முடியும்.

நிருபர்: என்னதான் பணமும் புகழும் வந்தாலும் பெற்றோரையும் கணவரையும் விட்டுப் பிரிந்து, தனியே சென்னையில் வசிப்பது வருத்தமளிக்கவில்லையா?

சித்ரா: என்ன செய்வது? அட்ஜஸ்ட் செய்து கொண்டுதான் போக வேண்டும். என் கணவர் சென்னைக்கு மாற்றல் கேட்டிருக்கிறார். கிடைத்துவிட்டால், பிரச்னை தீர்ந்துவிடும்!

பேட்டி: எஸ். சந்திரமௌலி

மேலட்டை வண்ணப்படம்,
புகைப்படங்கள்: யோகா

அமரர் கல்கி நினைவுச்

சிறுகதைப் போட்டி -1987

"எச்சரிக்கை..."

"அறிவிப்பு மணி அடிக்க ஆரம்பித்த வுடன் வண்டிகள் இங்கே நிற்க வேண் டும்..."

அந்த ரயில்வே கேட்டின் முன்புறமிருந்த மஞ்சள் போர்டில் 'எச்சரிக்கை'யைச் சிவப் பிலும், மற்ற வார்த்தைகளைக் கறுப்பிலும் எழுதியிருந்தார்கள்.

மாலை ஆறரை மணி பாசஞ்சருக்காகக் கேட் மூடப்பட்டிருந்தது.

"தாய் மூகாம்பிகை" லாரி டிரைவர் ராஜவேலு, இஞ்சினை நிறுத்தி, கீழே குதித் தார். வயது நாற்பதைத் தாண்டியும் அவருக்கு நல்ல கறுகறுப்பு...

"அவசரமா அரூர் போய் டீசல் புடிச்சுக் கிட்டு ஒடனே திரும்பணும்னு நெனைச்சு, வேக வேகமா வந்தும் புண்ணியமில்லே... கேட்டைச் சாத்தித் தொலைச்சுட்டான். பதி னைஞ்சு நிமிஷம் வேஸ்ட்... ஐயர் கடையிலே ஒரு காப்பியாவது குடிக்கலாம்" — என கேட்டருகே இருந்த ஐயரின் சின்ன ஓட்டலை நோக்கி நடந்தார்.

அந்த ஐயர் கடை ரொம்ப நாட்களாக அங்கே இருந்தது.

கிளீனர் சினி காற்று 'செக்' பண்ணிக் கொண்டிருந்தான்.

ராஜவேலு ஓட்டலருகே இருந்த ஐயரின் பெட்டிக்கடையை ஒரு தரம் நோட்டமிட் டார்.

ரமணி... ஐயரின் மகன்... யாருக்கோ ரஸ் தாளிப்பழம் விலை சொல்லிக் கொண்டிருந் தான்.

ஓட்டலுக்குள் நுழைந்த ராஜவேலு, "ரமணி... அப்பா இல்லியா? கடையிலே



பின்னணி



1500/- முதல் பரிசுச் சிறுகதை

ஒருத்தரையுமே காணுமே...! ஒரு காப்பி வேணும்பா...'' என்றார்.


அதற்குள் ராஜவேலுவின் 'கணீர்'க் குரல் கேட்டு ஐயரே வெளியே வந்தார்.

''அடேடே... ராஜவேலுவா...? இப்பத் தான் உன்னைப் பத்தி நெனைச்சேன்... நம்ம ஊர் சினிமா வண்டி கொஞ்சம் முன்னாடி இந்தப் பக்கமாப் போச்சு... இன்னிக்கிருந்து ''தாய் மூகாம்பிகை'' படமாம்... அதைப் பார்த்ததும் உடனே எனக்கு உன் நினைப்புத் தான் வந்துச்சு... நீயும் உடனே வந்துட்டே... உனக்கு ஆயுசு நூறுப்பா'' — என மனமாரச் சொன்ன ஐயர் அடுத்த நிமிஷமே வாடிக்கையாளரை உபசரிக்கும் தோரணையில், ''ஒக்காரு... டிபன் ஏதாச்சும் சாப்பிட றியா?'' — எனக் கேட்டார்.

''இல்லே சாமி... காப்பி மட்டும் போதும்'' என்ற ராஜவேலு கல்லா அருகில் கட்டுக்குடுமி, பஞ்சகச்சத்தில் புதிதாய் ஒருவர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, 'யார்?' எனப் பார்வையாலேயே கேட்டார்.

காப்பியுடன் வந்த ஐயர், ''ஓ... அவரா?

பாரதி வீரராகவன்



''உங்க படத்தை ஏன் தடை பண்ணிட்டாங்க?''

'''காட்டு தர்பார்'னு டைட்டில் வைச்சேன். அது ஆளுங் கட்சியை அவமதிக்கிறாப்ல இருக்காம்!''

— படுதலம் சுகுமாரன்

எங்க குடும்ப சாஸ்திரிகள்... பேத்தி காயத்ரிக்கு நாளைக்குப் பிறந்த நாள்... அவர்

சில சடங்கெல்லாம் செய்யணும். அதுக்காக் வந்திருக்கார்.'' என்றார்.

ஏதோ சிந்தனையில் லயித்திருந்த சாஸ்திரிகள், தன்னைப் பற்றிய அறிமுகம் நடப்பதைக் கேட்டு, சட்டென்று நிமிர்ந்து ராஜவேலுவைப் பார்த்தார்.

ராஜவேலு கடைசி மிடறு காப்பியைக் காலி செய்து, டம்ளரை வைத்துவிட்டு, சாஸ்திரிகளுக்குக் கைகூப்பி வணக்கம் சொன்னார்.

''ஆமா... ராஜவேலு... ரெண்டு மூணு நாளா நீ இந்த லைன்லே ஓட்டலியா? கடைப்பக்கமே வரலே... பாம்பே — ஹைதராபாத்துன்னு — பெரிய லோடு கெடைச்சுப் போயிட்டயோன்னு நெனைச்சேன். இல்லே வண்டி ஏதாச்சும் ரிப்பேரா?'' என ஐயர் ராஜவேலுவை விசாரித்தார்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே சாமி... நம்ம 'பாலாஜி' லாரி டிரைவர் முத்துசாமியைத் தெரியுமில்லே...?''

''ஆங்... ஃபில்டர் வில்ஸ் குடிப்பானே... அந்தப் பையன்தானே? நம்ம கடைக்குக் கூட அடிக்கடி சாப்பிட வருவான்... ஆமா... போன வாரம்தானே அவனுக்குக் கல்யாணம்கூட ஆச்சு.... என்னப்பா ஆச்சு அவனுக்கு?''

''முந்தாநாள் தொப்பூர் கணவாயிலே லாரியைக் கவுத்துட்டு அவனும் போய்ச் சேர்ந்துட்டான். அந்தப் புதுப் பொண்ணு கழுத்திலே ஒரு வாரம்தான் தாலி தொங்கிச்சு... இன்னிக்கு அறுத்துப்புட்டு விதவையாயிட்டா... செத்தவன் பத்து நாள் முன்னாடி செத்திருந்தா அந்தப் பொண்ணுக்கு இந்தக் கதி வந்திருக்குமா? இதைத் தலைவிதின்னு சொல்லறதா? அடப்போங்க சாமி... அந்தப் பொண்ணு கத்றினதைப் பார்த்து என் ஒடம்பே ஆடிப் போச்சு... அந்த ஆண்டவனுக்குக் கொஞ்சம் கூட கருணையே இல்லே சாமி...'' — என ஆத்மார்த்தமான துக்கத்துடன் சொன்னார்.

சாஸ்திரிகள் குறுக்கிட்டார்.

''அப்படியில்லே டிரைவர் சார்...! பகவானைக் குறை சொல்லறது தப்பு... முன்னாடி சாகிறதும் பின்னாடி சாகிறதும் நம்ம கையிலேயா இருக்கு? இடையாது... ஈசுவர சங்கல்பப்படிதான் எல்லாம் நடக்கும்... அவன் ஆட்டி வெக்கிறான்... நாம ஆடறோம்... அவன் ஆட்சியிலே காரணமில்லாமல் ஒரு காரியமும் நடக்காது... அதுக்கும் ஒரு பலமான பின்னணி இருக்கும். அவள் விதவையானதிலேயும் ஏதாவது பின்னணி இருக்கத்தான் செய்யும்.''

''எப்படியோ இருக்கட்டும் சாமி... நான் என்னத்தைக் கண்டேன்?'' என்ற ராஜவேலு, சாஸ்திரிகளின் வார்த்தைகளால் அமைதிப்பட்டார்.

''காயத்ரியை எடுத்தாங்க சாமி... அவளோடு வெளையாடி மூணு நாளாச்சு...''

ஐயருக்கு இரண்டு குழந்தைகள்... ஆஸ்திக்கொரு ரமணி — ஆசைக்கொரு அருணா— அருணாவை நாமக்கல்லிலிருக்கும் அக்கா பையனுக்கே கொடுத்திருந்தார். அவளுடைய குழந்தைதான் காயத்ரி.

ஐயர் காயத்ரியைக் கொண்டு வந்து தந்தார்.

குழந்தையைத் தூக்கிப் போட்டுப் பிடித்த ராஜவேலு, ''எங்கே காயத்ரி... தாத்தாவுக்கு டாடா சொல்லு... நாம லாரியிலே அரூர் போலாமா? சாமி... கொளந்தையைக் கூட்டிட்டுப் போகவா? ஒடனே திரும்பிடுவேன்'' என அவரது சம்மதத்துக்குக் காத்திராமல் லாரியை நோக்கி நடந்தார்.

கேட் திறந்திருந்தது.

காயத்ரி மடியில் இருக்க, லாரியை ஸ்டார்ட் செய்தார்.

அருணாவுக்குத் திக்கென்றது.

''அப்பா.... ராஜவேலு நெஜம்மாவே காயத்ரியை ஏத்திக்கிட்டுப் போற மாதிரி தோணறது. சட்டுன்னு போயி குழந்தையை வாங்கிட்டு வாங்கப்பா....''

ஐயர் லாரியிடம் போக, ''சாமி... காயத்ரிக்குக் குஷி கௌம்பிடிச்சு... எங்கூட வரட்டும்...'' என்றார் ராஜவேலு.

''வேண்டாம்பா... அவ இருக்க மாட்டா... கொண்டா''

காயத்ரி ராஜவேலுவின் மடியை விட்டு இறங்காமல் அடம் பிடித்தாள்... அழுதாள்.

''ஒடனே திரும்பிடுவேன் சாமி... கொளந்தையும் அழுது அடம் புடிக்குது... சீக்கிரமாப் போனதும் வந்திடறேன்'' என ஐயர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே லாரி கேட்டைத் தாண்டிப் பறந்தது.

''சரி... போயிட்டுத்தான் வரட்டும்... ஒரு மணி நேரத்திலே வந்துடப் போறா...'' என மனத்துக்குள் சமாதானம் சொல்லிக்கொண்டார்.

ஆனால்...!

காயத்ரி இல்லாமல் வெறுங்கையுடன் திரும்பியவரைக் கடைக்குள் நுழைந்ததும்

மனைவி சாந்தியும், மகள் அருணாவும் 'பிலு' 'பிலு'வெனப் பிடித்துக் கொண்டார்கள்.

''உங்களுக்குக் கொஞ்சமாவது முன் யோசனை இருக்கா? நாளைக்குக் குழந்தையோட பிறந்த நாள்... நல்ல நாளும் அதுவுமா அவளை அந்த ஆளோடு லாரியிலே அனுப்பிச்சுட்டுக் கல்லுளி மங்களுட்டம் வந்து நிற்கிறேளே...'' சாந்தியின் எரிச்சலை வார்த்தைகளில் காண முடிந்தது.

ஐயர் ஒன்றும் பேசாமல் இளித்தார்.

அதற்குள் அருணா ஆரம்பித்தாள்.

''என்னப்பா இப்படிச் செஞ்சேள்? இந்தக் காலத்துலே 'தண்ணி' அடிக்காதவாளைப் பார்க்கிறதே அபூர்வம். அதிலேயும் லாரிக்காரான்னா கேட்கவே வேண்டாம். ராஜவேலுவே இப்பத்தான் லாரி கவுந்து முத்துசாமி செத்துட்டான்... அவன் பொண்டாட்டி விதவையாயிட்டான்னு புலம்பிட்டுப் போறாரு. எனக்கென்னவோ பயமாயிருக்கு. ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆயிடுச்சன்னா? குழந்தை நல்லபடியா வந்து சேரணுமேன்னு சென்னகேசவப்பெருமாளைத்தான் வேண்டிண்டிருக்கேன்.''

ஐயர் மத்தளமாய்த் தவித்துக் கொண்டிருந்தார்.

இப்பொழுது அவருக்கும் கொஞ்சம் பயம் பிடித்துக் கொண்டது. முகம் வியர்த்து விறுவிறுக்க, நாக்கு வறண்டு, தொண்டைக் குழியிலிருந்து வார்த்தைகள் வெளிவர மறுத்தன.

சமையல் கட்டுக்குப் போய் 'ஜில்'லென்று ஒரு சொம்பு பானைத் தண்ணீரைக் குடித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டார். மெல்ல இருமி இருவரையும் திருப்திப்படுத்தும் தோரணையில் பேசினார்.

''இதைப் பாருங்கோ... இன்னிக்கு நேத்தைக்கல்ல... ராஜவேலுவைக் கடந்த பத்து வருஷமா எனக்குத் தெரியும்... பாலக்கோடு சுகர் மில் ஆரம்பிச்ச நாளிலேர்ந்து இந்த லைன்லே கரும்பு லோடு அடிச்சுண்டுதான் இருக்கான், கேட் போடாட்டிக் கூட வண்டியை நம்ம கடை முன்னாலே நிறுத்தி, சாப்பிட்டாத்தான் அவனுக்குத் திருப்தி... அவனைப் பார்த்து இன்னும் அஞ்சாறு லாரிக்காரர்கள் நம்ம கடைக்கு வர்றா... நம்ம வியாபாரம் சேர்ந்து நடக்க அவனும் ஒரு வழியிலே காரணமாயிருக்கான்... அவனை ஏன் அன்னியனா நினைக்கறேள்? காயத்ரியைக் கடிச்சாத் தின்னுடுவான்? இன்னும் கொஞ்ச நேரத்திலே வந்துடுவான்... நீங்க போய் ஆக வேண்டியதைப் பாருங்கோ...''

அவர்களுக்குச் சும்மா மேல் கட்டுக்கு ஆறுதல் சொன்னாலும் ஐயர் மனம் முழுக்க இருட்டாகத்தான் இருந்தது. நேரம் ஆக ஆக அவர்களுடன் அவரும் ஒத்துப் போக வேண்டியதாகிவிட்டது. நெஞ்சு படபடக்க, பயம் அதிகரிக்கத்தான் செய்தது. தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டு தவித்தார்.

அதே நேரம் —

அரூரில் —

ராஜவேலு லாரிக்கு டீசல் நிரப்பி, புறப்படத் தயாராகும் போது, சக லாரி டிரைவர், ''என்னண்ணே... அதுக்குள்ளே புறப்பட நீங்க? புதுச்சரக்கு இப்பத்தான் வந்துச்சுன்னு காமாட்சி சொல்லியனுப்பியிருக்கா. வாண்ணே, போயி வரலாம்...'' என வற்புறுத்தி அழைத்தான்.

சராசரி மனித மனத்தின் வக்கிரங்கள் மெல்லத் தலைதூக்க, சபல புத்திக்கு ராஜவேலுவும் அடிமையானார். ''சரிப்பா... போலாம் வா... புதுசா வந்திருக்கும். காமாட்சி எப்பவுமே பொய் சொல்ல மாட்டா... போயி பாத்தாத் தெரிஞ்சு போயிடும்... சரி வா...'' — எனப் புறப்பட்டார்.

இரண்டு அடிகள் எடுத்து வைத்தவர் — தோளிலிருந்த காயத்ரியின் நினைவு வரவும் — ஒரு கணம் நிதானமாய் யோசித்தார்.

''சே... சே... நான் ஒரு மடையன். குழந்தையை வெச்சுட்டுத் தப்புத் தண்டாவுக்கெல்லாம் போகக் கூடாது. காமாட்சிகிட்டேயிருக்கிற புதுச்சரக்கிலே கெடைக்கிற சொகத்தைவிட இந்தக் குழந்தையைக் கொஞ்சினால் கிடைக்கிற சுகமே அலாதி. அதெல்லாம் வாணாம்... ஐயர் வூட்டிலே எல்லோரும் காத்திட்டிருப்பாங்க... நேராப் போயி மொதல்லே கொளந்தையை வுட்டுடணும்'' — எனத் திடீரென மனம் மாறி — ''நான் வரலப்பா... நீ வேணா போயிட்டுவா.. நான் இன்னொரு நாள் பார்த்துக்கறேன்'' — என்றபடியே திரும்பினார்.

ராஜவேலுவின் தடுமாற்றத்தை அறியாத காயத்ரி அவரைப் பார்த்து எப்போதும் போல் சிரித்தாள்.



அப்பா: ''நம்ம பயல் இன்னும் கொஞ்ச நேரத்தில் லைப்ரரிக்குக் கிளம்பிடுவான்.''

அம்மா: ''என்ன, ஜோசியமா?''

அப்பா: ''ஊஹூம். 'அம்மா! லைப்ரரிக்குப் போயிட்டு வர்றேன்'னு எதிர் வீட்டுப் பரிமளா கத்தியது காதில் விழுந்தது!''

— உ. ராஜாஜி.

மனப்புழுக்கத்தை வெளிப்படுத்த முடியாமல் —

கண்கள் கொப்புளிக்க...

மாக்கோலம் போட்டுக் கொண்டிருந்த அருணா... கொஞ்சம் அதட்டும் தொனியில்...

''அப்பா, மணி ஒன்பதடிச்சாச்சு. குழந்தை இன்னும் வந்து சேரலே. இதுக்கு மேலேயும் பொறுமையா இருக்கிறதிலே பிரயோஜனமில்லே. பெட்ரோல் பங்குக்கு போன் போட்டு விசாரிச்சுப் பாருங்கப்பா. எனக்கென்னவோ நடக்கக் கூடாதது நடந்திட்ட மாதிரி உள் மனசு அடிச்சுக்கிறது. குத்துக்கல்லாட்டம் பேசாமல் ஒக்காந்திருந்தா எப்படி? போங்கப்பா... என் குழந்தையைக் கொண்டு வந்து சேர்த்துடுங்கப்பா...'' — என நிறைய விசும்பினாள்.

ஐயர் ஒரு விநாடி கலவரப்பட்டுத் தடுமாறினார். அருணாவின் வார்த்தைகள் சம்மட்டியாய் அவரைத் தாக்கின.

''முட்டாள்தனம் செஞ்சுட்டேன். குழந்தையைக் கொண்டு போகாதேன்னு வெட்டி முறிச்சுச் சொல்லியிருக்கணும்'' என எரிச்சலுடன் அங்கலாய்த்துக் கொண்டார். நடந்து போகும் போது கல்லில் அடிபட்டுக் கால் நகம் பிய்ந்து போன மாதிரி ஒரு வலி அடிவயிற்றைக் கலக்கிக் கொண்டிருந்தது.

அருணாவுக்குப்பதில்கூறத்திராணி இல்லாமல் அவர் தலை குனிந்திருந்தது.

''என் குழந்தையைக் கொண்டு வந்து சேர்த்துடுங்கப்பான்னு என் குழந்தையே என்னண்டை உத்தரவு போடற நிலைமையை உருவாக்கிட்டேனே'' — என மனம் நிறையக் குற்ற உணர்வுடன் புழுங்கினார்.

உள்ளுக்கும் வாசலுக்குமாய் நடந்தார்.

'ஹாரன்' சத்தம் கேட்கும் போதெல்லாம்...

சின்னக் குழந்தை போல்...

குதூகலமாய்த் துள்ளிக் குதித்து...

வாசலுக்கு ஓடிப் போய்ப் பார்த்தார்.

ஏமாந்தார்.

பல தடவைகள் ஏமாந்தார்.

ராஜவேலுவின் லாரி இன்னும் வரவில்லை.

என்னென்னவோ பயங்கர நினைப்புக்கள் தோன்றி அவரை அலைக்கழித்தன.

விநாடிகள் நகர மறுத்தன.

ஐயர் மனம் பேதலிக்க நிஜமாகவே அதிர்ந்தார்.

''இன்னும் கொஞ்ச நேரத்திலே காயத்ரி வந்து சேரலேன்னா இந்த வீட்டிலே எல்லாருக்குமே நான் சத்துருவாயிடுவேன். ஈசுவரா... குழந்தைக்கு ஒண்ணுமாகாமெ கொண்டு வந்து சேர்த்துடு. நாளைக்கு எல்லாம் நல்லபடியா நடக்க நீதான் அருள் புரியணும்'' — வேறு வழியின்றி ஆண்டவனிடம் மனமுருகிப் பிரார்த்தனை செய்த அதே தருணத்தில் —

தூரத்தில் இரண்டு வெளிச்சப் புள்ளிகள்!

அதோ...!

''தாய் மூகாம்பிகை''

வெளிச்சத்தை அவர் மேல் வாரியிறைத்தபடி, ஒரு சின்னக் குலுக்கலுடன் அவர் அருகே வந்து நின்றது.

ஓடிப் போய்க் காயத்ரியை வாங்கியவருக்குப் புதையல் கிடைத்த மகிழ்ச்சி...

மனம் பூரித்து, கட்டித் தழுவி, உச்சி மோந்தார். அந்த ஸ்பரிச சுகத்தில், இத்தனை நேரம் பட்ட மனப்பாரம் குறைந்து, லேசாகிப் போன மாதிரி உணர்ந்தார்.

கண்கள் ஆனந்தக் கண்ணீர் விட, ராஜவேலுவைப் பாசத்துடன் பார்த்தார்.

''சாமி... ஒங்க மொகம் ஏன் பேயடிச்ச மாதிரி இருக்கு...? லேட்டாவுதே... ஆளைக் காணோமேன்னு சந்தேகப்பட்டுப் பயந்துட்டீங்களா? நானும் கொழந்தை குட்டிப் பெத்தவன்தான். ஒங்க கூடப் பொறக்காட்டியும் ஒரு தம்பிதான். வரட்டுமா? காலேலே காயத்ரிக்குப் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லச் சீக்கிரமா வந்திடறேன்'' — என லாரியை விட்டு இறங்காமலே யதார்த்தமாய்ச் சொன்ன ராஜவேலு வண்டியை 'ஸ்டார்ட்' செய்தார்.

லாரி போய்விட்டது.

ஒரு பெரிய நிம்மதியுடன் ஐயர் வீட்டினுள் நுழைந்தார்.

காயத்ரியைக் கண்டதும்...

அருணா —

சாந்தி —

ரமணி —

எல்லோருடைய முகங்களிலும் —

புயல் கரையைக் கடந்த சந்தோஷம் ஏகமாய்க் கொப்புளித்துக் கொண்டிருந்தது.

''வேண்டாத கற்பனையைப் பண்ணி மனசைக் குழப்பிக்கிட்டதுதான் மிச்சம்... அப்பா மனசையும் புண்படுத்திட்டேன்'' — என மனம் வருந்திய அருணா, அப்பாவிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டாள்.

மறுநாள் அதிகாலை...

சாஸ்திரிகள் ஹோமத்துக்குண்டான தேவைகளைச் சாந்தியிடம்கேட்டு ஒவ்வொன்றாகச் சேகரித்துக் கொண்டிருந்தார்...

ரமணி வாசலில் மாவிலைத் தோரணம் கட்டிக் கொண்டிருந்தான்.


அருணா காயத்ரிக்குத் தலைபின்னிக் கொண்டிருந்தாள்.

குளித்துவிட்டு வந்த ஐயர், சந்தனம் அரைத்துக் கொண்டிருந்த சாந்தியை ஒரு தரம் முழுசாய் ஏற இறங்கப் பார்த்தார்.

''சாந்தி, மஞ்சளும் குங்குமமும் மருதாணியுமாக — புதுப் பட்டுப் புடவையிலே ஒரு தேவதையாட்டம் ஜொலிக்கிறே... பாட்டியாயிட்டாலும் அவள் அழகு கொஞ்சம் கூடக் கொறையலே...'' — எனக் கொஞ்சநேரம் மனைவியின் அழகில் இறங்கிப் போனார் ஐயர் —

வாசலில் அவசரமாக அழைக்கும் பழகிய குரல் கேட்டது.


''காலங்கார்த்தாலே யாராயிருக்கும்?




''வந்த ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு நான் பயந்தவனில்லைன்னு தலைவர் சொல்லியிருக்காரே, அதுக்கு என்ன அர்த்தம்?''

''துணிந்து வாங்குவார்ன்னு அர்த்தம்!''

— கோவை ஆ. கதிர்வேல்



ஜோக் எழுதுங்கள்! பரிசு ரூ 200/-



மேலேயுள்ள வெற்றிடத்தில் பத்திரிகை ஆசிரியர்களைக் கிண்டல் செய்து ஒரு ஜோக் எழுதி,விலாசத்தைப்பூர்த்திசெய்து இந்த அரைப் பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமாகும் நகைச்சுவைத் துணுக்குகளுக்கு ரூ 200 சன்மானம் சமமாகப் பகிர்ந்தளிக்கப் படும். உறையின்மேல் ''பத்திரிகை ஆசிரியர் ஜோக்'' என்று குறிப்பிடவும்.

முடிவு தேதி: 12, ஆகஸ்டு 1987

பெயர் : ....

விலாசம் : ....

....

பால்காரனுத்தான் இருக்கணும்''— என முணுமுணுத்தபடியே வாசலுக்கு வந்து கதவைத் திறந்தார் ஐயர்...

கதவு திறந்ததும்...

வெளியே...

ராஜவேலு...

ரோமக்காலெல்லாம் குத்திட்டு நிற்க—

உடம்பு பதற...

நிறைய வியர்த்து...

கண்களின் ஆழத்தில் ஒரு புதிய ஒளிச் சுடர் பிரகாசிக்க...

கையில் கொண்டு வந்திருந்த செய்தித் தாளை ஐயரிடம் பவ்யமாய்த் தந்தார்.

ஐயருக்கு ஒன்றும் புரியவில்லை.

இத்தனை காலையில் திடீரென வந்து நிற்கும் ராஜவேலுவைப் பார்த்துத் திகைத்தார்...

அவர் தந்த செய்தித்தாளைத் திகிலுடன் விரித்தார்.

முதல் பக்கத்தில்...

அந்தப் பத்திரிகைக்கே உரித்தான பாணியில்...

கொட்டை எழுத்தில்...

தலைப்புச் செய்தி...

சத்தம் போட்டுப் படித்தார்.

''தருமபுரி மாவட்டம்... அரூரில்...''

''விஷ சாராயத்துக்கு 19 பேர் பலி...''

''இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் லாரி டிரைவர்கள், கிளீனர்கள்...''

''சாராயம் விற்ற 'காமாட்சி' என்ற பெண் கைது.''

ஐயர் படிப்பதை நிறுத்தி, எதுவும் புரியாமல் ராஜவேலுவைப் பார்த்தார்.

ராஜவேலுவின் கண்கள் பனித்திருந்தன.

கம்மிய குரலில் பேசினார்:

''சாமி... காயத்ரியை எடுத்திட்டு வாங்க... அவள் கொழந்தையில்லே... என்னை வாழ வெச்ச தெய்வம்... அந்தத் தெய்வம் நேத்து என்னோட இருந்ததாலே நான் தப்பிச்சேன். என் சிநேகிதன் ரொம்ப கட்டாயப் படுத்தினான். நான் போகலே... காயத்ரியைக் காரணம் காட்டி நின்னுட்டேன். போகாததாலே நானும் பொழைச்சேன். நிர்க்கதியாத் தவிக்க இருந்த எங்குடும்பமும் தப்பிச்சுக்குச்சு. 'எந்தக் காரியமும் காரணமில்லாம நடக்காது. எல்லாத்துக்கும் ஒரு பலமான 'பின்னணி' இருக்கு'ன்னு நேத்து சாஸ்திரிகள் சொன்னதோட அர்த்தம் இப்ப எனக்குத் தெளிவா விளங்கிடுச்சு. தெய்வக் கொழந்தை காயத்ரியோட பிறந்த நாளான இன்னிக்கு நான் ஒரு புது சபதம் செய்யப் போறேன். இனிமேல் நான் குடிக்க மாட்டேன்னு சத்தியம் செஞ்சு பிறந்த நாள் பரிசா அதையே அவ காலடியிலே சமர்ப்பிக்கறேன்.''

ராஜவேலுவின் குரலில் இழைந்திருந்த நன்றி உணர்ச்சியும் அவரது சபதமும் ஐயரை உலுக்கி விட்டன.

ஐயர் மெய்சிலிர்த்து நின்றார்.

பரண்டிபஜார் அருகேசென்றுகொண்டிருந்த ஸ்ரீநாத், தம்மை யாரோ அழைப்பது கண்டு தயங்கி நின்றார்.

''என்னை நினைவிருக்கிறதா?'' அழைத்தவர் கேட்டார்.

''மன்னிக்கவும்,இல்லை'' என்றார், ஸ்ரீநாத்.

''நீங்கள் என் திருமணத்தை வீடியோ எடுத்துக்கொடுத்தீர்கள்'' என்ற அவர் திருமணத் தேதி, நடைபெற்ற மண்டபம் ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்.

ஸ்ரீநாத்துக்கும் ஞாபகம் வந்துவிட்டது.

வீடியோ வீழ்த்திய விவாகரத்து!



ஸ்ரீநாத்

''வாருங்களேன், அந்த ஓட்டலுக்குச் சென்று டிபன் சாப்பிட்டுக்கொண்டே பேசுவோம்'' என்று அவர் ஸ்ரீநாத்தை ஓட்டலுக்கு அழைத்துச் சென்றார்.

''எப்படி இருக்கிறது உங்கள் மண வாழ்க்கை?''

''உங்கள் உதவியால் இப்போது மகிழ்ச்சிகரமாக இருக்கிறது.''

''இப்போது என்றால்...?''

''ஆமாம்; திருமணமாகி ஆறு மாதங்கள் வரை நான்... வந்து, நாங்கள்... சந்தோஷமாகவே இல்லை. விவாகரத்துவரை போய் விட்டோம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்....''

''அட கடவுளே!''

''ஆமாம்; அதன் பிறகு உங்கள் உதவியால்தான் நாங்கள் மீண்டும் ஒன்று சேர்ந்திருக்கிறோம்; மகிழ்ச்சியான மணவாழ்க்கை நடத்தி வருகிறோம்.''

''என் உதவியா? புரியவில்லையே!''

''அதைச்சொல்வதற்குமுன்னால்சிக்கலைச் சொல்லி விடுகிறேன். திருமணமாகி என் வீட்டிற்கு வந்த என் மனைவியின் போக்கு எனக்குப் பிடிக்கவேயில்லை. எனக்கு மட்டுமல்ல; என் பெற்றோருக்கும். மரியாதை இல்லாமல் அவள் பழகுவதும், எதிர்ப் பேசுப் பேசுவதும்,எதையாவதுநினைத்துக்கொண்டு அழுவதும்.... நான் வாழ்க்கையையே வெறுத்துவிட்டேன்.''

''ஐ ஆம் சாரி.''

''ஒரே ஒரு வழிதான் எனக்குத் தோன்றியது. அவளைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிட்டால், தாற்காலிகமான பிரிவினை காரணமாக அவள் போக்கில் மாற்றம் ஏற்படும் என்று நம்பினேன்.''

''அப்படியா?''

''ஆனால் நினைத்தது ஒன்று. நடந்தது வேறொன்றாகிவிட்டது. அவள் மாறவில்லை.''

''மாறவில்லை என்று எப்படித் தீர்மானித்தீர்கள்?''

''அவளோ, அவளுடைய வீட்டிலோ யாருமே சமரசத்திற்கு வரவில்லையே! நானாகப் போய் அழைத்து வருவதென்றால் என் கௌரவம் என்னாவது? என்ன இருந்தாலும் நான் ஆண்பிள்ளை இல்லையா? எனக்கு அடங்கிப் போக வேண்டியவள் அவள் தானே?''

ஸ்ரீநாத் அவரைப் பார்த்துச் சிரித்தார்.

''இதே சிரிப்பை — ஏளனச் சிரிப்பை என்னைப் பார்த்து நீங்கள் எடுத்த வீடியோ சிரித்தது!''

அவரைக் குழப்பத்துடன் பார்த்தார் ஸ்ரீநாத்.

''மனைவியை அனுப்பிவிட்டு ஒரு சில மாதங்கள் ஆன பிறகு விவாகரத்து நோட்டீஸ்கூட அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டேன். ஒருநாள் தற்செயலாக என் வீட்டில் வீடியோ ப்ளேயரில் சினிமா பார்த்துக் கொண்டிருந்தேன். திரைப்படம் ஒன்றை எடுத்து 'டெக்'கில் போட்டு விசையைத் தட்டினால் — அது என் திருமண வீடியோ! திரைப்பட வீடியோ உறைக்குள் தற்செயலாகத் திருமண டேப் நுழைந்திருக்கிறது. இப்படி அவல வாழ்க்கை வாழும் என் திருமணம் எப்படி நடந்தது என்பதை மீண்டும்

பார்க்கும் ஆவலில் படத்தை ஓடவிட்டேன்.''

''சொல்லுங்கள்....''

''படத்தில் என் மனைவி— அவள் முகத்தில் தான் எத்தனை கவலை, பயம்! பள்ளிக்கூடத்துக்கு முதல் நாள் போகும் எல்கேஜி மாணவி மாதிரி! அவளுடைய பெற்றோர்கள் முகத்திலும் தாங்க முடியாத கவலை, வேதனை. சுமார் இருபத்தைந்து வருடங்கள் ஒரே சூழலில் தாம் வளர்த்த பெண், முற்றிலும் புதிய சூழ்நிலையில் புதிய உறவுகளை எப்படி எதிர்கொள்வாள், எப்படிச் சமாளிப்பாளோ என்ற அச்சம்... தாலி கட்டியபோது, அவள் தந்தை குழந்தை போலக் கேவிக் கேவி அழுத காட்சி என்னைச் சிந்திக்க வைத்தது. முற்றிலும் புதிய சூழ்நிலைக்குள் அவள் உடனே பொருந்திவிட வேண்டும் என்று எதிர்பார்த்தது என் தவறு! அந்தப் பொருந்துதலை அவளுக்கு எளிதாக்க நான், அவளுக்கும் என் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கும் இடையே ஒரு பாலமாக அல்லவா இருந்திருக்க வேண்டும்? மாறாக முரட்டுத்தனமாக நடந்து கொண்டு விவாகரத்து வரையில் பிரச்னையைக் கொண்டு போய்விட்டேனே!''

''பிறகு?''

''என் பெற்றோரிடம் பேசினேன். அநாவசியமாக ஒரு பெண்ணை அவதிக்குள்ளாக்குவதற்கு நமக்கு உரிமையில்லை. அவளோடு வாழ முடியாதபட்சத்தில், பரந்த மனப்பான்மை இல்லாத நம்மால், எந்தப் பெண்ணுடனுமே வாழ முடியாது. ஆகவே விவாகரத்து நோட்டீஸை வாபஸ் பெற்றுக் கொள்ளப் போகிறேன் என்றேன்.''

''பலே.''

''அவள் வீட்டிற்குப் போய் விவரம் சொன்னபோது, அவர்கள் வீட்டில் எல்லோருமே கதறி அழுதுவிட்டார்கள். என் குடும்பத்தை அனுசரித்துக் கொண்டு போகாமல் முற்றிலும் தன்னிச்சையாகச் செயல்பட்டது தன் குற்றம்தான் என்று அவளும் ஒப்புக்கொண்டாள். இதுமாதிரியான குடும்பப் பிரச்னைகளில் கணவன் ஒரு பாலமாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, ஒருவரை மட்டும் ஆதரித்து அடுத்தவருக்குப் பாரமாக இருக்கக் கூடாது என்ற உண்மை புரிந்தது. இந்த எண்ணம் வந்ததற்குக் காரணமே நீங்கள் எடுத்த வீடியோவை நான் மீண்டும் பார்க்க நேர்ந்ததால்தான். ரொம்ப ரொம்ப நன்றி ஸ்ரீநாத்.''

ஸ்ரீநாத் தம் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

அனுபவம்:

வீடியோ காமிராமேன் ஸ்ரீநாத்

பேட்டி, படம்: பிரபு சங்கர்

ஸ்ரீ விசாலம் சிட்பண்ட் லிமிடெட்

பதிவு அலுவலகம் :

2.13.1, சுட்டளைத் தெரு, திருநெல்வேலி-627 006. தொலைபேசி : 3474

நிர்வாக அலுவலகம் :

7/117, உ.அ. தெரு, பள்ளத்தூர்-623 107. தொலைபேசி : 72 & 108

மத்திய அலுவலகம் :

161, அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 89244, 87886

தென்னகத்தில் மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒப்பற்ற சீட்டு நிறுவனம்

நிதி நிலைமை 31.3.86ல் உள்ளபடி
(தணிக்கை செய்யப்பெற்றது)

அங்கீகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 25·00 லட்சம்
செலுத்தப்பட்ட மூலதனமும் ரிசர்வ் நிதியும்	ரூ. 8.31 லட்சம்
சொத்துக்கள்	ரூ. 21.83 கோடிக்கு மேல்
சீட்டு நடைமுறை நிதி	ரூ. 26.59 கோடிக்கு மேல்

டைரக்டர்கள்
AR. விஸ்வநாதன்
S. PR. ராமஸ்வாமி, M.A

70 கிளைகள் 4 மாநிலங்கள் 39 ஆண்டு சேவை

எங்கள் 70 கிளைகள் மூலமாகப் பல்வேறு மதிப்புள்ள மாதம் ஒருமுறை, இருமுறை, மும்முறை, தினசரிச் சீட்டுகள் நடத்தி வருகிறோம். மேலும் ரூ. 25,000/- முதல் ரூ. 2,00,000/- வரை உயர் மதிப்புள்ள சீட்டுக் கூளைப் பிராந்திய குரூப்புகளாக எங்கள் சென்னை மத்திய அலுவலகம், திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், காரைக்குடி, மதுரை, பாண்டிச்சேரி, திருப்பதி மற்றும் பெங்களூர் கிளைகளில் நடத்தி வருகிறோம்.

Dr. L. RM. அருணாசலம், B.E., M.E., (PH) M.I.E.
பொது ஜனத்
தொடர்பு அதிகாரி

AR. பழநியப்பன்
நிர்வாக அதிகாரி



RM. அருணாசலம்
நிர்வாக இயக்குநர்

பொன்னியின்

அத்தியாயம் 4

நள்ளிரவில்

இரவு போஜனம் ஆன பிறகு வந்தியத்தேவன் கலங்கரை விளக்கின் தலைவரைத் தனிப்படச் சந்தித்து இலங்கைக்குத் தான் அவசரமாகப் போக வேண்டும் என்பதைத் தெரிவித்தான். தியாக விடங்கக் கரையர் என்னும் பெயருடைய அப்பெரியவர் தமது வருத்தத்தைத் தெரிவித்தார்.

"இந்தக் கரையோரத்தில் எத்தனையோ பெரிய படகுகளும் சிறிய படகுகளும் ஒரு காலத்தில் இருந்தன. அவையெல்லாம் இப்போது சேதுக்கரைக்குப் போய்விட்டன. இலங்கையில் உள்ள நமது சைன்யத்தின் உதவிக்காகத்தான் போயிருக்கின்றன. எனக்குச் சொந்தமாக இரண்டு படகுகள் உண்டு. அவற்றில் ஒன்றில் நேற்று வந்த இரண்டு மனிதர்களை ஏற்றிக்கொண்டு என் மகன் போயிருக்கிறான். அவன் எப்போது திரும்பி வருவான் என்று தெரியாது. என்ன செய்யட்டும்?" என்றார்.

"அந்த மனிதர்கள் யார்? அவர்கள் ஒருமாதிரி ஆட்கள் என்று தங்கள் குமாரி கூறினாளே?"

"ஆமாம்; அவர்களைக் கண்டால் எனக்கும் பிடிக்கவில்லைதான். அவர்கள் யார் என்பதும் தெரியவில்லை; எதற்காகப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. பழுவேட்டரையரின் பனை இலச்சினை அவர்களிடம் இருந்தது. அப்படியும் நான் என் மகனைப் போகச் சொல்லியிருக்க மாட்டேன். ஆனால் என் மருமகள் மிகப் பணத்தாசை பிடித்தவள். பை நிறையப் பணம் கொடுப்பதாக அவர்கள் சொன்னதைக் கேட்டுவிட்டுப் புருஷன் போக வேண்டும் என்று வற்புறுத்தினாள்...."

"இது என்ன ஐயா, வேடிக்கை? வீட்டில் உலக அநுபவம் இல்லாத ஒரு சிறு பெண் சொன்னால், அதைத்தான் உங்கள் மகன் கேட்க வேண்டுமா?" என்றான் வந்தியத்தேவன். பிறகு சிறிது தயக்கத்துடன், "மன்னித்துக் கொள்ளுங்கள். அது தங்கள் குடும்ப விஷயம்!" என்றான்.

"அப்பனே! நீ கேட்பதில் தவறு ஒன்றும் இல்லை. என் குடும்பத்திற்குச் சாபக்கேடு ஒன்று உண்டு. என் மகன்..." என்று தயங்கினார்.

வந்தியத்தேவனுக்கு அப்போது சேந்தன் அமுதன் இக்குடும்பத்தைப் பற்றிக் கூறியது நினைவு வந்தது.

"தங்கள் மகளால் பேச முடியாதா?" என்றான்.

"ஆம்; உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றார் பெரியவர்.

சேந்தன் அமுதனையும் அவன் தாயாரையும் அவர்கள் வீட்டில் தான் தங்கியிருந்ததையும் பற்றி வந்தியத் தேவன் அவரிடம் கூறினான்.

"ஆகா! அந்த ஆள் நீதானா? உன்னைப் பற்றிச் செய்தி இங்கே முன்னமே வந்துவிட்டது. உன்னை நாடெங்கும் தேடுகிறார்களாமே!"

அமரர் கல்கி

செல்வன்



"இருக்கலாம்; அதைப் பற்றி எனக்குத் தெரியாது."

"நீ ஏன் இலங்கைக்கு அவசரமாகப் போக விரும்புகிறாய் என்று இப்போது எனக்குத் தெரிகிறது."

"பெரியவரே! தாங்கள் நினைப்பது சரியல்ல. என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டும் நான் இலங்கைக்குப் போகவில்லை. அங்கேயுள்ள ஒருவருக்கு மிக முக்கியமான ஓலை ஒன்று கொண்டு போகிறேன். தாங்கள் வேண்டுமானால் அதைப் பார்க்கலாம்."

"தேவையில்லை. இளைய பிராட்டி உன்னைப் பற்றி எழுதியிருப்பதே எனக்குப் போதும். ஆனால் இச்சமயம் நீ கேட்கும் உதவி என்னால் செய்ய முடியவில்லையே!"

"இன்னொரு படகு இருப்பதாகச் சொன்னீர்களே?"

"படகு இருக்கிறது. தள்ளுவதற்கு ஆள் இல்லை. நீயும் உன்னுடைய சிநேகிதனும் தள்ளிக் கொண்டு போவதாயிருந்தால் தருகிறேன்..."

"எங்கள் இருவருக்கும் படகு ஓட்டத் தெரியாது. எனக்குத் தண்ணீர் என்றாலே கொஞ்சம் பயம். அதிலும் கடல் என்றால்...."

"படகு ஓட்டத் தெரிந்தாலும் அனுபவம் இல்லாதவர்கள் கடலில் படகு ஓட்ட முடியாது. கடலில் கொஞ்ச தூரம் போய்விட்டால் கரை மறைந்துவிடும். அப்புறம் திசை தெரியாமல் திண்டாட வேண்டி வரும்."

"என்னுடன் வந்தவனை நான் அழைத்துப் போவதற்கும் இல்லை. அவனை மூலிகை சேகரிப்பதற்காக இங்கே விட்டுப் போக வேண்டும். ஏதாவது ஒரு வழி சொல்லி நீங்கள் தான் உதவி செய்ய வேண்டும்."

"ஒரு வழி இருக்கிறது. அது எளிதில் நடக்கக் கூடியதன்று. நீயும் முயற்சி செய்து பார்! அதிர்ஷ்டம் உன் பக்கம் இருந்தால்...."

"நான் என்ன செய்ய வேண்டும், பெரியவரே! சொன்னால் கட்டாயம் செய்கிறேன்" என்றான் வந்தியத்தேவன்.

"இந்தப் பகுதியிலேயே பூங்குழலியைப் போல் சாமர்த்தியமாகப் படகு தள்ளத் தெரிந்தவர்கள் வேறு யாரும் இல்லை. இலங்கைக்கு எத்தனையோ தடவை போய் வந்திருக்கிறாள். அவளிடம் நான் சொல்லுகிறேன்; நீயும் கேட்டுப் பார்!"

"இப்போதே கூப்பிடுங்களேன்; கேட்டுப் பார்க்கலாம்."

"வேண்டாம்; மிக்க பிடிவாதக்காரி. இப்போது உடனே கேட்டு 'முடியாது' என்று சொல்லிவிட்டால், அப்புறம் அவளுடைய மனத்தை மாற்ற முடியாது. நாளைக்கு நல்ல சமயம் நோக்கி அவளிடம் நான் சொல்லுகிறேன். நீயும் தனியே பார்த்துக் கேள்!"

இவ்விதம் தியாக விடங்கக் கரையர் கூறிவிட்டுக் கலங்கரை விளக்கை நோக்கிச் சென்றார்.

அவருடைய வீட்டுத் திண்ணையில் வந்தியத்தேவன் படுத்தான். அவனுடன் வந்த வைத்தியர் மகன் முன்னமே தூங்கிப் போய்விட்டான். வந்தியத்தேவனுக்கும் நீண்ட பிரயாணம் செய்த களைப்பினால் தூக்கம் கண்ணைச் சுற்றிக் கொண்டு வந்தது. விரைவில் தூங்கிப் போனான்.

திடீரென்று தூக்கம் கலைந்தது. கதவு திறக்கும் ஓசை கேட்டது. களைத்து மூடியிருந்த கண்ணிமைகளைக் கஷ்டப்பட்டு வந்தியத்தேவன் திறந்து பார்த்தான். ஓர் உருவம் வீட்டிற்குள்ளேயிருந்து வெளியேறிச் சென்றது தெரிந்தது. மேலும் கவனமாகப் பார்த்தான். அது ஒரு பெண்ணின் உருவம் என்று கண்டான். கலங்கரை விளக்கின் வெளிச்சம் அந்த உருவத்தின் மேல் விழுந்தது. ஆ! அவள் பூங்குழலிதான்! சந்தேகமில்லை.

அவள் என்னமோ நம்மிடம் சொன்னாளே? ''நடுநிசியில் என்னைத் தொடர்ந்து வா! என் காதலர்களைக் காட்டுகிறேன்!'' என்றாள். அது ஏதோ விளையாட்டுப் பேச்சு என்றல்லவா அப்போது நினைத்தோம்? இப்போது இவள் உண்மையிலேயே நள்ளிரவில் எழுந்து போகிறாளே? எங்கே போகிறாள்? காதலனையோ, காதலர்களையோ பார்க்கப் போவதாயிருந்தால் அப்படி நம்மிடம் சொல்லுவாளா? 'பின்தொடர்ந்து வந்தால், காட்டுகிறேன்' என்பாளா? இதில் ஏதோ மர்மமான பொருள் இருக்க வேண்டும்! அல்லது ஒருவேளை.... எப்படியிருந்தாலும் பின்தொடர்ந்து போய் ஏன் பார்க்கக் கூடாது? நாளைக்கு இவளிடம் நயமாகப் பேசி இலங்கைக்குப் படகு தள்ளிக் கொண்டு வரச் சம்மதிக்கப் பண்ண வேண்டும். அதற்கு இப்போது இவளைத் தொடர்ந்து போவது உதவியாயிருக்கலாம். ஏதாவது இவளுக்கு அபாயம் வரக் கூடும்! அதிலிருந்து அவளைக் காப்பாற்றினால் நாளைக்கு நாம் கேட்பதற்கு இணங்கக் கூடும் அல்லவா?

வந்தியத்தேவன் சத்தம் செய்யாமல் எழுந்தான். பூங்குழலி போகும் வழியைப் பிடித்துக் கொண்டே போனான். சாயங்காலம் சேற்றுப் பள்ளத்தில் விழுந்தபோது அடைந்த அநுபவம் அவனுக்கு நன்றாய் ஞாபகம் இருந்தது. அம்மாதிரி மறுபடியும் நேர்வதை அவன் விரும்பவில்லை. ஆகையால், பூங்குழலியை அவன் பார்வையிலிருந்து தவற விட்டு விடக் கூடாது.

கலங்கரை விளக்கிலிருந்து கொஞ்ச தூரம் வரை வெட்ட வெளியாக இருந்தது. ஆகையால் பூங்குழலியின் உருவமும் தெரிந்து கொண்டிருந்தது. அவள் போன வழியே போவதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. அவள் அருகில் போய்ப் பிடித்துவிட வேண்டும் என்று எண்ணி விரைவாக நடந்தான். ஆனால் அது சாத்தியப்படவில்லை. இவன் வேகமாய் நடக்க நடக்க, அவளுடைய நடை வேகமும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இவன் பின் தொடர்ந்து வருவதை அவள் கவனித்ததாகவே தெரியவில்லை.

திறந்த வெளியைக் கடந்ததும் காடு அடர்ந்த மேட்டுப்பாங்கான பூமி வந்தது. நேரே அதன் பேரில் ஏறாமல் பூங்குழலி அந்த மேட்டைச் சுற்றிக் கொண்டே போனாள். மேடும் காடும் முடிந்த முனை வந்தது. அந்த முனையை வளைத்துக் கொண்டு சென்றாள். வந்தியத்தேவனும் விரைந்து சென்று அந்த முனை திரும்பியதும் சற்றுத் தூரத்தில் அவள் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தான். ''நல்ல வேளை!'' என்று தைரியம் கொண்டான். ஆனால் அடுத்த கணத்தில் திடீரென்று அவளைக் காணவில்லை!

எப்படித் திடீரென்று மறைந்திருப்பாள்? இது என்ன மாயமா, மந்திரமா? அங்கே ஏதாவது பள்ளம் இருந்திருக்குமோ? ஓட்டமும் நடையுமாகப் போய்ச் சுமாராகப் பூங்குழலி எங்கே நின்று மறைந்தாள் என்று தோன்றியதோ, அந்த இடத்துக்கு வந்தான். அங்கே நின்று நாலாப் பக்கமும் பார்த்தான். மூன்று பக்கங்களில் அவள் போயிருக்க முடியாது. போயிருந்தால் தன் கண்ணிலிருந்து மறைந்திருக்க முடியாது. அவ்விடத்தில் காலை ஜாக்கிரதையாக ஊன்றி வைத்துப் பார்த்துச் சேறு கிடையாது என்பதையும் நிச்சயப்படுத்திக் கொண்டான். ஆகையால், மேட்டின் மேல் ஏறிக் காட்டுக்குள்ளேதான் போயிருக்க

வேண்டும்.

இன்னும் கொஞ்சம் உற்றுப் பார்த்ததில், குத்துச் செடிகள் அடர்ந்த அந்த மேட்டில் ஏறுவதற்கு ஒற்றையடிப் பாதை ஒன்று இருப்பது தெரிய வந்தது. வந்தியத்தேவன் அதில் ஏறினான். ஏறும்போது திக் திக் என்று அடித்துக் கொண்டது. அங்கே கலங்கரை விளக்கின் மங்கிய வெளிச்சமும் வரவில்லை. மாலைப் பிறை முன்னமேயே கடலில் மூழ்கி மறைந்துவிட்டது. மினுமினுத்த நட்சத்திரங்களின் வெளிச்சத்திலே வழி கண்டுபிடித்துப் போக வேண்டியிருந்தது. அந்த வழியையும் கொஞ்ச தூரத்துக்கு அப்பால் காணவில்லை. குத்துச் செடிகளும் குட்டை மரங்களும் பயங்கர வடிவங்களைப் பெற்றன. அவற்றின் நிழல்கள் கரிய பேய்களாக மாறின. செடிகளின் இலைகள் ஆடியபோது நிழல்களும் அசைந்தன. ஒவ்வொரு அசைவும் வந்தியத் தேவனுடைய நெஞ்சை அசைத்தது. அந்தக் கரிய இருளிலும் நிழலிலும் எங்கே என்ன அபாயம் காத்திருக்கிறதென்று யார் கண்டது? விஷ ஜந்துக்கள். கொடிய விலங்குகள் பதுங்கியிருந்து பாயலாம். அபாயம் மேலிருந்து வரலாம்; பக்கங்களிலிருந்தும் வரலாம்; பின்னாலிருந்தும் வரலாம். அடடா! இது என்ன இங்கே வந்து அகப்பட்டுக் கொண்டோம்? கையில் வேலைக் கூட எடுத்து வரவில்லையே?

அது என்ன சலசலப்புச் சத்தம்? அந்த மரத்தின் மேல் தெரியும் அந்தக் கரிய உருவம் என்ன? அந்தப் புதரின் இருளில் இரண்டு சிறிய ஒளிப் பொட்டுக்கள் மின்னுகின்றனவே. அவை என்னவாயிருக்கும்?

வந்தியத்தேவனுடைய கால்கள் அவனை அறியாமல் நடுங்கின. சரி! சரி! இங்கே என்ன நமக்கு வேலை? எதற்காக இங்கே வந்தோம்?— என்ன அறிவீனம்? உடனே இறங்கிப் போய் விட வேண்டியதுதான்!

இறங்கலாம் என்று எண்ணித் திரும்ப யத்தனித்த தருணத்தில் ஒரு குரல் கேட்டது. நெஞ்சைப் பிளக்கும் குரல்; பெண்ணின் குரல். ஒரு விம்மல் சத்தம். பிறகு இந்தப் பாடல்:—

"அலை கடலும் ஓய்ந்திருக்க
அகக்கடல்தான் பொங்குவதேன்?
நிலமகளும் துயிலுகையில்
நெஞ்சகந்தான் விம்முவதேன்...?"

வந்தியத்தேவன் அம்மேட்டிலிருந்து கீழே இறங்கிச் செல்லும் யோசனையை விட்டுவிட்டான். குரல் வந்த இடம் நோக்கி மேலே ஏறினான். விரைவில் மேட்டின் உச்சி தெரிந்தது. அங்கே அவள் நின்று கொண்டிருந்தாள். பூங்குழலிதான். பாடியது அவள்தான். வானத்தில் சுடர்விட்ட நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டு பாடினாள். அந்த விண் மீன்களையே அவளுடைய பாட்டைக் கேட்கும் ரஸிக மகா சபையாக நினைத்துக் கொண்டு பாடினாள் போலும்! நட்சத்திரங்களும் அந்த சோக கீதத்தைக் கேட்டு உடல் சிலிர்த்தன. நட்சத்திரங்களில் ஒன்று



தூமகேது. அதிலிருந்து கிளம்பிய கதிரின் கத்தை நீண்ட தூரம் விசிறி போல் விரிந்து படர்ந்திருந்தது. மேட்டின் உச்சியில் அப்பெண்ணின் நிழல் வடிவமும், அவளுடைய குரலும் கீதமும், வானத்தில் தூமகேதுவும் சேர்ந்து வந்தியத்தேவனைத் தன் வயமிழக்கச் செய்தன. அவனுடைய கால்கள் அவனை உச்சி மேட்டில் கொண்டு போய்ச் சேர்த்தன.

பூங்குழலிக்கு எதிரில் நேருக்குநேராக அவன் நின்றான். அவளுக்குப் பின்னால், வெகு தொலைவு என்று காணப்பட்ட இடத்தில், கலங்கரை விளக்கின் சிவந்த ஒளி தோன்றியது. அதையொட்டி விரிந்த கடல் பரந்து கிடந்தது. கட



லுக்கு எல்லேயிட்டு வரையறுத்தது போல் வெள்ளிய அலேக்கோடு நீண்டு வளேந்து சென்றது.

''வந்துவிட்டாயா? திண்ணேயில் கும்பகர்ணனேப் போல் தூங்கிஞயே என்று பார்த்தேன்....''

''வீட்டுக் கதவு திறந்த சத்தம் கேட்டு விழித்துக் கொண்டேன். நீ விடு விடு என்று நடந்து வந்துவிட்டாய்! திரும்பியே பார்க்கவில்லே. அம்மம்மா! உன்னேத் தொடர்ந்து ஓடி வருவது எவ்வளவு கஷ்டமாய்ப் போய் விட்டது?''

''எதற்காகத் தொடர்ந்து வந்தாய்?''

''நல்ல கேள்வி! நீதானே வரச் சொன்னுய்? மறந்துவிட்டாயா?''

''எதற்காக வரச் சொன்னேன்? உனக்கு நினேவு இருக்கிறதா?''

''நினேவு இல்லாமல் என்ன? உன்



காதலர்களைக் காட்டுவதாகச் சொன்னாய்! எங்கே உன் காதலர்கள்? காட்டு, பார்க்கலாம்!''

''அதோ உனக்குப் பின்னால் திரும்பிப் பார்!'' என்றாள் பூங்குழலி.

அத்தியாயம் 5
நடுக் கடலில்

வந்தியத் தேவன், திரும்பிப் பார்த்தான். அவனுடைய வயிற்றிலிருந்து குடல்கள் மேலெழும்பி அவன் மார்பை அடைத்தன. பிறகு, இன்னும் மேலே கிளம்பி அவன் தொண்டையையும் அடைத்துக் கொண்டன.

அவனுடைய தேகத்தில் ஆயிரம் மின்னல்கள் பாய்ந்தன. பழுக்கக் காய்ந்த ஒரு லட்சம் ஊசி முனைகள் அவன் தேகமெல்லாம் துளைத்தன.— அத்தகைய பயங்கரக் காட்சி அவன் கண் முன்னே காணப்பட்டது.

முடிவில்லாது பரந்திருந்த இருளில் அங்கங்கே பத்து, இருபது, நூறு அக்கினி குண்டங்கள் தோன்றின. அவற்றிலிருந்து புகை இல்லை; வெளிச்சமும் இல்லை. கீழே விறகு போட்டு எரித்து உண்டாகும் தீப்பிழம்புகளும் அல்ல. வெறும் நெருப்புப் பிண்டங்கள். பூமியிலிருந்து எப்படியோ எழுந்து அவை நின்றன. திடீரென்று அவற்றில் சில பிண்டங்கள் மறைந்தன. வேறு சில தீப்பிண்டங்கள் புதிதாக எழுந்து நின்றன.

ஒரு பிரும்மாண்டமான கரிய இருள் நிறங்கொண்ட ராட்சதன், தனியாகத் தலை ஒன்று இல்லாமல் வயிற்றிலேயே வாய்கொண்ட கபந்தனைப் போன்ற ராட்சதன். ஆனால் அவன் வயிற்றில் ஒரு வாய் அல்ல; அநேக வாய்கள். அந்த வாய்களை அவன் அடிக்கடி திறந்து மூடினான். திறக்கும்போது வயிற்றிலிருந்து தீயின் ஜுவாலை வாய்களின் வழியாக வெளியே வந்தது. மூடும்போது மறைந்தது.

இந்தக் காட்சியைக் கண்ட வந்தியத் தேவனுடைய ஒவ்வொரு ரோமக்கால் வழியாகவும் அவனுடைய உடம்பின் ரத்தம் கசிவது போலிருந்தது. அப்படிப்பட்ட பீதி அவனை என்றைக்கும் ஆட்கொண்டதில்லை. பெரிய பழுவேட்டரையரின் பாதாள நிலவறையிலேகூட இல்லை.

அவன் பின்னால் "ஹா ஹா ஹா!" என்று ஒரு சிரிப்புக் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

பூங்குழலிதான்! வேறு ஒரு சந்தர்ப்பத்திலேயென்றால், அவளுடைய அந்தச் சிரிப்பே அவனுக்கு அளவில்லாத பயங்கரத்தை உண்டாக்கியிருக்கும். இப்போது அதே சிரிப்பு தைரியத்தை அளித்தது. இரத்தமும் சதையும் உடலும் உயிரும் உள்ள பெண் ஒருத்தி அவன் பக்கத்திலே நிற்கிறாள் என்பது பெரும் அபாயத்தில் ஒரு பற்றுக் கோல் போல உதவியது.

''பார்த்தாயா என் காதலர்களை?'' என்று பூங்குழலி கேட்டாள்.

''இந்தக் கொள்ளிவாய்ப் பிசாசுகள்தான் என் காதலர்கள். இவர்களைப் பார்த்து சல்லாபம் செய்வதற்குத்தான் நள்ளிரவில் இந்த இடத்துக்கு நான் வருகிறேன்'' என்றாள்.

இந்தப் பெண்ணுக்கு நன்றாகப் பித்துப் பிடித்திருக்கிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இவளுடைய உதவியைக் கொண்டு இலங்கைக்குப் போகிறது நடக்கிற காரியமா? இவ்வாறு வந்தியத்தேவன் எண்ணினான். அவனுடைய உள்மனத்திலிருந்து வேறு ஏதோ ஓர் எண்ணம் வெளிவரப் போராடிக் கொண்டிருந்தது. அது என்ன? அது என்ன? இந்தக் கொள்ளி வாய்ப் பிசாசுகளைப் பற்றிய ஏதோ ஒரு விஷயந்தான்.

''உன்னுடைய சிநேகிதன் சேந்தன் அமுதனால் இத்தகைய காதலர்களோடு போட்டியிட முடியுமா?'' என்று பூங்குழலி கூறியது கிணற்றுக்குள்ளேயிருந்து வரும் குரலைப்போல் கேட்டது. ஏனெனில் அவனுடைய உள்ளம் அப்

போது எதையோ ஞாபகப்படுத்திக் கொள்ள முயன்று கொண்டிருந்தது. ஆ! கடைசியில் ஒரு பெரிய போராட்டம்; மனத்திற்குள்ளேதான். இதோ ஞாபகம் வந்துவிட்டது.........

கந்தகம் கலந்த பூமிப் பிரதேசங்களில் தண்ணீர் வெகு காலம் தேங்கி நின்று சதுப்பு நிலமானால், அத்தகைய இடங்களில் இரவில் இம்மாதிரி தோற்றங்கள் ஏற்படும். பூமிக்குள்ளேயிருந்து கந்தகம் கலந்த வாயு வெளியில் வரும் போது நெருப்புப் பிழம்பு வருவது போலிருக்கும். சில சமயம் நீடித்து நிற்கும். சில சமயம் குப்குப் என்று தோன்றி மறையும். இந்த இயற்கைத் தோற்றத்தைக் கண்டு அறியாத மக்கள் பயப்படுவார்கள். கொள்ளிவாய்ப் பிசாசு என்று பயங்கரப் பெயர் கொடுத்துப் பீதி அடைவார்கள்......

இப்படிப் பெரியோர் சொல்லி அவன் கேள்விப்பட்டிருந்தது ஞாபகத்துக்கு வந்தது. பிறகு அவனுடைய அறிவுக்கும் பயத்துக்கும் போர் நடந்தது. அறிவு வெற்றி பெற்றது.

ஆனால் அதையெல்லாம் இச்சமயம் இந்தப் பிரமை பிடித்த பெண்ணிடம் சொல்லிப் பயனில்லை. எப்படியாவது அவளுக்கு நல்ல வார்த்தை சொல்லி அழைத்துக் கொண்டு போய் விட வேண்டியதுதான்.

"பெண்ணே! உன் காதலர்கள் எங்கும் போய்விட மாட்டார்கள். இங்கேதான் இருப்பார்கள். நாளைக்கும் அவர்களை வந்து பார்க்கலாம் அல்லவா? வீட்டுக்குப் போகலாம், வா!" என்றான்.

அதற்குப் பூங்குழலி மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை; விம்மி அழத் தொடங்கினாள்.

இது என்ன தொல்லை என்று வந்தியத்தேவன் எண்ணினான். பின்னர் சற்று நேரம் சும்மா இருந்தான்.

"பெண்ணே! நாம் போகலாமா?" என்று மீண்டும் கேட்டான்.

விம்மல் நிற்கவில்லை.

வந்தியத்தேவனுக்கு அலுத்துப் போய்விட்டது.

"சரி; உன் இஷ்டம் போல் செய்! எனக்குத் தூக்கம் வருகிறது. நான் போகிறேன்" என்று சொல்லிவிட்டு இறங்கத் தொடங்கினான்.

பூங்குழலி உடனே விம்மலை நிறுத்தினாள். மேட்டிலிருந்து இறங்கத் தொடங்கினாள். நாலே பாய்ச்சலில் வந்தியத்தேவனுக்கு முன்னால் கீழே போய் நின்றாள்.

வந்தியத்தேவன் ஓடிப் போய் அவளைப் பிடித்தான்.

இருவரும் கலங்கரை விளக்கை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

இந்தப் பித்துப் பிடித்த பெண்ணை நம்பிப் படகில் ஏறுவதாவது? கடலைக் கடப்பதாவது?—ஆயினும்வேறு வழி இல்லையென்று தெரிகிறதே? ஏதாவது நல்ல வார்த்தை சொல்லிச் சிநேகம் செய்து கொள்ளப் பார்க்கலாமா?

"வானத்தில் வால் நட்சத்திரம் தோன்றுகிறதே! அதைப் பற்றி உன் கருத்து என்ன?" என்று பூங்குழலி கேட்டாள்.

"என் கருத்து ஒன்றுமில்லை. வால் நட்சத்திரம்தோன்றுகிறது; அவ்வளவு தான்!" என்றான் வந்தியத்தேவன்.

"வால் நட்சத்திரம் வானில் தோன்றினால் பூமியில் பெரிய கேடுகள் விளையும் என்று சொல்கிறார்களே?"

"அப்படித்தான் சிலர் சொல்லுகிறார்கள்."

"நீ என்ன சொல்லுகிறாய்?"

"நான் ஜோதிட சாஸ்திரம் படித்ததில்லை. ஜனங்கள் அப்படிச் சொல்லிக் கொள்வதுதான் எனக்கும் தெரியும்."

சற்று நேரம் மௌனமாக நடந்தார்கள். பிறகு பூங்குழலி, "சக்கரவர்த்திக்கு உடம்பு சுகமில்லை என்று சொல்கிறார்களே? அது உண்மைதானே?" என்றாள்.

இவள் அவ்வளவு பித்துக்குளிப் பெண் அல்ல என்று வந்தியத்தேவன் எண்ணிக் கொண்டான். கொஞ்சம் அவனுக்கு நம்பிக்கை பிறந்தது.

"நானே என் கண்ணால்பார்த்தேன்.

சக்கரவர்த்தி படுத்த படுக்கையாய்க் கிடக்கிறார். இரண்டு கால்களிலும் உணர்ச்சியே கிடையாது. ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாது. அவரைக் குணப்படுத்த மூலிகை கொண்டு வரத்தானே நான் வந்திருக்கிறேன். பெண்ணே! எனக்கு நீ ஓர் உதவி செய்வாயா?'' என்று கேட்டான்.

அதற்கு மறுமொழி சொல்லாமல், ''சக்கரவர்த்தி அதிக நாள் உயிரோடிருக்க மாட்டார், சீக்கிரத்தில் இறந்து போய்விடுவார் என்று சொல்கிறார்களே, அது உண்மையா?'' என்று கேட்டாள் பூங்குழலி.

''நீ இச்சமயம் உதவி செய்யாவிட்டால் அப்படி நடந்தாலும் நடந்துவிடும். இலங்கையில் ஓர் அபூர்வ சஞ்சீவி மூலிகை இருக்கிறதாம். அதைக் கொண்டு வந்தால் சக்கரவர்த்தி பிழைத்துக் கொள்வாராம். நீ படகு தள்ளிக் கொண்டு இலங்கைக்கு வருவாயா?''

''சக்கரவர்த்தி ஒருவேளை இறந்து போனால் அடுத்தபடி யார் பட்டத்துக்கு வருவார்கள்?'' என்று பூங்குழலி கேட்டது வந்தியத்தேவனைத் தூக்கி வாரிப்போட்டது.

''பெண்ணே! உனக்கும் எனக்கும் அதைப் பற்றி என்ன? யார் பட்டத்துக்கு வந்தால் நமக்கு என்ன கவலை?''

''ஏன் கவலை இல்லை? நீயும் நானும் இந்த இராஜ்யத்தின் பிரஜைகள் அல்லவா?''

இந்தப் பெண் பித்துப் பிடித்தவளே அல்ல. இவளிடம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். இவளுடைய விசித்திரமான செயல்களுக்கு வேறு காரணம் இருக்க வேண்டும்.

''ஏன் பேசாமலிருக்கிறாய்? அடுத்த பட்டத்துக்கு யார் வருவார்கள்?'' என்று பூங்குழலி மீண்டும் கேட்டாள்.

''ஆதித்த கரிகாலருக்குத் தானே யுவராஜா பட்டம் கட்டியிருக்கிறது. அவர்தான் நியாயமாக அடுத்த பட்டத்துக்கு வர வேண்டும்.''

''மதுராந்தகர்,— அவருக்கு உரிமை ஒன்றுமில்லையா?''

''அவர்தான் இராஜ்யம் வேண்டாம் என்று சொல்லி விட்டாரே?''

''முன்னே அப்படிச் சொன்னார்; இப்போது இராஜ்யம் வேண்டும் என்று சொல்கிறாராமே?''

''அவர் சொன்னால் போதுமா? பிரஜைகள் எல்லாரும் ஒப்புக் கொள்ள வேண்டாமா?''

''பெரிய மனிதர்கள் பலர் அவர் கட்சியில் இருக்கிறார்களாமே?''

''அப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன். இவ்வளவும் உன் காது வரையில் வந்து எட்டியிருப்பதை நினைத்தால் எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.''

''சுந்தர சோழர் திடீரென்று இறந்து போனால் என்ன ஆகும்?''

''தேசமெல்லாம் பெருங்குழப்பம் ஆகிவிடும். அதைத் தடுப்பதற்குத் தான் உன் உதவி இப்போது தேவையாயிருக்கிறது......''

''நான் என்ன உதவியைச் செய்ய முடியும்?''

''முன்னமேயே சொன்னேனே? நான் அவசரமாக மூலிகை கொண்டு வர இலங்கைத் தீவுக்குப் போக வேண்டும். அதற்கு நீ படகு வலித்துக் கொண்டு வர வேண்டும்.''

''என்னை எதற்காக அழைக்கிறாய்? ஒரு பெண் பிள்ளையைப் படகு தள்ளும்படி கேட்க வெட்கமாயில்லையா?''

''வேறு யாரும் இல்லை என்று உன் தந்தை சொல்கிறார். உன் அண்ணன் கூட நேற்றுப் போய்விட்டானாமே?''

''அவன் போனால் என்ன? உனக்கு இரண்டு கைகள், உன்னோடு வந்தவனுக்கு இரண்டு கைகள் இல்லையா?''

''எங்களுக்குப் படகு வலிக்கத் தெரியாது...''

''படகு வலிப்பது என்ன மந்திர வித்தையா! துடுப்பைப் பிடித்து வலித்தால் தானே படகு போகிறது!''

''திசை தெரிய வேண்டும் அல்லவா? நடுக்கடலில் திசை தெரியாமல் போய் விட்டால்......?''

''நடுக்கடலில் திசை தெரியாவிட்டால் முழுகிச் சாகுங்கள்! அதற்கு நான் என்ன செய்யட்டும்?''

கலங்கரை விளக்கின் அருகில் அவர்கள் வந்து விட்டார்கள். வந்தியத்தேவனும் அத்துடன் அந்தப்

பேச்சை நிறுத்திவிட விரும்பினான். மேலும் பேச்சை வளர்த்திப் பூங்குழலியின் மறுப்பை உறுதிப்படுத்திவிட அவன் விரும்பவில்லை. அவள் அவ்வளவு கண்டிப்பாக மறுமொழி சொன்ன போதிலும், அவளுடைய குரலும் பேச்சின் தோரணையும் அவனுடைய உள்ளத்தில் சிறியதொரு நம்பிக்கைச் சுடரை உண்டாக்கியிருந்தன.

இரண்டாம் முறை படுத்த பிறகு வெகு நேரம் வந்தியத்தேவனுக்குத் தூக்கம் வரவில்லை. ஏதேதோ எண்ணங்களினால் அவனுடைய உள்ளம் வெகுவாகக் குழம்பிக் கொண்டிருந்தது. நாலாம் ஜாமத்தின் ஆரம்பத்திலேதான் தூங்கினான்.

தூக்கத்தில் வந்தியத்தேவன் கனவு கண்டான். பாய்மரம் விரித்த சிறிய படகில் பூங்குழலியும் அவனும் எதிரெதிராக அமர்ந்திருந்தார்கள். நாலாபுறமும் கடல்; எங்கு நோக்கினாலும் ஜலம். இனிய பூங்காற்று. படகு அக்காற்றில் மிதப்பது போலப் போய்க் கொண்டிருந்தது. பூங்குழலியின் முகம் அழகே வடிவமாகப் பொலிந்தது. சுருண்ட மயிர் நெற்றியில் ஊசலாடிக் கொண்டிருந்தது. சேலைத் தலைப்புப் பறந்தது. எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம் என்பதெல்லாம் வந்தியத்தேவனுக்கு மறந்து போய்விட்டது. பூங்குழலியுடன் படகில் போவதற்காகவே இத்தனை நாள் பிரயாணம் செய்து வந்ததாகத் தோன்றியது. ஒன்றே ஒன்று குறைவாயிருந்தது. அது என்ன? அது என்ன? ஆ! பூங்குழலியின் பாட்டு! சேந்தன் அமுதன் சொல்லியிருந்தான் அல்லவா?

"பெண்ணே! உன் பவழவாயைத் திறந்து ஒரு பாட்டுப் பாட மாட்டாயா?" என்றான் வந்தியத்தேவன்.

"என்ன சொன்னாய்?" என்று பூங்குழலி புன்னகையுடன் கேட்டாள். ஆகா! அந்தப் புன்னகை ஏழு உலகமும் பெறுமா?

"உன் கனிவாயைத் திறந்து ஒரு கீதம் இசைக்க மாட்டாயா என்றேன்."

"கீதம் இசைத்தால் எனக்கு என்ன தருவாய்?"

"உன் அருகில் வந்து உன் அழகிய கன்னத்தில்......"

பூங்குழலி உடனே தன் மடியிலிருந்து ஒரு கூரிய கத்தியை எடுத்துக் கொண்டாள். கத்தி பிடித்த கையை ஓங்கினாள்.

"இதோ பார்! அந்தப் பாய்மரத்துக்கு இப்பால் ஓர் அணுவளவு நீ வந்தாலும் உன்னை இந்தக் கத்தியால் குத்தி விடுவேன். கடல் மீன்கள் மிக்க பசியோடிருக்கின்றன!" என்றாள்.

(தொடரும்)

அரபு நாட்டில் தனது துணி சோப்புப் பவுடரை விளம்பரப்படுத்த நினைத்த அமெரிக்க நிறுவனம் ஒன்று அதற்காக லட்சக்கணக்கில் செலவு செய்தது. விளம்பரத்தில் ஓர் அழகிய பெண் அழுக்கு உடையைக் கையில் வைத்திருப்பதுபோல் முதல் படத்திலும், அதை சோப்பு நுரைத் தண்ணீரில் நனைப்பது போல் இரண்டாவது படத்திலும், மூன்றாவது படத்தில் வெள்ளை வெளேரென்று உடை மின்னுவதும் காட்டப்பட்டது! விளம்பரம் வெளியான பிறகு, ஆனால், விற்பனை கொஞ்சம்கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது! காரணத்தை ஆராய்ந்த போதுதான் ஓர் உண்மை புரிந்தது. அராபியர்கள் எப்போதும் வலமிருந்து



இடம் படிப்பவர்களாயிற்றே! அதனால் விளம்பரம் அனர்த்தமாகிவிட்டது!

ஆதாரம்: சொஸைட்டி
தகவல்: சம்பத்குமாரி



சலனம்

கார்த்திகா ராஜ்குமார்

மழை. ஜன்னலின் மங்கின வெளிச்சத்தில் நடுங்கும் தாரைகளாய் ஊற்றும் மழை. இரவின் நிசப்தத்தில் பெரிதாய்ச் சடசடக்கிற மழை.

டெஸ்ட் பேப்பர்களைத் திருத்திக் கொண்டிருந்தார் அவர்.

கதவு தட்டப்பட.... நிமிர்ந்தார். தயங்கினார்.

தடதடவெனக் கதவு அதிர்ந்தது.

இல்லை. இது பிரமை இல்லை.... அப்படியானால்....! அப்படியானால்?!

பதற்றத்துடன் எழுந்து போய்க் கதவைத் திறக்க,

அவரைத்தள்ளாத குறையாக நுழைந்தாள் அவள். மழையில் இதற்கு மேலும் அவள் நனையச் சாத்தியமில்லை. அவள் நின்ற சில வினாடிகளில் காலடியில் சிறு குளம் ஏற்பட்டு விரிந்து கொண்டிருந்தது. அவளின் அழகான கண்கள் மிரண்டிருந்தன.

''சார்.... நான் செகண்ட் இயர் படிக்கிறேன். என் ப்ரண்ட் வீட்டுக்குப் போனேன் சார். அங்கேயே தங்க நெனைச்சிருந்தேன். ஆனா அங்க நிறைய கெஸ்ட்ஸ் வந்திட்டாங்கன்னு, ஹாஸ்டலுக்கே போயிடலாம்னு புறப்பட்டேன். பஸ் கிடைக்கலை. மழை வேறே. ஒரு விசை உங்க 'வீட்டுக்கு' ஷீலா கூட வந்திருக்கேன். அதான்.... இப்ப....''

உடம்பு வெடவெடக்க, ஒரே மூச்சில் வார்த்தைகளைக் கொட்டினாள். இவள் சொல்வதில் எத்தனை சதம் உண்மை? அல்லது பொய்? எழும்பின இக்கேள்வியை அமுக்கிக் கொண்டு, அவரின் மனத்தில் ஒரு கிளர்ச்சி வந்தது. புது உஷ்ணம் கிளம்பி உடம்பெங்கும் தகிப்பாய்ப் பரவிற்று. அதே நேரம் விநோதமாய்ப் பயப் பாம்பு அவருள் நெளிந்தது. தொண்டை காய்ந்து போயிற்று. எச்சிலை விழுங்கி, நனைத்து, கனைத்து....

''சரி, உள்ளே வாம்மா....''

அவள் நடுங்கியபடி உள்ளே வந்தாள். கதவைச் சாத்தி, தான் போடுகையில் — அவருள் நிறைய திக்...'திக்குகள்.

'யாராவது இதைப் பார்த்துவிட்டால்...?



அல்லது இப்போது வந்துவிட்டால்?'

நடுக்க அலைகள் பரவின. சிரமப்பட்டு நிதானித்துக் கொள்ள முயன்றார்.

'வீண் பதற்றம் எதற்கு? அவசியமில்லை அது. அவள் மாணவி. நான் அவள் படிக்கும் கல்லூரியில் கௌரவமிக்க பேராசிரியர். உதவி கேட்ட அவளுக்கு உதவுகிறேன். அவ்வளவே. வேறு எதுவுமில்லை.'

திரும்பினார்.

"ஏம்மா நிக்கறே. உள்ளே போ. டவல் இருக்கு. துவட்டிக்க. அவளோட புடைவை இருக்கும். மாத்திக்க."

"ஏன் சார், உங்க மனைவி, பொண்ணு எல்லாம் எங்கே?"

"அவங்க இல்ல. எல்லாரும் ஊருக்குப் போயிருக்காங்க. நான் மட்டும்தான் தனியா இரு...க்...."

நாக்கைக் கடித்துக் கொண்டு நிறுத்தினார். 'கடைசி சில வார்த்தைகள் தேவை இல்லாதவை. ஏன் சொன்னேன்?' ஒரு குற்ற உணர்வு உறுத்தியது.

அவள் தயங்கியபடி உள்ளே போனாள்.

'அவளின் தயக்கத்திற்குப் 'பயம்' மட்டும் தான் காரணமோ? என் மேல் நம்பிக்கை வந்திருக்கலாமோ? வந்திருக்கலாம். என்னது! என்ன வந்திருக்கலாம்னு? வந்திருக்க வேண்டும். நான் அவளின் மூத்த அண்ணா. அல்லது சித்தப்பா அல்லது மாமா. நாற்பது வயதுக்கு மேலாகிவிட்டதில்லையா எனக்கு? என் ஒன்றிரண்டு நரை முடிகளே அவளுக்கு நம்பிக்கையைத் தரக் கூடும். அவள் என்னை நம்பி வந்திருக்கிறாள். துணி மாற்றிவிட்டு, பின் இங்கேயே படுத்துத் தூங்கட்டும். உள் அறையில் வசதிப்படவில்லை என்றால் — இதோ இங்கிருக்கிற சோபாவில் கூட அவள் படுத்துக் கொள்ளட்டும். இல்லை, வேண்டாம். அந்த அறைக்குள்ளாகவே அவள் இருக்கட்டும். அந்த அறைதான் அவளுக்குப் பாதுகாப்பு. என்னது?!! பாதுகாப்பு அங்கேதான் என்றால்.... இங்கில்லை என்று அர்த்தமா? அப்படியானால் அப்படியானால்.... எனக்கு, என் மீதே அவ்வளவு நம்பிக்கை இல்லையா? ஷ்ஷ்ஷ்... இல்லை.... இல்லை, இல்லை. சரி, ஏன் அவளைப் பற்றியே நினைவுகள் அவசியமே இல்லாமல்? கூடாது. கூடவே கூடாது.'

கைகளைத் தேய்த்துக் கொண்டார். மறுபடி வந்து உட்கார்ந்து டெஸ்ட் பேப்பர்களை எடுத்தார். எங்கோ பிசிறு தட்டியது. மனம் வேலையில் ஒன்ற மறுத்தது. அடம் பிடித்தது. முரட்டுக் குதிரையாய்த் திமிறித் திறி கெட்டது.

எனில்.... எனில்.... பிம்பம் கலைந்து கொண்டிருக்கிறதோ? அவளின் தனிமையைப் பயன்படுத்தி, அவளை மோகிக்கிற ஒரு மென்மையான வில்லன், பேராசிரியரின்

கௌரவமிக்க பிம்பத்தைப் புறம்பே தள்ளி விட்டுத் தான் நுழைந்து கொண்டிருக் கிறுனே?

'இல்லே' என்று எரிச்சலுடன் பற்களை நரநரத்து முணுமுணுத்தார். கைகளை இறுகக் கோத்து அழுத்திக் கொண்டார். பார்வை யைச் சுழற்றினர். அப்பொழுது சுவரில் சற்று எதிராக மாட்டியிருந்த நிலைக் கண்ணுடி யில் உள் அறையின் பாதி திறந்திருந்த ஜன்னல் தெரிய — அதில் 'அவள்'. வேறு புடைவைக்கு மாறிக் கொண்டிருந்தாள்.

அவருக்கு வியர்த்துப் போயிற்று. கைகள் லேசாக நடுங்கின. அவசரமாய்ப் பார்வை யைக் கண்ணுடியிலிருந்து பிடுங்கினர். ஆனல் பார்த்த அந்தத் தோற்றம் மனத்தை விட்டு அகல மறுக்க, இன்னும் வியர்த்துப் போனர். அட்ரினலினின் அதிகரிப்பை உணர்ந்தார். நடுக்கங்களினூடேயும் ஒரு விதக் கிளர்ச்சி, தனக்குள் படர்வதும் தெரிந் தது. தன்னேயே வெறுத்தார் இதற்காக.

சரேலென எழுந்து, வேகமாய்ச் சுவரை நெருங்கி, நிலைக் கண்ணுடியை ஆவேசத் துடன் ஆணியோடு பிடுங்கி, அதை விசி எறிய யத்தனித்தவர், ஏனே தயங்கினர். சிதறும் கண்ணுடித் துண்டுகள் தன் மோச மான பலவீனத்தை, அந்த நிமிடத்துக் கிளர்ச்சியைச் சொல்லும் நிரந்தர சாட்சி களாகி விடக் கூடும் என்று பட்டது. அதை அப்படியே கீழே வைத்தார். நடந்து போய், தெருவைப் பார்த்திருந்த ஜன்னலே நெருங் கித் திறந்து....

சில்லென உள்வந்தன மழைத் துளிகளும் குளிர்க் காற்றும். இருளில் மழையுள் எதை யோ தேடுவதைப் போல வெறித்திருந்தார். காற்றும் மழையும் தன்னைத் தொட்டதில் சற்றே ஆசுவாசமாக உணர்ந்தார். உடம்பின் உஷ்ணம் தணிய ஆரம்பித்தது.

"என்ன சார் மழைல வேடிக்கை பார்த்துக் கிட்டு இருக்கீங்க?"

திரும்பினர். அவள். அவர் மனைவியின் புடைவையில். திடுமென அவள் அவர் மனைவி போலாகி.... அவள்.... தலையை உதறிக் கொண்டார். இல்லே. இது மாயை. மனத்தின் பிரமை, சூழல் எல்லாமே எனக்கு எதிராகச் சதி செய்ய ஆரம்பித்திருக்கின் றன.

"சார்..... என்ன சார் ஆச்சு...?"

அவரின் செய்கைகளில் ஆச்சர்யமாகிப் போயிருந்தாள் அவள்.

"ஒண்ணுமில்லம்மா... ஒண்ணுமில்ல."

அவரையே பார்த்து நின்றிருந்த அவளைப் புன்முறுவலுடன் பார்த்துவிட்டு, மிகவும் தன்னம்பிக்கையுடன், இயல்பாக வருவது போல மறுபடி மேஜைக்குத் திரும்பி டெஸ்ட் பேப்பர்களை எடுத்து, திருத்த முயல....

மறுபடி தோல்வி குரூரமாய் அவரைத் தள்ளிற்று.

'அவள்! அவள்! அட! பெயர் கூட இன்னும் தெரியாத அவள். ஆனல் இளமை யான இளமைக்கே உரிய அதிஉன்னத மயக் கும் அம்சங்களைக் கொண்ட அவள் என் மனைவியின் புடைவையில் என் மனைவியைப் போலவே கண நேரத்திற்கு மாயமாய் மாறித் தெரிந்த அவள்.... கடவுளே.... சபலங்கள்... சாதகமான சூழ்நிலே வரும்பொழுது அடி மனத்திலிருந்து பேயாய்க் குதிக்கிற சபலங் கள், சந்தர்ப்பங்கள் அமைகிறுற்போல தெரிந்ததும், தீயின் நாக்குகளாய் ஆடி, தகிக் கிற சபலங்கள், வயதை, மற்றவைகளை அலட்சியப்படுத்துகிற சபலங்கள்...'

தம் ஆரம்பபிம்பம்பரிதாபமான நிலைக்குப் போய்விட்டதைப் போலத் தெரிந்தது அவ ருக்கு. கண்ணியம் மிக்க தமக்குள் கயவனும் ஒருவன் இருக்கிறுன் — பிரிய மனைவியின் பதிமூன்று வருஷ தாம்பத்யம் நிறைவை அளித்திருந்தும், இரவின் மயக்கமும், இளமை அழகும் வந்ததும் எட்டிப் பார்க்கிற கயவன்.

பற்களைக் கடித்தபடி கண்களை இறுக மூடிக் கொண்டார்.

'கதைகளில் சினிமாக்களில் பார்த்த அயோக்கியர்களின் துணுக்குகள் அடிமனத் தில் புதையுண்டு போய்ச் சமயங்களில் இப் படியாக உயிர்க்கிறதோ. ஓர் உணர்ச்சி மிகுகிற மனநிலையில்தான், புதிதாகச் செய் பவர்களின் சகல தவறுகளும் நிகழ்கின் றனவோ...? மற்றவர்களுக்குச் சரி. எனக்கு? என் சமூக அந்தஸ்து, பேராசிரியரின் வீட்டில் ஒரு மாணவி கற்பை இழந்.... கூடாது. ஒரு போதும் கூடாது. எப்படியாவது இந்தச் சப லத்தைக் கொன்றாக வேண்டும். ஆனல் எப்படி....?'

யோசிக்க ஆரம்பித்தவர், பின் நினைவு வந்தவரைப் போல எழுந்து போய் 'பட்டினத் தடிகளை' எடுத்துக் கொண்டு வந்து உட்கார்ந் தார்.

> காதென்று மூக்கென்று கண்ணென்று
> காட்டி என்கண் எதிரே
> மாதென்று சொல்லி வரு மாயை தன்னை
> மறலி விட்ட
> தூதென் றெண்ணமல் சுகமென்றுநாடும்
> இத் துர்புத்தியை
> ஏதென் றெடுத்துரைப்பேன்? இறைவா
> கச்சி ஏகம்பனே

லேசாகச் சிரிப்பு கூட வந்தது அவருக்கு. மனம் மட்டுப்படுகிறுற் போல இருந்தது.

புதிதாக்கப்பட்ட மனத்துடன் திரும்பி அவளைப் பார்த்தார். அவள் சோபாவில் உட்கார்ந்தபடி, ஏதோ பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தாள். தொடர் கொட்டாவிகள். பின் தலே உயர்த்தி அவரைப் பார்த்தாள். அவள் பசியாக இருக் கக் கூடும் என்று அவருக்குத் தோன்றியது. எழுந்து, சமையலறைக்குப் போனர்.

"இந்தாம்மா, ரொட்டி இருக்கு. ஜாம் இதோ. பாலே ஸ்டவ்ல வைச்சிருக்கேன். இதைச் சாப்பிட்டுவிட்டுப் போய்ப் பாலேக் குடிச்சுக்க. பசியோட இருக்கிறது தப்பு. நீயே உரிமையா கேட்டிருந்தா சந்தோஷப்பட் டிருப்பேன்."

அவள் கண கலங்கிற்று. மௌனமாய் வாங்கிக் கொண்டாள். உள்ளே நடந்தாள். அவள் மிகவும் உணர்ச்சிவயப்பட்டு



பொதுக் கூட்டத்தில்.....
ஒருவர்: "தலைவர் இந்தச் சிரிப்பு சிரிக்கிறாரே, அமைச்சர் என்ன ஜோக் சொன்னார்?"
இவர்: "விலைவாசியைக் குறைப்போம்னார்!"
— உ. ராஜா





"பள்ளிக்கூடத்தில் படிக்கிறப்போ என் மகன் தொண்ணூறு, நூறு என்று தான் வாங்குவான்."

"இப்ப மட்டும் என்ன? ஆபிஸில் எந்த வேலை ஆகணும் என்றாலும் நூறுக்குக் குறைந்து வாங்கறதில்லையே!"

— லலிதா செல்லப்பா.

நெகிழ்ந்து போயிருக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. மிகவும் பெருமிதமாக உணர்ந்தார். தம் மனத்தை ஒருவழியாகக் கட்டுக்குள் கொண்டு வந்துவிட்டதாக நினைத்தார். அவள் பார்த்துக்கொண்டிருந்த பத்திரிகையைக் கையில் எடுத்தபடி, தான் அவளிடம் சொன்னவைகளை மறுபடி மனத்தில் சொல்லிப் பார்த்துக் கொள்ள, ஏதோ அபத்தமாய்த் தெரிந்தது. தான் அதிகம் பேசுகிறோம் என்று உறைத்தது. சலித்துக் கொண்டார். மனத்தை மாற்ற, கையிலிருந்த பத்திரிகையைப் புரட்ட, உள்ளே வண்ணத்தில் சிரித்த ஒரு நடிகை இவளைப் போலவே தெரிந்தாள். ஆச்சர்யமாகி உற்றுப் பார்க்க, வித்தியாசங்கள் தெரிய ஆரம்பித்தன.

'ஆமாம், இதென்ன அசட்டுத்தனம். வித்தியாசம் இருந்தால், என்ன, இல்லாவிட்டால்என்ன?எதற்குஒப்பிடுகிறஅசட்டுத்தனம்? மறுபடி குழிக்குள் விழுகிறேனோ... கடவுளே, எனக்கு ஏதோ ஆகிவிட்டது. இல்லையெனில் ஏன் இந்தத் தடுமாற்றங்கள்? அவசரமாய்த் தம் மேஜைக்குப் போனார்.

"சார், உங்க ஷெல்ப்ல இருக்கிற ஒரு 'புக்'கை எடுத்துக்கட்டுமா?"

'ஆகா, நீ மோகினிப் பேய்தான். என்னை நாசமாக்க வந்த பேய். சபலப்படுத்துகிற பேய். அந்நிய மனிதனின் வீட்டில் வந்தவள், பயந்து அறை மூலையில் ஒண்டிக் கொண்டிராமல் இப்படி வளைய வளைய வந்து, இப்படிப் புத்தகம் கேட்டு.... நாசக்காரப் பேயே ஒழி! உனக்கு இடம் தந்ததே தவறு. பின் சாப்பிடத் தந்தது மேலும் தவறு. என் தவறுகள் தந்த தைரியத்தில் என்னவோ சொந்தப் புருஷனிடம் கேட்பதைப் போல 'புக்' வேணுமாம். படிக்காமல் தூக்கம் வராதா மோகினியே, என் கண்களில் படாதே. மறைந்து போ.'

"சார்.... சார்.... உங்களைத்தான்."

'அழைப்பு, மறுபடி அழைப்பு. கூடாது. சட். பொறு. நிதானித்துக் கொள் மனமே. பதற்றப்படாதே. வீண் கற்பனைகளில் அமிழாதே. ஒன்றுமில்லை. எதுவும் நடந்து விடவில்லை. அவள் இயல்பாய் இருக்கிறாள். நீயும் இரு.'

"எடுத்துக்கம்மா... தாராளமா..."

அவள், அவரைக் கடந்து போய், புத்தகங்களில் ஒன்றைத் தேடினாள். அரை அடியே தள்ளி இருந்த அவளிலிருந்து எழும்பிய வாசனை அவரைக் கிறக்கியது. பயந்து போனார். கண்களை இறுக மூடி, கைகளைக் கட்டியபடி உடம்பை இறுக்கிக் கொண்டார். ரொம்ப வியர்த்தது. மனம் படபடத்தது. அவள் போன பிறகும் அப்படியே இருந்தார்.

சட்டென்று எழுந்து, ஒரே பாய்ச்சல். அவள் இதோ. இது அவள் கை. இது அவள்... அவளின்.... ஏய் மோகினி, உன்னை, உன்னை.... அவள் பாம்பு படமெடுப்பதைப் போல் சரேலென எழும்பிக் கொத்தினாள். 'சார் நீங்களா? நீங்க கூடவா?'

"சார், சார்.... என்ன ஆச்சு?" — அவர் கண்களைத் தேய்த்தபடி பார்க்க, எதிரே அவள். பயந்து போயிருந்தாள். அப்படியானால்.... நான் போனது.... தொட்டது... தொட்டது.... பிரமையா, கனவா?

"ஒண்ணுமில்லேம்மா, நீ போய்ப் படுத்துக்க."

அவள் குழப்பமாய்ப் பார்த்துவிட்டுப் போனாள். அவருக்கு உடம்பு இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தது. தான் கண்டது பிரமையோ என்னவோ, தன் கண்ணியமிக்க பிம்பம் விழுந்து நொறுங்கி விட்டதாகத் தோன்றியது. சுய வெறுப்பு மண்ட தன்னைக் கடையனிலும் கடையனாய் உணர்ந்தார். அழ வேண்டும் போலிருந்தது. உதடுகள் நடுங்க, படித்துப் பாதியில் விட்டிருந்த பட்டினத்தடிகளை மறுபடி எடுத்து....

அவர் கண்விழித்தபோது, பொழுது விடிந்து விட்டிருந்தது. மேஜையின் மேலேயே கவிழ்ந்து தூங்கி விட்டதில் உடம்பு வலித்தது. எழுந்தார். அவருக்கு எதிரே ஒரு பேப்பர் படபடத்துக் கொண்டிருந்தது. அதில் '**You are great**' என்று எழுதப்பட்டிருக்க.... அது அவளாகத்தானிருக்க வேண்டும். அதையே பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பேப்பர் படபடத்து யூ ஆர் கிரேட் என்றது. திறந்திருந்த கதவு அசைந்து யூ ஆர் கிரேட் என்றது. கீழே இருந்த கண்ணாடி யூ ஆர் கிரேட் என்று கத்தியது.... வீட்டின் சகலமும் அலைகளின் பேரோசையைப்போல யூ ஆர் கிரேட், யூ ஆர் கிரேட் என்று முழங்க, 'ந்நோ' என்று அலறினார் பேராசிரியர்.

மந்திரிக்கு வந்த கனவு

ஐந்தாண்டு காலம்
அமைச்சராய் இருந்திடலாமென
ஆசைக் கனவோடு
அரியணையில் அமர்ந்த என்னைத்
தூசியைப் போல்
'பாஸ்'
தூக்கி எறிகிறாரே....!

படபடவென்று
இதயம் —
பலமாக அடித்துக் கொள்ள
திடுக்கிட்டு எழுந்தமர்ந்தேன்!
திக்பிரமை அடைந்துவிட்டேன்!

கண்டது கனவுதானா.....?
கைகளை கிள்ளிப் பார்த்தேன்!
ஏனிந்தத் தீங்கனவு
எனக்கின்று தோன்றியது....?

தவறெதுவும் செய்தேனா....?
தலைவருக்குக் கோபம் வர?
சிந்தனைகள் என் மனத்தில்
சந்தையெனக் கூடினவே!

கூட்டங்கள் எதிலும்
நாட்டம் கொள்வதில்லை!
மத்திய அரசைப் பற்றி,
சத்தியமாய்ப் பேசவில்லை!
சாதனைகள் செய்தேனெனத்
தம்பட்டம் அடிக்கவில்லை!
உட்கட்சி பூசலிலும்
ஒதுங்கித்தான் இருக்கின்றேன்!

அவசரம் செய்ய வேண்டும்
அவசிய வசதிகளையென்று
சொந்தத் தொகுதிக்காய்
யாரையும் —
தொந்தரவு செய்யவில்லை!

இலங்கைத் தமிழரைக்
காப்போம்....!
இந்தித் திணிப்பை
எதிர்ப்போம்....!
என்று
மறந்து கூடப் பேசத்
திறந்ததில்லை வாயை....

உண்மையாய் உழைப்பவர்கள்
பதவியில்
உட்கார முடியாது!
இந்த —
அரசியல் (அ)நீதியை
அப்பொழுதே அறிந்தவன் நான்!

அதனால்தான்....
இருக்கும் இடம் தெரியாமல்
இருந்து வருகின்றேன்!
தலைவரின் —
திருப்புகழை மட்டுமே
தினமும் ஓதுகின்றேன்!

பின்பு.....
ஏனிந்தத் தீங்கனவு
எனக்கின்று தோன்றியது?
தூக்கம் எங்கேயோ
தொலைதூரம் ஓடிவிட
துக்கம் வந்து
என் —
பக்கத்தில் அமர்ந்தது!

— நெய்வேலி கே. இராமசாமி



மாதம் ஒரு மாவட்டம்



கல்கி ஏற்கும் சமுதாயப் பணி

இந்த மாதம்

வ.உ.சி. மாவட்டம்!

தூத்துக்குடியின் முத்து. உலக சரித்திரத்தில் இடம் பெற்ற ஒன்று. ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து, முதன்முதலில் இந்தியர்களின் சொந்தக் கப்பல் ஓடிய பெருமையும் தூத்துக்குடி துறைமுகத்துக்கே உண்டு. இப்படி உலகளாவிய சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கும் தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்டதுதான் வ.உ.சி. மாவட்டம். ஆனாலும் உலகளாவிய பெருமைகளோடு ஊரளாவிய பிரச்னைகளும் இல்லாமல் போய்விடுமா என்ன!

அதனால்தான் கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப் பணியில், பதினெட்டாவது மாவட்டமாக வ.உ.சி. மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். எனவே, வ.உ.சி. மாவட்டம் முழுவதிலும் உள்ள பிரச்னைகள் அல்லது அவரவர் ஊர்ப் பிரச்னைகள், இல்லையெனில் தனி மனிதர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் ஆகியவற்றோடு, அரசியல்வாதிகளுடைய – அமைச்சர்களுடைய – அதிகாரிகளுடைய மெத்தனப்போக்குகளையும் பராமுகங்களையும் சுருக்கமாக எழுதி, உங்கள் தெளிவான முழு முகவரியோடு கல்கி அலுவலகத்திற்கு அனுப்புங்கள். கூடவே, உங்கள் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள சாதனைகளையும் எழுதலாம்.

கல்கி அலுவலகத்திற்கு வரும் உங்கள் ஒவ்வொருவருடைய கடிதமும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, அவற்றில் முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுத்து, செப்டம்பர் மாத மத்தியில் நமது கல்கி பிரதிநிதிகள் வ.உ.சி. மாவட்டம் முழுமையும் சுற்றுப் பயணம் செய்வார்கள். உங்களைச் சந்தித்துப் பேசுவார்கள். அவர்கள் வரும் தேதி பற்றிய முழு விவரங்களும் பின்னர் தனித் தனிக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்படும்.

சுற்றுப் பயண முடிவில், கல்கி பிரதிநிதிகள், வ.உ.சி. மாவட்டக் கலெக்டரைச் சந்தித்துத் தாங்கள் சேகரித்த பிரச்னைகளுக்குரிய விஷயங்களைப் பற்றிப் பேசி விவாதித்துப் பதில்களைப் பெறுவார்கள். அவையெல்லாம் அக்டோபர் மாதக் கல்கி இதழ்களில் செய்திகளாகவும் பேட்டிக் கட்டுரைகளாகவும் புகைப்படங்களாகவும் பிரசுரமாகும்.

எல்லாப் பிரச்னைகளைப் பற்றிய செய்திகளையும் பிரசுரித்துவிட முடியாது என்பது உண்மைதான் என்றாலும் நியாயமான பிரச்னைகள் அத்தனையும் மாவட்டக் கலெக்டரிடமும் சம்பந்தப்பட்ட மற்ற அதிகாரிகளிடமும் எடுத்துச் சொல்லப்படும். அதன் மூலம் அரசின் கவனத்தையும் அதிகாரிகளின் கவனத்தையும் திருப்ப முடியும். இவற்றோடு, வாழ்க்கையின் பிரச்னை மிகுந்த பகுதிகளையும் அன்றாட அவலங்களையும் சமூக விரோதிகளின் அட்டகாசங்களையும் மோசடிகளையும் அனைவருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டுவதன் மூலம், நமது சகோதர மக்களிடமும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வழிகோலலாம் அல்லவா! எனவே, உடனடியாக எழுதியனுப்புங்கள்.

வ.உ.சி. மாவட்டம் பற்றிய பிரச்னைகள், அநீதிகள் தவிர, சாதனைகளும் முன்னேற்றத்துக்கான ஆலோசனைகளும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 20.8.87.

உறையின்மேல் 'மாதம் ஒரு மாவட்டம் — வ.உ.சி.' என்று மறக்காமல் குறிப்பிடுதல் அவசியம்.

— ஆசிரியர்

(பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் பற்றிய பரபரப்பூட்டும் செய்திக் கட்டுரைகளும், பேட்டிக் கட்டுரைகளும், புகைப்படங்களும் ஆகஸ்டு 23, 30 தேதியிட்ட இரு கல்கி இதழ்களிலும் வெளியாகும்.)

கரு படிந்த நிழல்!



"என்னய்யா இது அக்கிரமமா இருக்கு? நிஜமாகவா சொல்றே?"

"ஆமாம் சார்!"

"அந்த வினோத்குமாருக்கு அப்படி என்னய்யா என் மேலே கடுப்பு?"

"எல்லாம் 'பாப்புலாரிட்டி' விஷயம்தான் சார்! நம்ம ரசிகர் மன்றங்களோட எண்ணிக்கை, நாளுக்கு நாள் ஏறிக்கிட்டுப் போறதை அவராலே தாங்க முடியலே! அதுதான் இப்படி ஒரு புரளியைக் கிளப்பிவிட்டு, அதிலே குளிர்காயலாம்னு பார்க்கிறாப்பலே..."

"சரி...! அவன்தான் ஏதோ பொறாமையிலே சொல்றான்னுக் கேட்கிறவங்களுக்கு அறிவு எங்கேய்யா

எம்.ஏ.சுசீலா







குண்டு கல்யாணம் ஒரு முறை தெருவில் போய்க் கொண்டிருந்தார். வழியில் எடை பார்க்கும் மெஷின் ஒன்றைப் பார்த்தார். எடை காட்டும் அட்டை தன் அதிர்ஷ்டம் பற்றி என்ன சொல்கிறது என்பதை அறிய ஆசை. மெஷினில் ஏறி நின்றார். அட்டை வந்து விழுந்தது. அதில் குறித்திருந்தது: "ஒவ்வொருவராகஎடைபாருங்கள், கூட்டமாக ஏற வேண்டாம்!"

— ஆர். ஆர். பூபதி

போச்சு? எனக்குக் குழந்தை இல்லேங்கிறது, என்னோட தனிப்பட்ட பிரச்னை.... சொந்த சமாசாரம்! அதுக்கும்... நான் ஹீரோவா இருக்கிறதுக்கும் ஏன் முடிச்சுப் போடணும்?"

"பப்ளிக் லைஃப்னு ஒண்ணு ஏற்பட்டுப் போனப்புறம்...."

"...... தனிப்பட்ட விவகாரம், 'ப்ரைவசி'ன்னு ஏதும் கிடையாதுன்னு சொல்றியாக்கும்! அப்படியே வச்சுக்கிட்டாலும் கூடக் கல்யாணமானப்புறம் கவர்ச்சி குறைஞ்சு போச்சு... பிள்ளையும் பொறந்த பிறகு மார்க்கெட்டே படுத்துப் போச்சுன்னு சொன்னாலும் ஏதோ ஒத்துக்கலாம்....! அது தானேய்யா இந்த 'ஃபீல்டி'லே வழக்கம்?"

"அதெல்லாம் நடிகைகளுக்குத்தாங்க! ஒரு 'ஆக்ஷன் ஹீரோ'வா இருந்தா — அதுவும் கல்யாணமானவனா இருந்திட்டா... அவனுக்குக் குழந்தைங்க இருக்குதான்னு பார்க்கிறதிலேதான் இப்பல்லாம் ஜனம் கவனமா இருக்கு! இல்லேன்னா....வேண்டாதவங்க, இப்படித்தான் ஏதாவது கிளப்பி விட்டுடுவாங்க! பார்த்துக்கங்க.... உங்க 'ஹீரோ' வெள்ளித் திரையிலே வீரம் காட்டத்தான் லாயக்கு.... அப்படி இப்படின்னு."

"போதும் போதும்! இந்த வதந்திகளை எப்படியாவது உடனடியா நிறுத்தியே ஆகணும்! ஹ்ம்...! என்ன செய்யலாம்? ஒரே ஒரு வழி இருக்கு....! கடைசியா, அதையும் முயற்சி பண்ணிப் பார்த்திட வேண்டியது தான்! வர வர... இவளோட கொட்டமும் அதிகமாகிக்கிட்டே போகுது! இந்தச் சாக்கிலே அதையும் அடக்கினாப்பிலே இருக்கும்!"

"யாருங்க? அம்மாவா?"

"ஆமாம்! அ...ம்...மாதான்! என்னை என்னவோ, இவளுக்கே உரிய ஏக போக சொத்தா நினைச்சுக்கிட்டு, ஏகப்பட்ட கண்டிஷன் போடறா! கூடவே வந்து காவல் இருக்கிறா....! சதி விரதனா நான் இருக்கணும்னு எதிர்பார்க்கிறா போல....! நல்லவேளை... இந்த வழியைப் பயன்படுத்தினா.... அவளைக் கழட்டி விடவும் ஒரு 'சான்ஸ்!' ஒரே கல்லிலே.... இரண்டு மாங்காய்...."

"அட, இதென்ன அதிசயமா இருக்கு? பிரபல கவர்ச்சி நடிகர் கேவல்குமார், தன்னோட 'பிஸி ஷெட்யூ'லுக்கு நடுவிலே... அதுவும் ஒரே வாரத்துக்குள்ளே மறுபடியும் இந்த சுதர்மாவைத் தேடிக்கிட்டு ஹைதராபாத்வரைக்கும் வரணும்னா.... அதுக்கு நான் என்ன பாக்கியம் செஞ்சிருக்கேன்?"

"கிண்டல் எல்லாம் போதும் சுதர்மா! ஐ ஆம் சீரியஸ்! ராத்திரி ஃப்ளைட்லே திரும்பியாகணும்!"

"என்ன கேவல்....? எனி பிராப்ளம்?"

"சுதர்மா....! போன வாரம் நான் இங்கே வந்தப்ப, ஆஸ்பத்திரிக்குப் போகணும்னு ஏதோ சொல்லிக்கிட்டு இருந்தியே... போயிட்டு வந்தாச்சா?"

"இல்லே கேவல்! நாலு நாளா செகந்தராபாதிலே ஒரு தெலுங்குப் பட ஷூட்டிங்! வேலே சரியாப் போச்சு! கூட வரவும் யாருமில்லே....! நல்லவேளை, இன்னிக்கு நீ வந்திருக்கே! என்னோட துணைக்கு வர்றியா? இன்னிக்கே முடிச்சிடுவோம்!"

"வேண்டாம் சுதர்மா....! நீ அதைக் கலைச்சுக்காதே...."

"கலைச்சுக்காமே....? அதை.... வயத்திலேயே வளர விடச் சொல்றியா? பத்து மாசம் கழிச்சு.... அப்பன் பெயர் தெரியாத குழந்தையா அதைப் பெத்துக்கச் சொல்றியா?"

"நான் அதுக்குத் தகப்பனா இருக்கேன்! உங்க ரெண்டு பேருக்கும் வாழ்க்கை பூரா வேண்டிய முழுப் பொறுப்பையும் நான் ஏத்துக்கிறேன்! இந்த நிமிஷமே தெலுங்குப் பட உலகத்துக்கு முழுக்குப் போட்டுட்டு என்னோட கிளம்பி வர உன்னாலே முடியுமா?"

"கேவல்....!என்னபேசறோங்கிறநிதானத்திலேதான் நீ பேசறியா....? அது யார் குழந்தைன்னு உனக்குத் தெரியுமா....? பட வாய்ப்புக்காக என்னைப் பலியாக்கின எவனோ ஒரு முகம் மறந்து போன கிராதகனோட வாரிசை நான் ஏன் சுமக்கணும்? அதுக்கு நீ ஏன் பொறுப்பு ஏத்துக்கணும்?"

"ஃபர்கெட் இட் சுதர்மா! அது யார் குழந்தைங்கிறதைப் பத்தி எனக்கு அக்கறையில்லே! இந்த நிமிஷத்திலே இருந்து.... அது என் குழந்தை! நம்ம குழந்தை! ஒரு மனைவிக்குரிய சகலவிதமான அந்தஸ்துகளையும் உனக்கு நான் கொடுக்கத் தயாரா இருக்கேன்! என் கூடக் கிளம்பு!"

அண்ணி....! இந்தக் கொடுமையை நீங்க எப்படித் தாங்கிக்கிட்டீங்க? நான் கேவல்குமாருடைய தங்கைதான்! ஆனால்... ஊராரைப் போல.... உறவுக்காரங்களைப் போல... அவரோட கேவலமான நடத்தைகளைக் கூடக் கண்ணை மூடிக்கிட்டு ஆதரிக்கிறவ இல்லே!"

"கமலா.... இப்ப எதுக்கு இப்படி ஆவேசப்படறே? வெறும்கோபப்படறதாலே எதைச் சாதிக்க முடியும்?"

"அண்ணி....! அண்ணனுக்கு ஒரு விபத்து ஏற்பட்டதும், அதனாலே அவருக்குக் குழந்தையே பிறக்காதுங்கிறதும் நம்ம குடும்பத்திலே

எல்லாருக்கும் தெரியும்! அதுக்கும்கூட உடன் பட்டுத்தான்.... நீங்க அவரையே விரும்பிக் கல்யாணம் செஞ்சுக்கிட்டீங்க! உங்களுக்குப் போய் இப்படி ஒரு துரோகமா? இந்த உண்மையை வெளியே சொல்ல உங்களுக்கு எவ்வளவு நேரமாகும்னு அண்ணன் நினைச்சாவது பார்த்தாரா?''

''சொல்ல மாட்டேன்... சொன்னாலும் எடுபடாதுன்னு ஒரு நம்பிக்கைதான் அவருக்கு....

''இப்ப.... அவரோட இந்தச் செயலாலே உங்களுக்குத்தானே அண்ணி... மலடிங்கிற பட்டம் ஏற்பட்டுப் போச்சு...?''

''அதனாலே அவருக்கு என்ன நஷ்டம் கமலா? லட்சக்கணக்கான-ரசிகர்கள்ங்கற லாபக்கணக்குக்குமுன்னாலே,என் ஒருத்திக்கு ஏற்படப் போற அபவாதத்தைப் பத்திக் கவலைப்படக் கூட அவருக்கு நேரம் இருக்குமா.... என்ன?''

''அண்ணி.... இதை இப்படியே விட்டுடக் கூடாது! நான் உங்களுக்குத் துணை வரேன்! அண்ணனை விவாகரத்துப் பண்ணின கையோட, வேறே கல்யாணம் பண்ணுங்க! உங்களுக்கு அப்புறம் குழந்தைங்க பிறக்கிறதிலே எந்தத் தடையுமில்லே! அண்ணன் மூஞ்சியிலேயும் கரி பூசினாப்பிலே இருக்கும்!''

''அடி அசட்டுப் பெண்ணே! அப்படி நான் செய்தேன்னாலும்... அது. அவங்க தரப்புக்கு இன்னும் சாதகமாயிடாதா? என் பெண்டாட்டி முன்னாலேயே நெறி தவறினவ.... அதைத் தெரிஞ்சுக்கிட்டுத்தான் நான் இப்படிச் செய்தேன் பார்த்துக்கங்கன்னு, தன்னோட செய்கையை நியாயப்படுத்தி உங்கண்ணு பிரசாரம் செய்ய.... அதுவும் ஒரு வாய்ப்பாயிடாதா சொல்லு....

''அப்படியும் ஒரு கோணம் இருக்கிறதை நான் நினைச்சுப் பார்க்கலே அண்ணி!''

''கமலா! உங்க அண்ணு குறையில்லாதவரா இருந்து, அவரோட குழந்தையும் சுதர்மா வயிற்றிலே வளர்றதா இருந்து, அந்த நிலையிலே, அவங்க ரெண்டு பேரையும் அவர் தைரியமா ஏத்துக்கிட்டிருந்தார்னு, அப்ப.... அவரோட அந்தச் செய்கையை நானும் மதிச்சு வரவேற்றிருப்பேன்! ஆனா... அப்படிப்பட்ட நிஜமான வீரத்தை... நெஞ்சுரத்தை, ஆண்மையைக் காட்ட, இப்ப எந்த ஆடவனும் தயாராக இல்லே! இல்லாத நிழல்களை எப்படி விசுவரூபமாக்கிப் பெரிசுபடுத்திக் காட்டறதுங்கிறதுதான் இப்ப இவங்க கவலையெல்லாம்! இந்த நிலையிலே.... இன்னமும்கூட அவரோட பணத்துக்காகவும், அது தர சுகங்களுக்காகவும் அவரோட ஒட்டிக்கிட்டு வாழாம, விலகிப் போறதுன்னு முடிவு செஞ்சிருக்கேனே... அதுதான் என்னாலே இப்ப செய்யக் கூடிய காரியம்! கறைபடிஞ்சு போயிருக்கிற அந்த ஆண்மையின் நிழலிலே தங்காம.... அவர் தரப் போற ஜீவனாம்சத்தைக்கூடத் துச்சமா ஒதுக்கிட்டுப் போகப் போறேனே.... அதுதான், என்னோட பெண்மைக்கு நான் அளிக்கக் கூடிய மகத்தான கௌரவம்!''

அடுத்த இதழில்...

வேலைக்குப் போகும் பெண்கள்; நாட்டை உயர்த்தும் கரங்கள்!

-கவர்ஸ்டோரி



முன் கதைச் சுருக்கம்:

லலிதாவும் முரளியும் திருமணமாகிப் பத்து வருடங்களுக்குப் பிறகு தாங்கள் மனத்தளவில் விலகியே இருப்பதை உணர்கிறார்கள். குழந்தைகளை உத்தேசித்துச் சட்டப்படி பிரியாமல், ஒரே வீட்டில் உடலாலும் மனத்தாலும் பிரிந்து வாழத் தீர்மானிக்கிறார்கள். ஒரு மழைநாள் மாலையில் முரளியின் பழைய நினைவுகள்......

தாம் வேலை பார்க்கும் நிறுவனத்திலேயே தனக்கும் வேலை வாங்கிக் கொடுத்த சங்கரனின் பெண் லலிதாவைக் கல்யாணம் செய்துகொள்ளச் சிறிது சங்கடத்துடன் சம்மதிக்கிறான் முரளி. பழகப் பழக லலிதா வித்தியாசமானவளாய், அறிவிலும், அந்தஸ்திலும் தன்னிலும் மிகவும் உயர்ந்தவளாய், மாறுபட்ட ரசனைகள் உள்ளவளாய் முரளிக்குத் தோன்றுகிறாள். திருமணம் அட்டகாசமாக நடந்தாலும் முரளிக்குத் தான் ஏய்க்கப்பட்டதாக அவ்வப்போது ஓர் உணர்வு தோன்றி வாட்டுகிறது. முரளிக்கு அப்பா இல்லை. அம்மாவுடன் ஒண்டுக்குடித்தன வீட்டில் வசித்து வருகிறான். அந்த இடம் புதுமணத் தம்பதிகளுக்குத் தேவையான தனிமையைத் தராது என்பது நிதர்சனம். திருமணம் முடிந்த மறுநாள் சம்பந்தி வீட்டிற்கு வந்து முரளியின் அம்மா அனைவரையும் விருந்துக்கு அழைக்கிறாள். சங்கரனின் விருப்பப்படி அவர்கள் கம்பெனி எம். டி. யும் அழைக்கப்பட, முரளியின் ஒண்டுக்குடித்தன வீட்டில் விருந்து நடந்தேறுகிறது.



நிழல் யுத்தம்

17

பகல் தூக்கம் போல் சுகம் உலகத்தில் எதுவும் இல்லை. கனமான உணவுக்குப் பிறகு கையலம்பி, பாக்கு போட்டு, ஹால் நாற்காலியில் பறக்கிற மின்விசிறிக்குக் கீழ் உட்கார, மெல்ல மெல்ல ஒரு மயக்க மருந்து போல் தாக்கி, கண்ணில் வந்து தூக்கம் முட்டுகிற நேரம் அற்புதமானது. ஒரு தலையணை இழுத்துப் போட்டு, வெறும் தரையில் திறந்த முதுகு பட, உடம்பு கிடத்தி, கண்களில் மெல்லிய சரிகைத் துண்டு போர்த்திப் படுக்க, கொண்டே போய்விடும். பேச்சா, கூச்சலா, இடியா எதுவும் கேட்காத நிம்மதியான தூக்கம் அது.

கண்விழித்தபோது நாலு மணியாகியிருந்தது. லலிதா அருகே தலையணை மட்டும் போட்டுப் படுத்துக் கொண்டிருந்தாள். அம்மா சமையலறையிலேயே மணைக்கட்டை போட்டுச் சுருண்டு கிடந்தாள்.

இவன் மல்லாக்காகத் திரும்பினதும் லலிதா சரக்கென்று எழுந்திருந்தாள்.

''எழுந்துட்டேளா? நானே எழுப்பணும்னு நினைச்சேன்.''

''கண்ணை இழுத்துண்டே போயிடுத்து. நீ தூங்கலை?''

''ம்ஹூம்.''

''ஏன் புது இடம்கிறதாலயா?''

''அதெல்லாமில்லை. யோசிச்சுண்டே படுத்துண்டிருந்தேன். தூக்கம் வரலை. அப்புறம் பகலில் தூங்கினால் உடம்பு சட்டுன்னு பருத்துடும். அதனாலேயே தூங்கறதில்லை. காப்பி போடவா?''

''இரு. அம்மா தூங்கறா. நீ எழுந்திருந்தால் அவளும் எழுந்து விடுவாள்.''

''அப்ப காப்பி வேண்டாமா?''

''ஓசைப்படுத்தாது போடுவியா?''

''நாலாயிடுத்தே...!''

''அதனால் என்ன.... இன்னும் அரை மணி போகட்டும்.''

''கிளம்ப வேண்டாமா?''

''எங்கே...?''

''நம்ம வீட்டுக்கு.''

''நம்ம வீடா?''

''சரி, அப்பா வீட்டுக்கு.''

''அங்கேயிருந்து துணி மணி ஏதாவது எடுத்துண்டு வரணுமா?''

''இல்லை.''



''அப்புறம்....?''
''ராத்திரி அங்கேயே தங்கிடலாம்.''
''ஏன்?''
''இங்கே வசதி இல்லையே.''

முரளி கொஞ்சம் குழம்பினான். 'சொச்ச காலத்துக்கும் தகப்பன் வீட்டிலேயே நீ படுத்துக் கொள்ள முடியுமா, லலிதா?' என்று மனசுக்குள் வினவினான். ஆனால் கேட்பதற்கு முன்பு யோசிப்பது நல்லது. மனைவியின் பிரச்னை என்ன என்பது புரிந்து கொள்வது நல்லது.

'ஒன்றும் வேண்டாம், இங்கேயே இருக்கலாம்' என்று ஒரு வார்த்தையில் கட்டளையாய்ச் சொல்லிவிடலாம். கட்டளைகள் கசப்புக் கொடுப்பவை. இப்போதே கசந்து கொள்ள வேண்டுமா? கட்டளை போட்டுக் கம்பீரம் காட்டி, கம்பீரம் மறுக்கப்பட்ட போது கவலைப்பட்டு, கவலையில் புழுக்கம் வந்து, புழுக்கம் அலட்சியம் தர, நான், எனது என்று இரண்டு பேரும் பேச வேண்டுமா?'

'பேசலேன்னு வைச்சுக்கோ, ஓர் உருட்டு உருட்டி முழுங்கிடப் போறா, உன்னை!' உன் மனம் கொச்சையாய்க் கேலி பேசிற்று.

''உன் பீரோ சாமான் வைக்கிறதுக்கு இடம் போறாதுங்கிறயா?''

''எதுக்கும் போறாதுதான். சின்ன வீடு தானே...''

''இதே வீடு, வெளியே ஐந்நூறுக்குக் கேட்பான். இன்னும் பெரிசாப் பார்த்தால் ஆயிரம் ஆயிரத்து நூறு.''

''எதுக்குப் பார்க்கணும். கடல் மாதிரி அப்பா இடம் இருக்கு.

''அங்கேயே இருக்கலாம்கறியா?''
''என்ன சிரமம்?''
''அம்மா...?''
''எங்கே வேணா இருக்கட்டும்.''

''எங்கே வேணாம்னா....?'' முரளி குரலில் கொஞ்சம் சீற்றம் கூடிற்று.

லலிதா பேசாமலிருந்தாள்.

''எனக்குப் புரியலே, லலிதா!''

லலிதா எழுந்து தலையணையை எடுத்து வைத்தாள். நகர்ந்து சமையலறைக்குப் போனாள். நாலைந்துமுறை லைட்டரை 'க்ளிக்' செய்து காஸ் அடுப்பைப் பற்ற வைத்தாள். தண்ணீர் குடத்திலிருந்து வால் கிண்ணத்தில் நீர் ஏந்தி அடுப்பில் வைத்தாள். அம்மா விழித்துக் கொண்டான்.

''காப்பி போடறயா பொண்ணே?''
''ம்ம்...''
''பால் வந்துடுத்தோ?''
''தெரியலே.''

பாலகுமாரன்



''ஒன்பது ஆட்கள் செய்ய வேண்டிய வேலையை நான் ஒருவனே செய்துடுவேன்! ஆனா ஒரு கண்டிஷன்!''

''என்ன அது?''

''செய்து முடிக்கப் பதினெட்டு நாட்கள் ஆகும்!''


— மணியன் தர்மலிங்கம்.

''உங்க பேங்க்கில் நகை லோன் தர்றீங்களாமே?''

''ஆமாங்க......?''

''எனக்கு, அங்க பவுன் நகை வாங்க ஒரு லோன் வேணும்!''

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா



''நான் போய்ப் பார்க்கிறேன்'' கிழவி எழுந்து கையூன்றி நிற்க, பால் பைகள் வைக்கப்பட்டன.

''வந்துடுத்தே.... காய்ச்சிடு.''

பால் பை நறுக்கப்பட்டு, பாத்திரத்துக்கு மாற்றப்பட்டு மணம் சுழன்று எழுந்தபோது இறக்கப்பட்டது.

''உன் சாமான் செட்டு எப்ப வர்றது?'' அம்மா ஹாலுக்கு நகர்ந்து கதவோரத் துடைப்பத்தை எடுத்தாள்.

''தெரியலை.''

''படுக்கையாவது கொண்டு வந்து போடச் சொல்லு, உங்கப்பாகிட்டே.''

''நாங்கள் அங்கே போறோம்.''

அம்மா துணுக்குறுவது தெரிந்தது.

''ஏன்...? வீட்டிலே இல்லையா....? நகரு, நகரு! சொன்னால் நான் காப்பி போட மாட்டேனா?'' அம்மா துடைப்பத்தைப் போட்டுவிட்டுச் சமையலறைக்கு விரைந்தாள்.

''அதெல்லாமில்லை'' லலிதா குரலில் அலுப்பு தெரிந்தது. ''இதைவிட அங்கே சௌகர்யம்னு சொன்னேன்.''

''சௌகர்யம் குறைவுதான். இரண்டு மூணு பேர் புழங்க முடியாது! ஹால், சமையல் அறை, படுக்கை ரூம்... போறாதா?''

''எனக்குக் கஷ்டம்.''

அம்மா ஹாலுக்கு வந்தாள். ''முரளி சரின்னுட்டானா?''

''கேட்டிருக்கேன். என்னன்னு தெரியலை.''

''எழுப்பிக் கேளேன்.''

''என்னம்மா....'' முரளி எழுந்திருந்தான். முடிவு செய்ய வேண்டும். ஏதாவது முடிவு செய்ய வேண்டும். முடிவு செய்யும் பொறுப்புகள் என்றும் ஆணிடம்தான் உண்டு. ஆள் ஆளுக்குப் பெண்கள் காயை நகர்த்திவிட்டு நிற்பார்கள். எதுவும் எங்கும் உரசாமல் ஆட்டத்தில் ஜெயம் காட்ட வேண்டியது ஆண்தான். ஆனால் என்ன முடிவு எடுப்பது என்பதுதான் தெரியவில்லை.

''இன்னிக்கு அங்கே போறேம்மா. நாளைக்கு வந்து என்ன ஏதுன்னு பேசறோம்.''

''பேசறதுக்கு என்னடா இருக்கு?''

''இடம் சிறிசுன்னு அபிப்ராயப்படறா.''

''அதுக்கு...?''

''வேறே இடம் பார்க்கணும். இல்லேன்னா....''

சகலரும் மௌனமாய் இருந்தார்கள்.

''லலிதாவுக்கு அங்கேயே குடித்தனம் பண்ண ஆசையா இருக்கோ?''

''கடல் மாதிரி வீடுங்கறா.''

''இருக்கட்டும்.''

''இரண்டாயிரத்து ஐநூறுல ஆயிரம் ரூபா வீட்டு வாடகைன்னா எனக்குக் கஷ்டம்.''

''நீயும் போறேங்கிறாயா?''

''அப்படி ஒண்ணும் முடிவு பண்ணிவிடலை.''

அம்மா சுவரோரம் உட்கார்ந்தாள். தரையில் கையூன்றித் தன் கட்டை விரலையே வெறித்தாள். மௌனம் சுத்தியலாய் கோப உளியை உள்ளே அடித்து, வீட்டைப் பிரித்துக் கொண்டிருந்தது.

''நீ போய்க்கோ!''

''அம்மா....''

''நீ போய் அங்கே இரு.''

''நீ...?''

''நன்றாயிருக்காது.''

''ஏன்?''

''சம்பந்தி வீட்டில் ஒரு நாள் சாப்பிடலாம். இரண்டு நாட்கள் கையலம்பலாம். அப்புறம் மரியாதையாக இருக்காது.''

''நான் சம்பாதிக்கிறேன். நீ சாப்பிடறே.''

''வாடகையா கொடுப்பே?''

''அதுவும் கேட்டார்னா கொடுக்கலாம்!''

''கேட்க மாட்டார். கேட்டா அவருக்கும் அசிங்கம். கொடுக்காத நான் போய் உட்கார்ந்தால் எனக்கு அசிங்கம்.''

''சரி... நாளைக்கு அதைப் பற்றி யோசிப்போம்.''

''நீ போயிடு.'' அம்மா தீர்மானமாய்ச் சொன்னாள்.

''போயிடு போயிடுன்னா முடிவா பண்ணிட்டேன்?''

''எனக்கு இஷ்டமில்லை.''

''எதில்?''

புற்று நோய்க்கு ஆயுர்வேத சிகிச்சை



ஐந்து குழந்தைகளின் அன்னை, நாற்பது வயதான கரீம் நகரைச் சேர்ந்த படேல் சத்தியம்மாவான எனக்கு, வெள்ளை அணுக்கள் வெளிப்படுதலில் பத்து வருடத்திற்கு முன்னால் எனக்கு வயிற்றில் வலி யிருந்தது. இதன் பிறகு நடத்திய சோதனைகளில் டாக்டர் செர்விக்ஸ் சம்பந்தப்பட்ட புற்றுநோய் என்று கண்டறிந்தனர். பலவித ஆலோசனைகள் மற்றும் மருந்துகளிலும் தோல்வியுற்ற பிறகு டாக்டர் பாபுராவின் ஆயுர்வேத வைத்திய சிகிச்சை முறையைப் பற்றிக் கேள்வியுற்றேன். கடைசி முறையாக டாக்டர் பாபுராவின் உதவியை நாடினேன். அவரது பன்னிரண்டு வாரங்கள் ஆயுர்வேத சிகிச்சைக்குப் பிறகு எனக்குப் புது வாழ்வு மலர்ந்தது.

இப்பொழுது நான் புற்றுநோயின் அறிகுறிகளிலிருந்து முழுவதும் விடுபட்டு சந்தோஷமான இயற்கை வாழ்வை நடத்தி வருகிறேன். நானும் எனது குடும்பத்தினரும் இந்தப் பத்திரிகையின் வாயிலாக எங்களது மனமுவந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். நாங்கள் பாபுராவுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

படேல் சத்தியம்மா
குவார்ட்டர்ஸ் நெ. 137, சுபாஷ் நகர்,
புட்டி ராஜாராம் காலனி, கரீம் நகர்.

விலாசம்	போன் நெம்	பார்க்கும் கிழமை
தலைமை அலுவலகம் கேன்ஸர் இன்பர்மரி 1-1-271/3 சிக்கட்பள்ளி, ஹைதராபாத் — 500 020.	64735	பிரதி வியாழன் & வெள்ளி
C/o. ஹோட்டல் சுதாரா உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை—600 017.	445164	பிரதி சனி
C/o. ஹோட்டல் பிருந்தாவன், எம்.ஜி. ரோடு, பெங்களூர் — 560 001.	573271	பிரதி ஞாயிறு
C/o. ஹோர்ட்டல் மிட்—டௌன் அந்தேரி ரயில்வே ஸ்டேஷன் எதிரில் (மேற்கு), பம்பாய்.	628882	பிரதி புதன்



அருள்வாக்கு

தர்மம் செய்தால் பிரதியாகப் பொருள் கிடைக்கிறது. அந்தப் பொருளைக் கொண்டே மறுபடி தர்மம் செய்யலாம். இப்போது அர்த்தமே தர்மம் செய்ய ஸாதனமாக இருக்கிறது. இன்பம் ஒன்றுதான் தன்னுளும் நிறைவுபடுவதில்லை; பிறவற்றுக்கும் ஸாதனமாக இருப்பதில்லை. கொதிக்கிற மணலில் விட்ட ஜலம் உடனே கவறிப் போவது போல் 'இன்பம்' என்பது தன்னுளும் நிறைவின்றி வேறெதுக்கும் ஸாதனமாகவும் இன்றி, தர்மசிந்தனை, பொருள், மோக்ஷம் எல்லாவற்றையும் நாசம் பண்ணி விட்டுத் தானும் நசித்துப் போகிறது.

ஆனாலும் இன்பத்தை இப்போதே விட்டுவிடு என்றால் முடிய மாட்டேன் என்கிறது. அதை அடியோடு விடாமல் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்படுத்தித் தரவும், பிறகு படிப்படியாக இந்தச் சிற்றின்பத்திலிருந்து பேரின்பத்துக்கு அழைத்துச் செல்லவுமே மதம் என்பது ஏற்பட்டிருக்கிறது. முதலில் இதுதான் அறம் என்று சொல்லி, அதைச் செய்வதற்காகவே எப்படிப் பொருள் ஈட்ட வேண்டுமோ, அந்த நியாயமான முறையைச் சொல்லி, அதனால் இன்னின்ன இன்பங்களைப் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்று பக்குவம் வருகிற வரையில் கிரமப்படுத்திக் கொடுத்து, அப்புறம் இந்தச் சின்ன இன்பங்களையெல்லாம் தொலைத்து நிரந்தர இன்பமான வீடு என்கிற மோக்ஷத்தைக் காட்டுவதே மதம்.

பந்தத்திலிருந்து விடுதலை பெற்று, ஆத்மா பூரணச் சுதந்திரத்துடன் எந்நாளும் ஆனந்தமாக இருக்கிற நிலையே மோக்ஷம். இதை நமக்குக் கிட்டச் செய்வதற்கே மதம் என்பது ஏற்பட்டிருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

''இன்னிக்கு அங்கே போறதில்...'' முரளி இருதலைக்கொள்ளி எறும்பு பார்த்ததில்லை; ஆனால் இன்று புரிந்து கொண்டான்.

லலிதா காப்பி டம்ளர்களை எடுத்து உள்ளே வந்தாள். தரையில் வைத்தாள்.

''இங்கே வந்துட்டு, உடனே போனால் அக்கம்பக்கம் தப்பாப் பேசும். இன்னிக்கு இங்கேயே இரு.''

''நாளைக்கு....?''

''பிழைச்சுக் கிடந்தா நாளைக்குப் பார்த்துக்கலாம். அந்த மனுஷர் சம்பந்தம் பேசறபோதே வந்த சந்தேகம், சரியாயிடுத்து!''

லலிதா கதவோரம்நின்றபடி அம்மாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''எங்கள் வீட்டில் என்ன கஷ்டம் உங்களுக்கு? அங்கே யாரும் எதுவும் சொல்லப் போறதில்லை.''

''அங்கே யாரும் சொல்ல மாட்டார்கள். ஊர் வம்பு பேசும்.''

''பேசட்டும். நமக்குச் சௌகர்யம் எதுவோ....''

''என் சௌகர்யம் இந்த வீடுதான்.'' கிழவி தீர்மானமாய்ப் பேசுவதில் கோபம் தெரிந்தது.

''எதுக்கும்மா கோபப்படறேள்...'' லலிதா அவள் எதிரே உட்கார்ந்தாள்.

''கோபமில்லை பொண்ணே.' அது சரியில்லை!''

''அது எனக்குச் சொந்தமாகப் போற வீடுதானே. நீங்கள் வந்து இருங்கோளேன்.''

''எம்புள்ளை வீட்டில் இருக்கிறதுதான் நல்லது லலிதா. உனக்கு இங்கே என்ன கஷ்டம்?''

''பிரைவசி இல்லை.''

''புரியலை.''

''நான் எப்படிச் சொல்றது?''

''நான் சமையல் ரூம்ல படுத்துக்கறேன். நீங்க படுக்கை ரூம்ல இருப்பேள்!''

''அது மட்டுமா....?

''அப்புறம்?''

''நான் வேறே.... நீங்க வேறே... என் குடித்தனம் வேறே மாதிரி, உங்க குடித்தனம் வேறே மாதிரி.''

''ஏன்? அப்படி என்ன புதுசா வேறேயாப் பண்ணப் போறே குடித்தனம்...? நாங்க பண்ணாத குடித்தனம்.''

லலிதா தன் காப்பி டம்ளரை நீட்டினாள். ''என்னுது ப்ளாக் காப்பி... உங்களுக்கு ப்ரௌன் காப்பி. இங்கேர்ந்து வித்தியாசம் வரும். வேறே வேறேயா இருக்கும்.''

''ஏன் பால் கெட்டுப் போயிடுத்தா....? கறுப்புக் காப்பி ஏன் உனக்கு...?''

''எனக்குப் பிடிச்சது. என் பழக்கம். நான் வளர்ந்த விதம்.''

அம்மா மௌனமாய் இருந்தாள். மௌனச் சுத்தி கடைசி அடியாய்க் கோப உளியை ஓங்கி அடித்தது.

''உன் புருஷனைக் கூட்டிண்டு போ!''

(தொடரும்)

இலவச புத்தகம்

ஆடி மாதம்

கடவுளை வழிபட சிறந்த மாதம்.
இந்த மாதத்தில் எங்களுடைய இனிப்பு.
காரம், வகைகளை வாங்குகின்றவர்களுக்கு
பக்திநூல்கள், பக்தி மாதாந்திர பத்திரிகைகள்
வாங்கும் துகைக்கு ஏற்றாற்போல்
இலவசமாக கொடுக்கப்படும்:
ஆடி மாதம் மட்டும். (16-8-87) வரை.

<u>இனிப்பு வகைகள்:</u> மங்களூர் போளி, தேங்காய் போளி, ரஸ மலாய், ஸோன் பப்டி கேக், மாலாடு, ரவாலாடு, இனிப்பு ஸோமாஸ். முந்திரி கத்லி, கடலை உருண்டை, பொரி விளங்காய் உருண்டை, தேங்காய் கோவா, கோதுமை ஹல்வா.

<u>கார வகைகள்:</u> தட்டை, தேன் குழல், கைமுறுக்கு, சீடை, ஸ்பெஷல் மிக்ஸர், நவரத்ன மிக்ஸர், உருளைக்கிழங்கு சிப்ஸ், வாழைக்காய் சிப்ஸ், வறுபயறு, வெஜிடபிள் சமோசா, ரயில் கட்டிடம், சீப்புச்சீடை.

<u>பொடி வகைகள்:</u> கருவேப்பிலைப் பொடி, பருப்புப் பொடி, இட்லிப் பொடி, சாம்பார்ப் பொடி, ரசப்பொடி, ஊறுகாய் மிளகாய்ப் பொடி.

<u>திருமண வைபவங்களுக்கு:</u> சீர் முறுக்கு, சீர் அதிரசம், முள்ளு தேன் குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால், அப்பம் முதலியவை.

Ad-Ventures

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர்
அடையாறு சென்னை-600 020.
போன்: 412557

பிரியமுள்ள தாத்தா

நா த்தாவோட எவ்வளவு நேரம் வேணு மானாலும் பேசிக்கிட்டிருக்கலாம். அவர் சின்ன வயசுல பாட்டியைக் கண்ணாலம் பண்ணிக்க ஒத்தக் கால்ல நின்னது முதல் கூட்டாளிங்களோட சேர்ந்துகிட்டுக் கூத் தடிச்சதுவரை எல்லாத்தையும் சொல்லு வார். தாத்தாவுக்கு ஊர்ல ஒரு தனி மரியாதை உண்டு. ஊர்ப் பஞ்சாயத்து கூடினா விஷயம் அங்கே இங்கே போய்க் கடைசில தாத்தா சொல்லோடதான் முடிவுக்கு வரும். எந்தத் தரப்புக்கும் பாதகமில்லாம நியாயமா சொல்றவர், நாணயஸ்தர் என்றெல்லாம் அவர் மக்கள் மனத்திலே பதிந்திருந்தார்.

அவருக்குத்தான் இந்தப் பாட்டி எவ் வளவு தொந்தரவு கொடுத்திச்சு! ஏதாவது பேசினா, ''ஏன் ஆங்காரம் புடிச்சுக் கத் தறே... நாப்பது வயசாச்சுனா நாய் குணம்னு சொல்லுவாங்க... அந்த நாய் குணம் இப்படி யெல்லாம் பேசச் சொல்லுதாக்கும்' என்று பாட்டி கத்தும். அதுக்குப்பிறகு இவர் கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல் இருப்பார். அப்போ தாத்தாவைப் பார்த்தால் பாவமா இருக் கும். ஊர் முழுக்க இவர் சொல்லைக் கேட்டு அடங்குது. இவர் என்னடான்னா பாட்டி சொல்லுக்கு அடங்கிப் போகிறாரே! இது ஏன்னு ரொம்ப நாட்கள் எனக்கு விஷயம் புரியலே. கோடி வீட்டு மாமாதான் சொன் னார். பாட்டியைக் கல்யாணம் பண்றதுக்கு முன்னாடி ஒரு பெண்ணோட தாத்தாவுக்குப் பழக்கமாம். அந்தப் பொண்ணுக்கு உள்ளூரி லியே வேறே எடத்துல கல்யாணம் முடிஞ் சதுக்கப்புறம் பழக்கம் அறுந்து போச் சாம். தாத்தாவுக்கும் அந்தப் பொண் ணுக்கும் இன்னும் தொடர்பு இருக்குன்னு பாட்டி நெனச்சிக்கிட்டுத்தான் தாத்தாவை எடுத்தெறிஞ்சி பேசுதாம். 'அப்படியெல் லாம் இல்லே.... உன்னைக் கட்டுனதுக்கப் புறம் நான் யாரையும் ஏறெடுத்துப் பார்க் கிறதில்லே' ன்னு தாத்தா சொல்லியும் ஏத்துக் கலையாம்.

எனக்கு வயசு பத்திருக்கும். எங்கப்பாவும் அம்மாவும் பஞ்சம் பொழைக்க, வடநாட்டுக் குப்போயிட்டாங்க. அப்பா என்னைக்கூடவே கூட்டிக்கிட்டுப் போறேன்னார். அம்மாதான், 'இவன் இங்கியே இருந்தால்தான் படிக்கச் சௌகரியப்படும்'னு தாத்தா வீட்ல விட் டுட்டுப் போனாங்க. பெத்த புள்ளையைவிடப் பேரப் பிள்ளை மேல்தான் பாசம் ஜாஸ்தியா இருக்கும்னு சொல்வாங்க. எங்க தாத்தா வும் பாட்டியும் என்ன கவனிச்சுக்கிட்டதை நெனைச்சா அது சரிதான்னு படுது. பக்கத்து டவுன்ல இருந்த ஹைஸ்கூல்ல தாத்தா என்னைச் சேர்த்துவிட்டார். ஹாஸ்டல்ல இருந்து படிச்சாத்தான் ஒழுக்கம் கட்டுப் பாடெல்லாம் வரும்னு ஹாஸ்டல்லியும் சேர்த்துவிட்டார். மாசத்துக்கு ஒரு தடவை யாச்சும் நான் ஊருக்கு வந்து தாத்தா பாட்டி யைப் பார்த்துவிட்டுப் போவேன். வரும் போதெல்லாம் என் படிப்பைப் பற்றி, ஹாஸ்டல் சாப்பாட்டைப் பற்றித் தாத்தா விசாரிப்பார்.

சில நேரம் வேதாந்தி மாதிரியும் பேச ஆரம்பிப்பார் தாத்தா. 'மனுஷன் உசுரு இப்பவோ எப்பவோன்னு இருக்குது. இருக் கிற வரைக்கும் நல்லவனா இருந்துட்டுப் போறதுதான் உத்தமம். கோபப்பட்டு, சந் தேகப்பட்டு, பொறாமைப்பட்டு, என்னத்தை வாரிக்கப் போறோம்' என்பார். ஏன் இப்படி சம்பந்தமில்லாமல் எதையோ பேசறார்னு யோசிப்பேன். 'ம்க்கும்...'னு பாட்டி ஒரு சத்தம் கொடுக்கிறப்போ, புரிஞ்ச மாதிரியும் புரியாத மாதிரியும் எனக்குப் படும். ''தாத்தா செத்துப் போனா அழுவக் கூடாது.... என்ன?'' என்று பாதி அதட்டலும் பாதி அறிவுறுத்தலுமாக அவர் சொல்லும்போது எனக்குப் பயமாக இருக்கும். இதுமாதிரி எத் தனையோ விஷயங்களை அவர் எனக்குச் சொல்வார். கடைத் தெருவில் எல்லாக் கடைகளுக்கும் பெயர் எழுதிப் போர்டு இருந்தாலும் அத்தனையும் நம் நினைவில் இருப்பதில்லை. ஒன்றிரண்டு மட்டும் நம் நினைவில் பதியும். அது மாதிரி தாத்தா சொன்ன எல்லா விஷயங்களும் நெஞ்சில் நிலைக்காவிட்டாலும், 'தாத்தா செத்தா அழுக் கூடாது' என்று அவர் சொன்னது மட்டும் என் சிந்தனையைக் கிளறி விட்டு விட்டது.

செத்தால் ஏன் அழுவணும்? மனு ஷன்னு இருந்தால் ஒரு நாளைக்குச் சாகத் தானே போறோம்? செத்ததுக்கு அப்புறம் அழுதால் மட்டும் போன உசுரு திரும்பியா வந்திடும்? இப்படி நிறைய யோசித்தேன்.

இறந்து போவது மட்டுமின்றிப் பல்வேறு விஷயங்களிலும் அர்த்தமின்றி அழுவதை, வருத்தப்படுவதை, சும்மா கேட்டேன், சும்மா பார்த்தேன் என்று அர்த்தமற்று இயங்குவதை என் மனம் வெறுக்க முனைந்தது. சில பேர் ரொம்ப நாள் கழிச்சு தெரிஞ்சவங்களைப் பார்த்தால் 'என்ன இளைப்பா இருக்கீங்கன்னு?' கேட்பார்கள். ஆனால் அவர் நல்லாத்தான் இருப்பார். சில பேரு உப்புக்குப் பிரயோஜனமில்லாதவங்களா இருப்பாங்க. பேசுறதைப் பார்த்தால் 'அடேயப்பா! இவரு மாதிரி பரோபகாரி உண்டா?' என்று நினைக்கத் தோணும். இதையெல்லாம் என் மனம் ஒதுக்க ஆரம்பித்தது. நாளாக நாளாக அர்த்தமற்றுப் பேசுவதைத் தவிர்த்தேன். அர்த்தமற்று அழுவதையும் தவிர்த்தேன். என் நண்பர்கள் கூட 'இவன் கல்லு மனசுக்காரன். அம்முக்குளி' என்று என்னைப் பற்றிச் சொல்வார்கள்.

தாத்தாவைச் சுத்தி நின்னுக்கிட்டு எல்லோரும் 'கோ கோ'ன்னு அழுது கொண்டிருப்பார்கள். தாத்தாவைக் கறிச்சுக் கொட்டின பாட்டி கூட விழுந்து விழுந்து அழுது கொண்டிருக்கும். நான் அழப்போவதில்லை. நான் செத்தால் அழக் கூடாதுன்னு சொன்ன தாத்தாவுக்காக அழுவது எப்படி சரியாக இருக்கும்? இன்னைக்குத்தான் பீஸ் கட்டக் கடைசி நாள்னு வந்து சொன்னதும் ஊரு பூரா ஒரு சுத்து சுத்தி இருபது ரூபா எங்கியோ கடன் வாங்கிட்டு வந்து கொடுத்து, 'போ... போ.... போய் நல்லாப் படி' என்று சொன்ன தாத்தாவை இனிமேல் பார்க்க முடியாதுதான். அம்மை வந்து படுத்த படுக்கையாய்க் கிடந்தப்போ, கண் விழித்து இரவு முழுதும் பக்கத்திலேயே உட்கார்ந்து ஆறுதல் சொன்ன தாத்தாவைப் பார்க்க முடியாதுதான். ஊருக்கெல்லாம் நியாயம் சொன்ன தாத்தாவை இனிமேல் பார்க்க முடியாதுதான். தனக்குத் தெரிந்த விஷயங்களையெல்லாம் ஒரு நண்பனிடம் பகிர்ந்துகொள்வதைப் போல் என்னிடம் பரிமாறிக் கொண்ட தாத்தாவை இனிமேல் பார்க்க முடியாதுதான். அதற்காக அழுது என்ன ஆகப் போகிறது?


ஊரே வாசலில் திரண்டிருந்தது. என்னைக் கண்டதும் வழிவிட்டார்கள். சிலர் கையால் முகத்தை மூடிக் கொண்டு அழத் துவங்கினார்கள். யார் யாருடைய முகம் என்று நான் கவனிக்கவில்லை. என் கவனமெல்லாம் தாத்தாவை எங்கே கிடத்தியிருக்கிறார்கள் என்பதிலேயே இருந்தது. வாசல்




கதவை ஒட்டினாற்போல் ஒரு நார்க் கட்டில் போட்டு அதிலே தாத்தாவைக் கிடத்தியிருந்தார்கள். நான் அருகே போனதும் கட்டிலைச் சுற்றியிருந்த ஆண்களும் பெண்களும் கோவெனப் பெருங்குரலெடுத்தனர். முகம் வறண்டு போய்க் கண்கள் மூடி, சவமாய்த் தாத்தா! புதுத் துணியில் உடலைச் சுருட்டி, கட்டுப் போட்டிருந்தார்கள். கால் பெரு விரல்களை இணைத்துக் கட்டியிருந்தார்கள். பார்த்துக் கொண்டே நின்றிருந்தேன். அழவில்லை. நெஞ்சில் சொரசொரவென்று ஒரு தணல் எரிந்து உடம்பு முழுக்கப் பரவிக் கொண்டிருந்தது. கண்கள் மங்குவது போல் உணர்ந்தேன்.

"தம்பீ.... நம்பளை அனாதையா விட்டுட்டுத் தாத்தா போயிட்டார்டா...." கேவிக் கொண்டே பாட்டி என்னைக் கட்டிக் கொண்டு அழுதார்கள். அதேபோல் சித்தி மாமா எல்லோரும் மாறி மாறி என்னைக் கட்டிக் கொள்ளவே என்னையும் மீறி 'ஓ...' வென அழுது கொண்டே தாத்தா மீது முகத்தைப் புதைத்துக் கொண்டேன். எவ்வளவு நேரம் அழுதேன் என்பது எனக்கே தெரியாது. என் முகத்தில் தண்ணீர் தெளித்து விழிக்கச் செய்தார்கள். மெதுவாய் எழுந்து உட்கார்ந்தேன். எப்படி அழுதேன், ஏன் அழுதேன் என்று யோசிக்க.... யோசிக்க ஒன்றும் புலப்படவில்லை. ஆனால் மனத்திலிருந்த பாரத்தை யாரோ வாங்கிக் கொண்டது மாதிரி லேசாய் உணர முடிந்தது. இது போன்ற மன ஆறுதலை இதற்கு முன் நான் உணர்ந்ததே இல்லை.

நூதன நூலகம்





பேப்பர் வியாபாரத்தில் நல்ல லாபம் கொழிக்கிறது: பொழுது போக்கிற்குச் செஸ் ஆட்டம் இருக்கிறது... இருந்தாலும் திருப்தியில்லை தேவேந்திர தேசாய்க்கு. தமக்குச் சிறு வயதில் கிடைக்காமல் போன சில சந்தோஷங்களை மற்றக் குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்வதில் குறியாக இருக்கிறார் அவர். தம் வயதுக் குழந்தைகளுள், வசதி மிக்கக் குடும்பங்களைச் சேர்ந்தோர் மட்டுமே விலையுயர்ந்த பொம்மைகளையும் விளையாட்டுப் பொருட்களையும் வைத்துக் கொண்டு விளையாடுவதை தேசாய் ஏக்கத்துடன் பார்த்ததுண்டு. அந்த ஏக்கத்தை நாற்பத்தைந்து வயதாகியும் அவரால் மறக்க முடியவில்லை. எனவே இன்றைய குழந்தைகள் அத்தகைய ஏக்கத்தை அனுபவிக்கக் கூடாது என்கிற நன்னோக்குடன் தேசாய் 'பொம்மை நூலகங்கள்' பல அமைத்துள்ளார்.

லாப நோக்கின்றி நடத்தப்பட்டு வரும் இப்பொம்மை நூலகங்களில் குழந்தைகள் உறுப்பினர்களாவதற்கு இருபத்தைந்து ரூபாய் டெபாஸிட் செய்ய வேண்டும். தவிர, ஐந்து ரூபாய் நுழைவுக் கட்டணமும் ஐந்து ரூபாய் மாத வாடகையும் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்துவோர் விலையுயர்ந்த பொம்மைகளைக் கூடத் தங்கள் வீட்டுக்குக் கொண்டு போய் விளையாடிவிட்டுத் திருப்பித் தரலாம்.

தேசாய் நிறுவிய 'சில்ட்ரன்ஸ் டாய் ஃபவுண்டேஷன்' 1982 இல் முதல் பொம்மை நூலகத்தை ஆரம்பித்தது. இப்போது பம்பாயிலும் குஜராத்தின் சில நகரங்களிலுமாகப் பத்தொன்பது பொம்மை நூலகங்கள் இருக்கின்றன. ஒரு 'நூலகம்' ஆரம்பிப்பதற்குச் சுமார் பத்தாயிரம் ரூபாய் முதலீட்டுத் தொகையும் 250 சதுர அடி இடமும் போதுமானது என்று கூறும் தேசாய், இந்தியா முழுவதிலும் இந்நூலகங்களைத் துவக்குவதில் ஆர்வம் காட்டுகிறார். அந்த முயற்சியில் ஈடுபடுவோருக்கு ஆலோசனையும் பயிற்சியும் இதர உதவிகளும் வழங்கத் தயாராயிருக்கிறார்.

தேசாயின் கனவு நனவானால் குழந்தைகளின் பாடு குதூகலம்தான்!

— செம்பூர் சந்துரு



• பி. என். ராமசுவாமி — 'முனிசிபாலிட்டியைத் தூக்கி நெருப்பில் போடணும்.'

கிளர்ச்சி நடந்தது; நல்லுறவு எரிந்தது!

பற்களை இழந்து விட்டாலும், சொற்களை இழந்துவிடாத 82 வயது. பழுதாகி விட்ட கண்களை ரகசியமாக்கி விட்ட கறுப்புக் கண்ணாடி, உட்கார்ந்தாலும் உயரம். பேச்சில் தன்னம்பிக்கை — தைரியம் — மெலிதான அலட்சியம். கோலார் தங்க வயல் தமிழர்களில் மூன்று தலைமுறைகளைக் கண்டுவிட்ட அனுபவம். முதியோர் கழகத்தின் இன்றையத் தலைவர்.

இவர்தான் பி. என். ராமசுவாமி அய்யர்.

அவரிடம் பேசியபோது தெரிந்த சில துளிகள்:

●● நான் 1923 லிருந்து தங்கவயலில் இருக்கிறேன். அப்போதெல்லாம் நிலைமை ரொம்பக் கொடூரமாய் இருந்தது. அபாயமான வேலை என்பதால் தங்கச்சுரங்கத்தில் வேலை செய்யக் கன்னடியர் யாரும் வரவில்லை. காட்பாடி, வேலூர், குடியாத்தம், ஆம்பூர் இங்கேயெல்லாம் போய் காண்ட்ராக்டர்கள் தமிழர்களை வேலைக்குப் பிடித்து வந்தார்கள். நாள் கூலி ஏழணா, எட்டணா. தலைமை மேஸ்திரிக்கே பதிமூணு அணாதான். காலுக்குச் செருப்புக் கூட இல்லாமல் வேலை செய்தார்கள் தமிழர்கள்.

●● ஆரம்பத்தில் ஐந்நூறு, ஆயிரம் என்று ஆரம்பித்து 1950 இல் நாற்பதாயிரம் ஆட்கள் வரை சுரங்கத்தில் வேலை செய்தார்கள்.

●● இந்தியாவில் வேறு எங்குமே காண முடியாத ஒரு விஷயம் தங்க வயலில் காணலாம். இங்கு சுரங்கத்தில் வேலை செய்பவர்களில் 95% சதவீதம் தமிழர்கள். அதில் கிட்டத்தட்ட 99 சதவீதம் ஷெட்யூல்ட் வகுப்பினர்!

●● தமிழர்களுக்கு வசதி ஒன்றும் கிடையாது. எட்டுக்கு எட்டு, பத்துக்குப் பத்து என்று தட்டி கட்டி, மேலே ஜிங்க் ஷீட் போட்டு மாத வாடகை எட்டணா வசூலிக்கிறார்கள். பத்துப் பத்து ரூபாய்க்கு நான் பல பேருக்கு மனைகள் வழங்க ஏற்பாடு செய்தேன்.

●● இந்த ஊருக்குப் போஸ்ட் ஆபீஸ் கட்டிடம் கொண்டு வந்தேன். ட்ரெஷரி, முதல் கிரேடு காலேஜ், பதினைந்து பதினாறு ஹைஸ்கூல்கள் — இன்னும் எவ்வளவோ கொண்டு வர ஏற்பாடு செய்தேன். நான் இந்த ஊருக்குச் செய்த வேலை வேறு எவனும் செய்யவில்லை. அப்படி எவனாவது சொன்னால் அவன் காலில் விழத் தயார்!

●● கன்னடியரும் தமிழரும் சகோதரர்கள் போலத்தான் வாழ்ந்து வந்தோம். 1923 லிருந்து 1982 வரை ஒரு சின்னத் தகராறு கூட நான் இங்கே பார்த்ததில்லை. 82 ஆம் வருஷம் கன்னடத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து, போஸ்ட் ஆபீஸ், ரயில்வே ஸ்டேஷனை எல்லாம் எரித்தார்கள். யார்? அப்பாவித் தமிழர்களைத் தூண்டிவிட்டுத் தலைவர்கள் செய்த ஜூட்டி அது. தங்களுக்குப் பெயர் வர வேண்டுமென்பதற்காக மொழிப் பிரச்னையைப் பெரிது பண்ணப் போக, அதனால் இன்றைக்குக் கன்னடியருக்குக் கோலார் தமிழர்கள் என்றால் கசப்பாகி விட்டது.

●● ஜனங்கள் பெயரைச் சொல்லிச் சொல்லித் தலைவர்கள் பணம் குவித்தார்கள். ஜனங்களுக்கு ஒன்றும் செய்யவில்லை. இதை அவர்கள் முகத்துக்கு நேரேயே நான் அடித்துச் சொல்வேன்.

●● தமிழர்களுக்கு எந்த வசதியும் செய்து தரப்படவில்லை என்று சொல்வதெல்லாம் பொய். பாங்க்குகளில் தொழில் ஆரம்பிக்க லோன் தருகிறார்கள். எத்தனை பேர் அதை வாங்கியிருக்கிறார்கள்? வாங்கியவர்களெல்லாம் அரசியல் கட்சியை ஏஜெண்ட்டாக வைத்துக் கொண்டு, பாதிப் பணத்தை அவர்களுக்குக் கமிஷனாகக் கொடுத்துவிட்டு, மீதியை வைத்துச் சொந்தக் கடன்களை அடைத்தார்களே தவிர, எவன் தொழிலில் ஈடுபட்டான்?

●● இந்த ஊருக்கு முனிசிபாலிடியைக் கொண்டு வந்தவன் நான். ஆனால் இன்றைக்கு இருக்கும் முனிசிபாலிடியைத் தூக்கி நெருப்பில் போட வேண்டும். இப்பொழுது இருப்பது, ரோடா அது — கக்கூஸ் மாதிரி வைத்திருக்கிறார்கள். ஐந்நூறுக்கும், ஆயிரத்துக்கும் சாலையையே எழுதிக்கொடுத்துவிடும் ஊழல் பெருச்சாளிகள்தான் முனிசிபாலிடியில் இருக்கிறார்கள். நான் இவர்களை விடமாட்டேன். கமிஷனர், மினிஸ்டர், கவர்னர் எல்லாருக்கும் மனு கொடுத்திருக்கிறேன்!

கன்னடத் தமிழர்களாகவே வாழ விரும்புகிறோம்!

"நூற்றுக்குத் தொண்ணூற்று ஐந்து பேர் தமிழர்களாக இருக்கிறீர்களே, தமிழர் சங்கம் ஏதாவது இருக்கணுமே?" என்று கேட்டதுதான் தாமதம், நண்பர்கள் அவசர மாகச் சொன்னார்கள்: "ஒண்ணு இல்லே, ரெண்டு இல்லே, மொத்தம் எண்பது தமிழ்ச் சங்கங்கள் இருக்கின்றன, ஆமா!"

சொன்னதோடு நிற்கவில்லை. எங்கள் திகைப்பு நீங்குமுன்னரே, பல தமிழ் மன்றங்களைச் சேர்ந்தவர்களை ஒரே இடத்தில் கூட ஏற்பாடு செய்து விட்டார்கள். பதினொரு தமிழ் மன்ற நண்பர்கள் வட்டமிட்டு உட்கார்ந்து கலந்துரையாடிய அந்த அனுபவம் சுவாரஸ்யமானது. அவர்கள் பேச்சில் வருத்தம், கவலை, பயம் இத்தனைக்கும் நடுவில் ஒரு நிதானம் இருந்தது.

"இங்கே எண்பது தமிழ்ச் சங்கங்கள் அவசியமா?"

"அவசியமில்லேதான்" என்றார் ஆதிகேசவன். "ஒரே இடத்திலே இருக்கிற தமிழர்களுக்குள்ளே சில சமயம் கட்சிப் பாகுபாடு வந்தா, 'நீ பாரதி தமிழ்ச் சங்கம் ஆரம்பிச்சா, நான் பாரதிதாசன் தமிழ்ச் சங்கம் ஆரம்பிச்சுக்கறேன்'னு ஒரு போட்டி மனப்பான்மை வந்துடுது. அதனாலதான் ஐந்நூறு வீட்டுக்கொரு மன்றம் கிளம்பிட்டது. ஆனால் இந்த எண்பது தமிழ் மன்றங்களுக்கும் தலைமையாகத் "தங்கவயல் தமிழர் கழகம்"னு ஓர் அமைப்பை உருவாக்கியிருக்கிறோம். நான் இந்தக் கழகத்துக்குக் காப்பாளர்."

"தமிழ் மன்றங்களில் என்னதான் செய்யறீங்க?"

"தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றிக்கிட்டு வருகிறோம். கலைநிகழ்ச்சி, நாடகம், இசை நிகழ்ச்சி இப்படி எத்தனையோ ஏற்பாடு செய்யறோம். பொங்கல் நேரத்துல கிட்டத்தட்ட 20,000 பேர் ஒற்றுமையா, வித்தியாசங்களை மறந்து ஊர்வலத்துல கலந்துக்கிட்டோம்!" பட்டியலைப் பிரித்துக் காட்டினார் அறவாணன், த. த. கழகத்தின் தலைவர்.

"தமிழர்களுக்கு இதுதான் தேவைன்னு நினைக்கறீங்களா?"

"இல்லே. தமிழர்களுக்கு ஏராளமான பிரச்னைகள் இருக்கு..." என்றார் சற்றே கவலையோடிய குரலில் வின்செண்ட் ஆபிரகாம் — பி.ஜி.எம்.எல். தமிழ் மன்றத் தலைவர். "முக்கிய பிரச்னை வேலை வாய்ப்பு. சுரங்கத்தில் அபாயமான வேலைன்னு அந்நாளில் தமிழர்களைத்தான் எடுத்துக்கிட்டாங்க. ஆனா இப்ப சுரங்கத்தில் தங்கம் குறைஞ்சுக்கிட்டே வருது. இன்னும் பதினைஞ்சு வருஷத்தில ஒண்ணுமில்லாமப் போயிடலாம். அதனாலே சுரங்கத்தில இப்பப் புதுசா யாரையும் வேலைக்கு எடுக்கறதில்ல. இளைஞர்கள் இந்த மாநிலத்தின் வேற எந்த இடத்துக்காவது வேலைக்குப் போலாம்னா, மொழிப் பிரச்னை..."

"இந்த மாநிலத்தில் வேலை வேணும்னா இவங்க மொழி தெரிஞ்சிருக்கணும்னு எதிர்பார்க்கிறது எப்படித் தப்பாகும்? கன்னடம் படிக்க மாட்டேன்னு அடம் பிடிக்கிறது நியாயமா?"

கன்னடத்தை யாரும் வெறுக்கலை. ஆனா



• சி. சே. அறவாணன்



• எஸ். வின்செண்ட் ஆபிரகாம்



• பாவலர் கு. ஆதிகேசவன்

ஆரம்பக் கல்வியைக் கூடத் தாய்மொழியில் கற்கக் கூடாதுன்னு சட்டம் போட்டா எப்படிங்க? கன்னடத்தை விரும்பிக் கற்க நாங்க தயாரா இருக்கோம். சொல்லப் போனா தமிழர் மன்றங்களிலேயே நாங்க கன்னட மொழியைக் கற்றுக் கொடுக்கறோம்! தமிழர்களைப் போலவே பெல்காம்லேயும் கன்னட மொழியை போதனா மொழியாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிச்சாங்க. மறியல் பண்ணினாங்க. ஆனா நம்ம தமிழ்த் தலைவர்களைப் போல் மராத்தியத் தலைவர்கள் சும்மா இருக்கலே. ஹெக்டேயைக் கூப்பிட்டுப் பேச்சு வார்த்தை நடத்தி, அந்தப் பகுதியில் மராத்தியிலேயே ஆரம்பக் கல்வி கற்பிக்க ஒப்புக் கொள்ள வச்சாங்க. அவங்களுக்கு



"எங்க பிரச்னைகளைக் கர்நாடக, தமிழக அரசுகள் இணைந்து, சரியாகக் கவனிக்காமல் போனா பஞ்சாப் மாதிரியோ சிலோன் மாதிரியோ, தங்கவயல் மாறிடக் கூடிய அபாயம் இருக்கு......"

• 'அரசியல் கட்சிகள் எங்களைப் பிரித்து விட்டன' தங்கவயல் தமிழர் பிரதிநிதிகள்.

ஒரு சலுகை, நமக்கு ஒரு சட்டம்கறது நியாயமா? ஒரு விஷயத்தை எல்லாரும் தெளிவாப் புரிஞ்சுக்கணும். நாங்க யாரும் கன்னட மொழியை எதிர்க்கவே இல்லே. தமிழைக் காப்பாற்றத்தான் நினைக்கிறோம்."

"தமிழர்கள் ஒற்றுமையா இருக்காங்களா?"

இந்தக் கேள்வி பிறந்ததும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துச் சங்கடமான சிரிப்புகளை உதிர்த்தார்கள். கொஞ்சம் தயக்கத்துக்குப் பிறகு ஒரு குரல் வந்தது.

இல்லேங்கறதுதான் கசப்பான உண்மை. தமிழர்களுக்கு அரசியலில் எக்கச்சக்க ஈடுபாடு. 82 இல் நடந்த மறியல் போராட்டத்துக்கு அப்புறம் போலீஸுக்கு எங்க மேல ஒரு பகைமை இருக்கு. அதை அரசியல் கட்சிங்க சாதகமாப் பயன்படுத்திக்கிட்டு எங்களைப் பிரிச்சு வைச்சிருக்காங்க. எங்களால் அரசியல் கட்சிகளை எதிர்த்துக்க முடியலே. எதிர்த்தா குண்டர் படை வரும்...

"தமிழர்களுக்கு என்ன தேவைங்க நீங்க?"

"சுரங்கத் தொழில் முடங்கிட்டா இருக்கற தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வேணும்கறதுக்காகத்தான் காமராஜர் காலத்துல இங்கே பாரத் எர்த் மூவர்ஸ் நிறுவனத்தைத் தொடங்கினாங்க. ஆனா இப்போ வெளியிடங்கள்லேர்ந்துதான் அதிகமான பேர் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்காங்க..."

"தங்க வயல்ல (பயிற்சி பெற்ற தொழிலாளர்) Skilled Labour இல்லேன்னு அதுக்குக் காரணம் சொல்றாங்களே?"

"தங்க வயல் தமிழர்களுக்காகத் தொழிற்சாலை ஆரம்பிச்சதாகச் சொன்னவங்க, இங்க இருக்கறவங்களுக்குச் சரியான பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யாதது யார் தப்பு? இப்ப எங்க பாடு ரொம்பக் கஷ்டம். நாங்க கர்நாடகத்தைச் சேர்ந்தவங்கங்கறதால, தமிழ்நாட்டுல எங்களைச் சேர்த்துக்க மாட்டாங்க. நாங்க தமிழருங்க என்பதாலே கர்நாடகத்திலே ஒதுக்கிடுவாங்க. நூறு வருஷங்களுக்கு முன்னாலேயே தமிழகத்தை விட்டுப் பொழைப்புக்காக இங்கே வந்து வாழ்ந்துக்கிட்டு இருக்கும் எங்களுக்கு இப்ப எங்களோட பூர்வீக கிராமம் கூடத் தெரியாது. இங்கே வேலை இல்லேன்னா நாங்களெல்லாம் எங்கே போறது? குறைஞ்சபட்சம் ரிடையர் ஆகிற தொழிலாளிகளுக்கு மனைகளோ, வீடுகளோ மேனேஜ்மெண்ட் கொடுத்தாத்தான் நாங்க நடுத்தெருவுக்கு வராதைத் தடுக்க முடியும்... எங்க பிரச்னைகளைக் கர்நாடக, தமிழக அரசுகள் இணைந்து, சரியாக் கவனிக்காமல் போனா பஞ்சாப் மாதிரியோ சிலோன் மாதிரியோ தங்கவயல் மாறிடக் கூடிய அபாயம் இருக்கு..."

விடைபெற்றுப் பிரிந்து வந்தபின் கூட தமிழர்களெல்லாம் சேர்ந்து சொன்ன ஒரு விஷயம் காதுகளில் ரீங்காரம் செய்கிறது:

நாங்கள் கன்னடத் தமிழர்களாகவே வாழ விரும்புகிறோம். கன்னடத்தையோ, கன்னடியரையோ, கர்நாடக அரசையோ நாங்கள் எதிரிகளாக நினைக்கவில்லை. எங்களைப் பற்றி இருக்கும் அந்தத் தப்பான அபிப்பிராயத்தைத் தயவு செய்து சம்பந்தப்பட்டவர்கள் மாற்றிக் கொள்ளட்டும்."



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

அத்தியாயம் ஐந்து

நண்பர்கள் வரவு செலவு கணக்குப் போட்டுப் பார்த்தார்கள். மாண்டிகார்லோவில் நடந்த சாகச நாடகத்துக்குச் செலவு அதிகமாகத்தான் ஆகியிருந்தது. ஆனால் வரவும் கணிசமாகத்தான்! 80,000 டாலர்கள்! எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஹார்வியிடமிருந்து இவர்களுக்கு இன்னும் சுமார் ஐந்து லட்சம் டாலர்கள் பாக்கி வரவேண்டியிருந்தது. அதில் ஒரு பகுதியையேனும் பறிப்பதற்கான அடுத்த திட்டம் ஸ்டீபனுடையது.

அவன் தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டான். தலையில் நரை விழுந்தது போல் சாயம் ஏற்றிக் கொண்டதில் வயதான தோற்றம் ஏற்பட்டிருந்தாலும் பார்க்கக் கௌரவமாகவும் கண்ணியமாகவும் இருப்பதாக எண்ணினான். வேறு சில மாற்றங்களையும் செய்து கொண்டு முற்றிலும் புதிய ஆசாமியாகக் காட்சியளித்தான். அவனுடைய நண்பன் பியர்ரியும் மாறுவேஷம் தரிக்க, இருவரும் ஆஸ்காட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

ராபின், லண்டனின் ஹீத்ரோ விமான நிலையத்துக்குச் சென்றான். அங்கிருந்து குறிப்பிட்ட நேரத்தில் ஹார்விக்கு ஒரு தந்தி அனுப்ப வேண்டியது மட்டுமே அன்றைய நாடகத்தில் அவனுடைய பங்கு.

ஆஸ்காட்டை அடைந்த இரு நண்பர்களும் ஹார்வியின் ரோஸலி என்று பெயர் பூண்ட குதிரை மீதே ஆளுக்குக் கொஞ்சம் பணம் கட்டினார்கள். காத்திருந்தார்கள்.

ஹார்வி தனது வெள்ளை ரோல்ஸ் ராய்ஸில் வந்து சேர்ந்தான். 750 டாலர் தந்து தனக்கென்று பிரத்தியேகமாக ரிசர்வ் செய்து கொண்டிருந்த 'பாக்ஸ்' பகுதியைச் சென்றடைந்தான். அங்கே அவனால் அழைக்கப்பட்டிருந்த சில நண்பர்கள் அவனுடன் சேர்ந்து கொண்டார்கள்.

''ரோஸலி வெற்றி பெற்றால் உனக்கு என்ன கிடைக்கும்?'' என்று ஒருவன் கேட்க,

''எண்பதாயிரம் பவுண்டு கிடைக்கும். ஆனால் பணமா முக்கியம்?'' என்று திருப்பிக் கேட்டான் ஹார்வி. ''என்னுடைய குதிரை ஆஸ்காட்டில் ஜெயித்தது; அதுவும் கடைசி நாளன்று ராணியின் குதிரையையே வென்

பணத்துக்குப் பணம்; பரிக்குப் பரி!

ஜெஃப்ரி ஆர்ச்சர்




* மாதிரி வீடு — புதிதாய்க் கட்டிக் கொடுக்கப்பட்டது.



சுரங்கத்தைத் தோண்டித் தோண்டி எடுத்த பாறைகளை எல்லாம் தங்கம் நீக்கிய பின் அங்கங்கே மாவு மலையாய்க் குவித்து வைத்திருக்கிறார்கள். இந்தக் குட்டி மலைகளை, 'சயனைட் குப்பை' என்று விஷத்தின் பெயரால் அழைக்கிறார்கள். காரணம், வெயில் காலங்களில் இத்தூசி காற்றோடு கலந்து பறந்து வந்து சுவாசத்தில் கலக்கிறது. அதனால் நுரையீரல்கள் பாதிக்கப்படுகின்றன. மழைக்காலங்களிலோ தெரியாமல் யாராவது இக்குன்றுகளில் ஒன்றின் மீது ஏறிவிட்டால் ஆளையே உள்ளே இழுத்துக் கப்ளீ

* தொழிலாளர்கள் தட்டி — குடிசை — வீடு மாதிரி...

தங்கச் சுரங்கங்கள்



றது என்பதல்லவா பெருமை! ராஜ குடும்பம் முழுவதும் இங்கே இப்போது இருக்கும். என் குதிரை வென்றால் அரசி எனக்கு ஒரு கோப்பையைப் பரிசளிப்பார். அது என் வாழ்நாள் முழுவதும் எனது காரியாலய அறையை அலங்கரிக்கும். போதாதா? இந்தக் கௌரவம்தான் முக்கியம்!''

நண்பர்கள் 'குட்லக்' சொன்னார்கள். ஒன்றன் பின் ஒன்றாக இரு தந்திகளும் வந்தன. ஹார்வியின் வெளியூர் நண்பர்கள் அவன் குதிரை வெற்றி பெற வாழ்த்துக் கூறி அனுப்பிய தந்திகள். மூன்றாவதாக ஒரு தந்தி வந்தபோது, ''சரிதான் உனக்கென்று தனியாக ஒரு போஸ்ட் ஆஃபீஸ் திறந்துவிட வேண்டியதுதான் போலிருக்கே'' என்று ஒரு சினேகிதன் கிண்டல் செய்தான்.

ஹார்வி தந்தியை உடைத்துப் பார்த்தான். டாக்டர் பார்க்கர், லண்டனின் ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து அந்தத் தந்தியை அனுப்பியிருந்தார்.

''அமெரிக்கா திரும்புகிறேன். ரோஸலி வெற்றி பெற வாழ்த்துக்கள்! எனது நண்பர், நோபல் பரிசு பெற்ற ஆக்ஸ்ஃபோர்டு பேராசிரியர் ரோட்னி போர்ட்டர் இன்று ஆஸ்காட் வருகிறார். அவரைக் கவனித்துக் கொள்ளவும்.''

ஹார்விக்கு ஒரே மிதப்பாக இருந்தது. ஆஸ்காட் குதிரைப் பந்தயத்தில் தன் குதிரை ஓடுவது பற்றி அவன் டாக்டர் பார்க்கரிடம் யதேச்சையாகத்தான் பேச்சுக்கிடையில் குறிப்பிட்டிருந்தான். ஆனால் அதை டாக்டர் பார்க்கர் நினைவில் வைத்திருந்து, வாழ்த்துத் தந்தி அனுப்பியது அவனுக்குப் பெருமையாக இருந்தது. அதுமட்டுமல்ல, அந்தப் புகழ் பெற்ற சர்ஜன், மற்றொரு புகழ் பெற்ற — ஏன் நோபல் பரிசே பெற்றுள்ள — ஒரு பேராசிரியரைத் தனக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். அவரைக் கவனித்துக்கொள்ளும்படி கோருகிறார். அடேயப்பா! எவ்வளவு பெரிய கௌரவம்!


ஹார்விக்குப் பணம் நிறைய இருந்தது. நல்லபடியாகச் சம்பாதித்ததோ, அல்லது மோசடியில் திரட்டியதோ, எப்படியானாலும் இன்று அவன் பெரும் பணக்காரன். அதற்காகவே அவனைத் துதி பாடுகிறவர்கள் பலர் அவனைச் சூழ்ந்திருந்தார்கள். ஆனால் ஹார்விக்கு அவர்கள் போதவில்லை. பெரிய மனிதர்களாகக் கருதப்படக் கூடியவர்கள், அறிஞர்கள், செல்வாக்கு மிக்கவர்களுக்கிடையில் அவர்களுக்குச் சமதையாகப் பழக ஆசைப்பட்டான். அவனுடைய இந்தப் பலவீனத்தை உணர்ந்துதான் ஸ்மெஃப்னும்

கரம் செய்துவிடும்! பார்ப்பதற்கு சிமெண்ட் போலவே இருப்பதால் சிமெண்டில் இதைக்கலப்படமும்செய்து விடுகிருர்களாம்!

ஊரில் பொழுது போவதற்கு நான்கு சினிமாக் கொட்டகைகள் உள்ளன. இப்போது தற்காலிகமாக ஒரு சர்க்கஸூம் இருக்கிறது. இவையெல்லாம் தாய்மார்களுக்குத் தான். பெரும்பாலான ஆண்களுடைய மாலை வேளைகள் சாராயக் கடைகளில் கழிந்து விடுகின்றன.

சில கரங்கத் தொழிலாளர்கள், சம்பாதித்த பணத்தைச் சமர்த்தாய்ச் சேமித்து டி.வி. கூட வாங்கி இருக்கிருர்கள்! சிலருடைய சமையல் பாத்திரங்கள் கூட வட்டிக்கடைக்குக் குடி போய் விட்டன.

இந்த ஊரில் இன்னொரு விசேஷம். ஒரு தெரு முழுக்க வட்டிக் கடைகள். தொழிலாளர்கள் அடமானத்திற்காகக் கொண்டு வரும் பாத்திரங்களுக்காக மட்டும் இவர்கள் காத்திருப்பதில்லை. அவர்கள் ரகசியமாகக் கொண்டு வரும் தங்கம் கலந்த சிறு கல் மூட்டைகளை மலிவான விலையில் வாங்கிக் கொள்ளவும் தான் கடை திறந்து வைத்திருக்கிருர்கள். இது ஊர றிந்த 'ரகசியம்!'



ஆங்கிலேயர்கள் காலத்தில் தொழிலாளர்களுக்குத் தட்டி வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இன்றைக்கும் அவற்றில் குஞ்சு குளுவான்களோடு வாழும்' தொழிலாளர்கள் இருக்கிருர்கள். வாடகை ஐம்பது பைசா, அல்லது ஒரு ரூபாய் — மாதமொன்றுக்கு! அண்மைக்காலத்தில் நிர்வாகத்தால் சில மாதிரி வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கு வாடகை அதிகம். ஐந்து ரூபாய் — மாதமொன்றுக்கு!

தன் நாடகத்தை இப்போது திட்டமிட்டு நடத்திக் கொண்டிருந்தான். இதை அறியாத ஹார்வி, நோபல் பரிசு பெற்ற ஒரு மாமேதையை உபசரிக்கத் தயாராஞன்.

ஆனால் இந்தக் கூட்டத்தில் பேராசிரியர் போர்ட்டரை எங்கே போய், எப்படித் தேடுவது? ஒருகணம் மலைத்த ஹார்வி, எதற்கும் ஒரு சுற்று நடந்து வந்து பார்க்கத் தீர்மானித்துப் புறப்பட்டான். "இதோ வந்து விடுகிறேன்; ஒரு அவசர வேலை" என்று கூறிக் கிளம்பியவனை அனுப்பிவிட்டு அவனது நண்பர்கள், மது புட்டியைக் காலி செய்யத் தொடங்கிஞர்கள்.

ஆஸ்காட் அங்கத்தினர்கள் கூடும் பகுதி தனியே இருந்தது. தனது 'பாட்ஜை'க் காட்டிவிட்டு அப்பகுதியுள் நுழைந்தான் ஹார்வி. சுற்றுமுற்றும் நோக்கிஞன்.

அவன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த பியர்ரி, அப்போதுதான் ஸ்டீஃபனைப் பார்த்து வியப்படைந்ததுபோல் நடித்து, "அடேடே! பேராசிரியர், போர்ட்டர்! இதென்ன அதிசயம்! எங்கே இவ்வளவு தூரம்?" என்று உரக்க, ஹார்வி காதில் விழும்படியாகக் கேட்டவாறு ஸ்டீஃபனின் கரத்தைப் பற்றிக் குலுக்கிஞன்.

பேராசிரியர் போர்ட்டராக உருமாறி நடித்த ஸ்டீஃபனும் ஒரு நண்பனை எதிர்பாராமல் சந்தித்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சியை முகத்தில் தேக்கி, பியர்ரியைத் தோளில் தட்டிக் கொடுத்தான்.


"ராபின் அனுப்பிய தந்தி வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது; இனி உன் பாடு, ஹார்வி பாடு" என்று மெல்லிய குரலில் பியர்ரி கூறி முடிப்பதற்கு முன்பாகவே குறுக்கே புகுந்தான் ஹார்வி:

"மன்னிக்க வேணும்! பேராசிரியர் போர்ட்டர்தானே? உங்களைச் சந்திக்க முடிந்ததில் ரொம்ப சந்தோஷம்! நான் ஹார்வி. உங்களை என் விருந்தினராக்கிக் கொள்ள வந்திருக்கிறேன். டாக்டர் பார்க்கரின் கட்டளை!"

"கட்டளையா?"

"ஆமாம்; டாக்டர் பார்க்கரின் கோரிக்கை கூட என்னைப் பொறுத்தமட்டில் கட்டளை தான். எனக்கு ஓர் எமெர்ஜன்ஸி ஆபரேஷன் செய்து உயிர் கொடுத்த கடவுள் அவர்!"

ராபின், மீண்டும் டாக்டர் பார்க்கராகத் தாற்காலிகமாக மாறி, ஹீத்ரோ விமான நிலயத்திலிருந்து கொடுத்த தந்தி, நல்ல படியாக வேலை செய்யத் தொடங்கிவிட்ட



"பையனுக்கு ஒன் — வே — டிராபிக் என்ருல் என்னவென்றே தெரியலே. அவனுக்கு எப்படி விளங்க வைக்கிறதுன்னும் புரியலே...."

"அப்புறம் என்ன பண்ணினீங்க?"

"டூ — வே — டிராபிக்கை இரண்டால் வகுத்தால் — அதுதான் ஒன் — வே — டிராபிக் என்று சொன்னேன். புரிஞ்சுக்கிட்டான்...!"

— பெ. கலாசாமி.

தைப் புரிந்து கொண்ட பியர்ரி, இனி தனக்கு அங்கு வேலை இல்லை என்பதால் மெல்ல நழுவினுன். பேராசிரியர் „போர்ட்டன்ர இனம் கண்டு கொள்ள ஹார்விக்கு உதவியதுடன் அவனுடைய அன்றையப் பணி முடிவடைந்துவிட்டது.

பேராசிரியர் போர்ட்டராக நடித்த ஸ்டீஃபன், ஹார்வியுடன் அவனது பாக்ஸுக்குச் சென்ருன். அவனுடைய நண்பர்களை அறிமுகம் செய்து கொண்டான். மதுப் புட்டிகள் ஒன்றன்பின் ஒன்ருகக் காலியாகத் தொடங்கின.

குதிரைப் பந்தயமும் அதனுடன் இணைந்த பரபரப்பும் ஆரம்பமாகிவிட்டன. கடைசி ரேஸை மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்த்து மூச்சைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். அதில்தான் ஹார்வியின் குதிரை ஓடுகிறது. ராணியின் குதிரையும் ஓடுகிறது. எது ஜெயிக்கும்?

"உங்கள் குதிரை வென்ருல் கிடைக்கும் பரிசுப் பணத்தை என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார் பேராசிரியர் போர்ட்டர்.

"பணமா முக்கியம்? ஏதாவது தர்மத்துக்குக் கூடக் கொடுத்துவிடலாம்" என்ருன் ஹார்வி, அலட்சியமாக.

முதலில் வந்தது....

ஹார்வியின் குதிரைதான்!

மைதானமே கிடுகிடுத்துப் போனது ஆரவாரத்தில்! ஹார்வியின் பாக்ஸை நோக்கித் 'திபு திபு' என்று பலர் ஓடி வந்தார்கள். தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லாரும் கைகுலுக்கிஞர்கள். பாக்கியிருந்த மதுப் புட்டிகள் நிமிஷமாகக் காலியாகின!

பரிசு வழங்கும் படலமும் நடந்து முடிந்தது. மது போதையிலும் அதற்கும் மேலாக வெற்றிப் போதையிலும் மிதந்தான் ஹார்வி.

"நான் புறப்படுகிறேன்" என்ருர் பேராசிரியர் போர்ட்டர். "சாத்தியப்பட்டால் அமெரிக்கா திரும்புமுன் ஆக்ஸ்போர்டுக்கு ஒரு நடை வரலாமே? வருகிற வெள்ளிக்கிழமை பட்டமளிப்பு விழா. அதில் எனது விருந்தினராக நீங்கள் வந்து கலந்துகொள்ள முடியுமாஞல் நான் மகிழ்வேன்."

ஹார்விக்கு உச்சி குளிர்ந்து போயிற்று. அழைப்பவர் யார்? நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் அல்லவா! "அவசியம் வருகிறேன்" என்ருன். "உங்கள் அழைப்பை எனக்கு அளிக்கப்பட்ட கௌரவமாகக் கருதுகிறேன்."

அவனது பலவீனத்தைச் சரியாகக் கணித்து அவனை வீழ்த்திவிட்ட களிப்புடன் ஸ்டீஃபன், வெள்ளிக் கிழமையன்று ஆக்ஸ்ஃபோர்டில் அவன் எப்போது எங்கு தன்னைச் சந்திக்கலாம் என்ற விவரங்களை ஒரு காகிதத்தில் கிறுக்கித் தந்துவிட்டுக் கிளம்பினன். நாடகத்தின் முதல் பகுதி மகத்தான வெற்றி பெற்றுவிட்டது. இரண்டாம் பகுதியும் விக்னமின்றி நடந்து முடிந்தால் ஹார்வி ஏமாற்றிய பணத்தில் முக்கால்வாசியைத் திரும்பப் பறித்துவிட்டதாக ஆகும். அதிர்ஷ்டம் தங்கள் பக்கம் இதுவரை இருந்ததுபோல் இனியும் நீடிக்குமா?

பட்டமளிப்பு தினத்தன்று ஹார்வி குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்துக்கு 'டாண்'ணென்று வந்து சேர்ந்தான். அவனைப் பட்டமளிப்பு விழாவின் பார்வையாளர் பகுதிக்கு அழைத்துப் போனுன் ஸ்டீஃபன் — அதாவது பேராசிரியர் போர்ட்டர். பட்டதாரிகளுக்குப் பட்டம் வழங்கப்படுவதைப் பார்த்து ஏங்கினுன் ஹார்வி. தான் கல்லூரி வாசலையே மிதித்ததில்லை என்ற எண்ணம் அவனை வாட்டி எடுத்தது. கறுப்பு அங்கிகளையும் குஞ்சலத்துடன் கூடிய தொப்பிகளையும் அணிந்து அவர்கள் வரிசையாக வந்து பட்டங்களைப் பெற்றுச் செல்வதை இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம்போல் அவனுக்குத் தோன்றியது. பிறகு கறுப்பும் சிவப்புமாக அங்கி அணிந்தவர்கள் வந்தார்கள். 'இந்த உடை வித்தியாசமாக இருக்கிறதே' என்ருன் ஹார்வி.

"ஆமாம். இவர்கள் டாக்டர் பட்டம் பெறுகிறவர்கள்" என்று விளக்கிஞர் பேராசிரியர் போர்ட்டர். "முதலில் வந்தவர் பயோ கெமிஸ்ட்ரியில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெறுகிருர். இரண்டாவதாக மேடை ஏறுகிறவர் பௌதிக ஆராய்ச்சிக்கு டாக்டர் பட்டம் பெறுகிருர். இதோ, மூன்ருவதாக வருபவர் ஒரு ஆராய்ச்சியும் பண்ணு விட்டாலும் கௌரவ டாக்டர் பட்டம் பெறுகிருர்..." என்று கூறியபடியே கடைக்கண்ணுல் ஹார்வியைப் பார்த்தான் ஸ்டீஃபன்.

"அது என்ன கௌரவ டாக்டர் பட்டம்?"

"அதை, டாக்டர் ஆஃப் லெட்டர்ஸ் என்பார்கள். இந்த மனிதர் பல்கலைக் கழகத்துக்குக் கணிசமான தொகையை நன்கொடையாக வழங்கிஞர். இப்படி கல்வித் தொண்டு புரிகிறவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கிக்



''இங்க வந்து வேலை கேக்கறியே? எங்க ஆபீஸ்ல இருக்கிறவங்களுக்கே செய்ய வேலை எதுவும் இல்லாம சும்மா உட்கார்ந்திருக்காங்க....''

''அதனால பரவாயில்ல சார்; பத்தோட பதினொண்ணுகை நானும் அவங்களோட உட்கார்ந்துட்டுப் போறேன்.''

கௌரவிப்பது உண்டு.''

''அப்படியா! பணம் கொடுத்து டாக்டர் பட்டம் வாங்கிவிட முடியுமா?''

''சேச்சே! அது அவ்வளவு சுலபமில்லை. பல்கலைக் கழகத்தின் கௌரவத்தை அப்படி குறைத்துக் கொண்டு விட மாட்டார்கள். ஆனால் நன்கொடை உண்மையிலேயே கணிசமானதாக இருந்தால், கொடுப்பவரும் சமுதாயத்தில் உயர் மட்டத்தில் செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்தால், இப்படி கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்படுவது உண்டுதான். இல்லையென்றால் பல்கலைக் கழகம் அதன் செலவுகளையெல்லாம் எப்படிச் சமாளிக்க முடியும்? ஆனால் இதைப் பணத்துக்கு டாக்டர் பட்டத்தை விற்பதுபோல் செய்யாமல், நாசூக்காகவும் கண்ணியமாகவும் நடத்துவார்கள். யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள்.''

தான் விரித்த வலையில் ஹார்வி விழுந்து விட்டான் என்பதை அவனுடைய முக பாவமே ஸ்டீஃபனுக்கு உணர்த்தியது. பட்டமளிப்பு விழாவையொட்டி சுமார் ஆயிரம் பேருக்குமேல் கலந்து கொண்ட ஒரு விருந்துக்கும் ஹார்வியை அழைத்துப் போனான் ஸ்டீஃபன். அங்கே முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லனும் காணப்பட்டார். அசாதாரணத் துணிச்சலுடன் ஹார்வியை அவரிடம் அழைத்துப் போய் அறிமுகம் செய்து வைத்தான் ஸ்டீஃபன். ''இவர் அமெரிக்கத் தொழிலதிபர் ஹார்வி. நமது பல்கலைக்கழகத்துக்கு இவரால் என்ன நன்மை செய்ய முடியும் என்பது பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம்'' என்றான்.

''அப்படியா, ரொம்ப சந்தோஷம்'' என்றார் மாக்மில்லன். அவருக்கு ஹார்வியையும் தெரியாது; ஸ்டீஃபனையும் தெரியாது; பேராசிரியர் போர்ட்டரையும் அறிந்திருக்க நியாயமில்லை! பண்பு கருதி சில வார்த்தைகளை முணுமுணுத்துவிட்டு நகர்ந்தார். ஆனால் இந்தச் சந்திப்பினால் ஹார்வி அடைந்த உற்சாகம் சொல்லி முடியாது. அவன் மேகங்களில் மிதந்தான்!

''வாருங்கள், வி.ஸி.யை அவருடைய அறையில் பார்த்துவிட்டு வரலாம்'' என்று ஹார்வியை அழைத்துப் போனார் பேராசிரியர் போர்ட்டர். பியர்ரி அங்கே மாறு வேஷத்தில் துணைவேந்தராக நடிக்கக் காத்திருந்தான். அறிமுகம் முடிந்து, குசலம் விசாரித்து ஓய்வதற்குள் ஜேம்ஸ் உள்ளே நுழைந்தான். எண்பது பிராயத்தினன் போல் மேக் அப்பில் காட்சி அளித்த அவனை, 'ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தின் பொருளாளர்' என்று ஸ்டீஃபன் அறிமுகம் செய்து வைத்தான்.

''பட்டமளிப்பு விழா விருந்தைப் பாதியில் விட்டுவிட்டு வந்திருக்கிறேன். இப்படி என்னை இழுத்து வந்ததற்கு ஈடுசெய்வது போல் உன் நன்கொடை கணிசமானதாக இருக்கட்டும்!'' என்று கண்களை இடுக்கி, புன்னகை மலர்த்திக் கூறினான் ஜேம்ஸ்.

''ஆஸ்காட் இறுதி நாளில் இவரது குதிரை ரோஸலி பெற்ற பரிசுத் தொகையை அப்படியே தந்து விடுவதாக இருக்கிறார்!'' என்றான் ஸ்டீஃபன்.

''என்ன! என்ன! அது எண்பதாயிரம் பவுண்டாச்சே!'' என்று வாயைப் பிளந்தான் துணை வேந்தராகக் காட்சி தந்த பியர்ரி.

''இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் டாலர்கள் என்று சொல்லுங்களேன்! நான் அமெரிக்கன்'' என்றான் ஹார்வி.

''போட்டியே ஒரு போடு! சக்கைப் போடு!'' என்று அவனை முதுகில் ஓங்கித் தட்டினான் ஜேம்ஸ்.

ஸ்டீஃபன் செக் புத்தகத்தை எடுத்தான். ''கேஷ் செக்காகவே எழுது! விஷயம் ரகசியமாக இருக்க வேண்டும்! இல்லையென்றால் போட்டி போட்டுக் கொண்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமும் நன்கொடை கோரி உன் உயிரை வாங்கும்'' என்றான் ஜேம்ஸ்.

''அதுமட்டுமல்ல; பலபேர் டாக்டர் பட்டத்துக்கு ஆசைப்பட்டு, 'நன்கொடை தருகிறேன்; பட்டம் தா' என்று என் கழுத்தை அறுப்பார்கள்'' என்றான் பியர்ரி.

ஹார்வி, கேஷ் செக் எழுதித் தந்தான். உடனேயே ஸ்டீஃபன், ஹார்விக்குச் சிவப்பு — கறுப்பு அங்கியை மாட்டினான். பியர்ரி லாட்டின் மொழியில் ஏதோ கூறி, சில சைகைகளைப் புரிந்தான்.

பின்னர், ''இவ்வளவு தாராள மனப்பான்மை கொண்டிருக்கும் உங்களை அடுத்த பட்டமளிப்பு விழா வரை — ஓராண்டுக் காலம் — காக்க வைக்காமல் இப்போதே டாக்டர் பட்டம் வழங்கி விட்டேன்'' என்றான்.

விருந்துபசாரம், பேச்சுக்கள் எல்லாம் முடிந்து உண்மையான துணை வேந்தரும் மற்றவர்களும் அவரவர் காரியாலய அறைகளுக்குத் திரும்பக் கூடிய நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. நண்பர்கள் மூவருமாகச் சேர்ந்து ஹார்வியை அவசரப்படுத்துவது போன்ற எண்ணத்தை ஏற்படுத்தாமல் அனைத்தவாறு அழைத்துப் போய்க் காரில் ஏற்றி வழியனுப்பி வைத்தார்கள்.

வேஷங்களைக் களைந்து பிரீஃப்கேஸ் பெட்டிகளில் திணித்துக் கொண்டு ஆளுக்கொரு திசையில் பிரிந்தார்கள்!

மூன்று நாடகங்கள் அமோக வெற்றியடைந்து முக்கால்வாசிப் பணம் திரும்பக் கிடைத்துவிட்டது. ஜேம்ஸின் திட்டம் மட்டுமே பாக்கி.

''ஜேம்ஸ்! நீ என் அப்பாவைச் சந்திக்க வேண்டும்; இப்போது அவர் லண்டனில் தான் இருக்கிறார்'' என்றாள் ஆன்னி. அழைத்துப் போனாள்.

ஆன்னியின் தந்தையைப் பார்த்த ஜேம்ஸ், முதலில் முகம் சிவந்தான்; பிறகு வெளிறினான்! அவன் கால்கள் உருகி ஓடுவது போல் உணர்ந்தான். எப்படிச் சமாளித்துக் கொண்டானோ, அவனுக்கே தெரியாது! ஆன்னியின் அப்பா —

வேறு யாருமல்ல —

ஹார்வியேதான்!

மாப்பிள்ளையைத் தட்டிக் கொடுத்தான் ஹார்வி. ''என் பெண்ணை இங்கிலாந்து ராணியின் மகனுக்குக் கொடுக்கலாம் என்று எண்ணியிருந்தேன். ஹூம், அவனுக்கு அதிர்ஷ்டமில்லை! என் பெண் உன்னைத்தான் விரும்புகிறாள்!'' என்று கூறிவிட்டுத் தனது ஜோக்கைத் தானே ரசித்துப் பெரிதாகச் சிரித்தான்.

ஹார்வி தன்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்பது புரிந்தது ஜேம்ஸுக்கு. ஆம், ஒவ்வொரு தடவையும் இவனை ஒரு மாறுவேடத்தில்தானே பார்த்திருக்கிறான் ஹார்வி! இருதயம் துடிக்கும் வேகம் சற்றுக் குறைந்தது, ஜேம்ஸுக்கு.

எப்படியோ அன்று மாலைப் பொழுதைச் சமாளித்து, இரவு விருந்தை அவருடன் சேர்ந்து உண்டுவிட்டு, 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று காதலியுடன் காரில் ஏறினான் ஜேம்ஸ்.

கார் நகர்ந்ததும் அடக்க மாட்டாது சிரித்தாள் ஆன்னி.

''போக்கிரிப் பெண்ணே! இப்படிச் செய்யலாமா நீ?'' என்று கடிந்து கொண்டான் ஜேம்ஸ்.

''நீ ஏமாற்றிப் பணம் பறிக்கத் திட்டமிட்டிருப்பது என் அப்பாவைத்தான் என்று ஆரம்பத்திலேயே நான் உன்னிடம் கூறியிருந்தால் நீ என்னைக் காதலித்திருப்பாயா? நம் காதல் திருமணம் வரை வளர்ந்திருக்குமா?'' என்று திருப்பிக் கேட்டாள் அவள்.

''உண்மைதான்'' என்று தலையசைத்தான் ஜேம்ஸ். ''என் நண்பர்களிடம் என்ன சொல்வேன்?''

''ஒன்றுமே கூற வேண்டாம்; கல்யாணத்துக்கு அமெரிக்காவுக்கு வருமாறு அழைப்புக் கொடு. மாப்பிள்ளைத் தோழர்கள் போக வரச் செலவை அப்பா ஏற்றுக் கொள்வார். அவர்கள் அங்கு வந்து அப்பாவைச் சந்திக்கும்போது உண்மையை உணர்வார்கள்.''

''என் திட்டம்? பழி வாங்கும் படலம்?''

''அதை என்னிடம் விட்டு விடு. மற்றவரிடமும் நமது தேன் நிலவு முடிந்ததும் திட்டம் நிறைவேற்றப்படும் என்று கூறிவிடு!''

அமெரிக்கா. பாஸ்டன் நகரின் விமான நிலையத்தில் நான்கு நண்பர்களும் இறங்கினார்கள். ஆன்னி ஒரு பிரும்மாண்ட கெடிலாக் காரில் வந்திருந்தாள். அவர்களை, அவர்களுக்காக அறைகள் ரிஸர்வ் செய்திருந்த ஓட்டலுக்கு அழைத்துப் போகத் தயாராக இருந்தாள். அவளைப் பார்த்ததுமே ஜேம்ஸ் தவிர மற்ற மூவரும் பிரமித்துப் போனார்கள்.

''அடப்பாவி! இவ்வளவு அழகான ஒருத்தியை நீ வளைத்துப் போட்டிருப்பாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை!'' என்று ஸ்டீஃபன்தான் முதலில் பேசினான்.

''உனக்குப் பழிவாங்கும் திட்டம் ஒன்றுமே தோன்றாமல் மூளை மரத்துப் போனதில் வியப்பில்லை'' என்றான் ராபின்.


பியர்ரி ஒன்றுமே பேசாமல் மாப்பிள்ளைத் தோழனின் உரிமையுடன் — ஒரு பிரெஞ்சுக்காரனுக்கே உள்ள துணிவுடன் — ஆன்னியைக் கட்டி அணைத்துக் கொண்டு அவள் கன்னங்களை முத்தமிட்டான்.

''சரி, சரி, இதற்கே இவ்வளவு திகைப்பு என்றால் பாக்கியையும் உணரும் போது என்னதான் செய்வீர்களோ?'' என்றான் ஜேம்ஸ்.

அதன் உட்பொருளை மற்ற மூவரும் அப்போது புரிந்து கொள்ளவில்லை. ஆனால் மாதா கோயிலில் மணமகளின் கரத்தைப் பற்றி அவள் தகப்பனார் அழைத்து வந்த போது தெளிவாகப் புரிந்தது. 'படவா ராஸ்கல்!'' என்று ஜேம்ஸை மூவரும் அடங்கிய குரலில் திட்டினார்கள்.

''ஆன்னி நாடகமாடி ஜேம்ஸை ஏமாற்றியிருக்கிறாள்'' என்று முணுமுணுத்தான் ராபின்.

''ஜேம்ஸை ஹார்வி அடையாளம் கண்டு கொள்ளாததால் நம்மையும் தெரிந்து கொள்ள மாட்டான் என்றுதான் நினைக்கிறேன்'' என்று கிசுகிசுத்தான் பியர்ரி.



''நம்ம மருமகன் ஸ்கூட்டரை வித்துட்டுக் கார் வாங்கப் போகிறாராம்! எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கலே...''

''இதுல உங்களுக்கென்ன ஆட்சேபணை?''

''மீதிப் பணத்துக்கு நம்மகிட்டல்லவா கையேந்துவார்!''

— மணியன் தர்மலிங்கம்



"இரண்டு மாபெரும் லட்சியங்களை முன்னிட்டுத்தான் நான் அரசியலுக்கே வந்தேன்!"

"என்ன அவை?"

"பங்களா கட்டணும்; மாருதி கார் வாங்கணும்!"

— படுதலம் சுகுமாரன்

அது உண்மையாயிற்று...

லண்டனில் விம்பிள்டன் டென்னிஸில் ஓர் அமெரிக்கன் வெற்றிபெறக் கண்டது; பிறகு விலைமதிக்க முடியாத ஒரு வேன்காக் ஓவியத்தைவாங்கியது; மாண்டிகார்லோவில் மரணத்தின் வாயில் புகுந்தும் ஒரு டாக்டரின் திறமையால் தப்பிப் பிழைத்தது; குதிரைப் பந்தயத்தில் ரோஸலி பெற்றுத் தந்த வெற்றிக் கோப்பை; இதன் பிறகு கிடைத்த டாக்டர் பட்டம்; இப்போது மகளின் திருமணம் அளிக்கும் மகிழ்ச்சி — எல்லாமாகச் சேர்ந்து ஹார்வியின் மனத்தில் அளவிட முடியாத் கிளர்ச்சியைத் தோற்றுவித்திருந்தன. அதனால், 'இவர்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே' என்று கூட ஹார்விக்குத் தோன்றவில்லை.

திருமணச் சடங்கு முடிந்து திருமண விருந்து நடந்து கொண்டிருந்தது. ஹார்வி பேச எழுந்தான். "நண்பர்களே! என் அருமை மகளுக்கு, நான் அரும்பாடு பட்டுப் பெற்ற ஒரு வேன்காக் ஓவியத்தையே பரிசளிக்க எண்ணினேன். ஆனால் அவள் பெருந்தன்மையுடன் அதை ஏற்க மறுத்து விட்டாள். 'நீங்கள் வெகுகாலமாகத் தவமிருந்து பெற்ற ஓவியம்; அதை நீங்களே வீட்டில் மாட்டி வைத்திருங்கள்; நானும் ஜேம்ஸும் உங்களைக் காண அமெரிக்கா வரும் போதெல்லாம் அதனைப் பார்த்து மகிழ்வோம்; அதுவே போதும்' என்று கூறி விட்டாள். எனவே அவளுக்கு அந்தப் படத்தின் மதிப்பில் பாதி அளவையாவது பரிசாக அளிக்க எண்ணி ஒரு காசோலை எழுதிக் கையெழுத்துப் போட்டிருக்கிறேன்..."

நண்பர்கள், உறவினர்கள் கைதட்டியும் மதுக்கோப்பையை உயர்த்தியும் ஆரவாரம் செய்ய, அப்பாவை அணைத்து முத்தமிட்டாள் ஆன்னி. பரிசைப் பெற்றுக் கொண்டு திரும்பி, ஜேம்ஸிடம் ஓடிக் கொண்டாள். உறையைப் பிரித்தாள்: ஆன்னி பெயரில் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் டாலருக்கு ஒரு செக்!

"நான் இதை என்ன செய்யப் போகிறேன் தெரியுமில்லையா?" என்று கணவனின் காதுக்கருகில் கிசுகிசுத்தாள்.

"தெரியும்" என்று அவன் அவள் காதைக் கடித்ததுடன், நன்றிப் பெருக்கில் இறுக அணைத்தான்.

விருந்தும் நடனமும் தொடர்ந்தபோது, புது மணத் தம்பதி, ஸ்டீஃபனை நெருங்க, பியர்ரியும் ராபினும் கிட்டத்தில் வந்தார்கள். ஒரு பேனாவை இரவல் வாங்கி செக்கின் பின்னால் ஸ்டீஃபனின் பெயரை எழுதினாள் ஆன்னி. கீழே கையெழுத்துப் போட்டாள். "ஜேம்ஸின் பங்கு இது. பாக்கி சாக்கியில்லாமல் கணக்குத் தீர்த்தாகி விட்டது! இனி என் தகப்பனாரைச் சும்மா விட்டு விடுவீர்களல்லவா?"

ஜேம்ஸையும் ஆன்னியையும் தேன் நிலவுக்கு அனுப்பிவிட்டு மற்ற மூவரும் லண்டன் திரும்பினார்கள். ஹீத்ரோ விமான நிலையத்தில் இறங்கியதும் நகரின் மையத்துக்குப் போக மூவரும் ஒரே டாக்ஸியைப் பிடித்தார்கள். மாலை நாளிதழ் ஒன்றை வாங்கிக் கொண்டு டாக்ஸியில் ஏறினான் ஸ்டீஃபன். டாக்ஸி நகர ஆரம்பித்ததும் பிரித்துப் படித்தான். மூன்றாவது பக்கத்தில் பொருளாதாரச் செய்திகள். கொட்டை எழுத்துத் தலைப்பைப் படித்ததும், "அடக் கடவுளே" என்று உரக்கக் கூவினான்.

"என்ன? என்ன?" என்று மற்ற இருவரும் பரபரத்தனர்.

செய்தியை உரக்க வாசித்தான் ஸ்டீஃபன்.

"வடக்குக் கடலில் எண்ணெய் வயல் கண்டுபிடிப்பு! பிராஸ்பெக்டா எண்ணெய் நிறுவனத்தின் வெற்றி!" — இது தலைப்பு!

கீழே செய்தி:

"பிராஸ்பெக்டா எண்ணெய் நிறுவனப் பங்குகளின் மதிப்பு, பங்கு மார்க்கெட்டில் ஜெட் வேகத்தில் உயர்ந்தன. காரணம், அந்த நிறுவனம் வடக்குக் கடலில் எண்ணெய் வயல் கண்டுபிடிப்பதில் பெரு வெற்றி அடைந்திருப்பதுதான். ஒவ்வொரு பங்கின் மதிப்பும் பதினைந்து மடங்குக்கும் மேலாக நேற்று விலை பேசப்பட்டது!"

மூன்று நபர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு 'திருதிரு'வென்று விழித்தார்கள். தாங்கள் வாங்கிய பங்குகள் சல்லிக் காசுக்குப் பிரயோஜனமில்லை என்று அவர்கள் நினைத்திருந்தது போக, இப்போது அவை மதிப்பில் பன்மடங்கு உயர்ந்து அவர்களைக் கோடீசுவரர்களாக்கியிருந்தன!

"இப்போ என்ன செய்வது?" என்று பியர்ரி கேட்டான்.

"வேறென்ன செய்ய? ஹார்வியிடம் நாம் ஏமாற்றிப் பறித்த பணத்தையெல்லாம் அவனிடமே திருப்பித் தர ஆளுக்கொரு வழி கண்டுபிடித்தாக வேண்டும்! மீண்டும் நான்கு நாடகங்கள் அரங்கேற வேண்டும்!" என்றான் ஸ்டீஃபன்.

(முற்றும்)



எம்.எல்.ஏ.க்களுக்கு எம்.ஜி.ஆர் பொட்டலம் வழங்கினாராமே?

* பொட்டலம்?

* இதய கீதா, நாட்டரசன்கோட்டை *

? இலங்கை தற்போது அறிவித்திருக்கும் திட்டம் நியாயமானதா?

! இந்த அளவுக்கு ஜெயவர்த்தன இறங்கி வந்திருப்பதைப் பயன்படுத்திக் கொள்வதே புத்திசாலித்தனம். வேதாளம் மறுபடி முருங்கை மரத்தில் ஏறுவதற்குமுன் ஒரு நல்ல முடிவுக்கு வந்துவிட வேண்டும். இந்த அவசரம் முத்தரப்பிலும் உணரப்பட வேண்டும்.

* பி. ராமகிருஷ்ணன்,
மேலகிருஷ்ணன் புதூர்

? அரசு மருத்துவ மனைகளெல்லாம் தற்போது சுகாதாரமின்றி இருக்கின்றனவே?

! மற்றப் பொது இடங்களை மட்டும் சுத்தமாக வைத்திருக்கிறோமாக்கும்! கண்ட கண்ட இடங்களில் எச்சில் துப்புவது, சிறுநீர் கழிப்பது, ஆழ்குழாய்க் கிணறுகளின் அருகே சேறும் சகதியுமாக ஆக்குவது, புழுதி படிய, ஈக்கள் மொய்க்க உள்ள தின்பண்டங்களை வாங்கிச் சாப்பிடுவது எல்லாம் நாம் செய்கிற காரியம்தான். ஆக, ஆஸ்பத்திரி மட்டும் அசுத்தமாய் இருப்பதாகக் குறை கூற நமக்கு ஏது தகுதி?

* எஸ். ராம்கோபால், சென்னை—33

? இலவசமாக பிளாஸ்டிக் குடங்கள் தருகிறார்கள்; ஆனால் தண்ணீருக்கு மட்டும் பத்துக் காசு வாங்குகிறார்கள் — ஏன்?

! அது ஒன்றும் இலவசமல்ல; நாம் கொடுத்த வரிப் பணத்தில் வாங்கப்பட்ட குடங்கள்தான். பாவம், நமது பாமர மக்கள் தீப்பெட்டி வாங்கும்போதும், மண்ணெண்ணெய் வாங்கும்போதும் வேறு எதை வாங்கும்போதும் வரி கொடுக்கிறோம் என்பதைக் கூட உணர்வதில்லை. இலவசம் என்று அரசு இவர்களை ஏமாற்றுகிறது. இந்த உலகத்தில் எதுவுமே இலவசமாகக் கிடைக்காது என்பதை இவர்கள் உணரும்போதுதான் இங்கே ஆரோக்கியமான ஜனநாயகம் மலரும்.



* ஒரே பதில்!



* சாதனை புரிவாரா?



* அங்கலாய்ப்பு



* இறங்கி வந்தார்!

* எஸ். சுந்தர், திருநெல்வேலி

? சில வாரங்களுக்குமுன் சென்னைத் தொலைக்காட்சியில்செய்திவாசிக்கும்பெண்மணி காப்பி அருந்துவதைக் காட்டினார்களே, கவனித்தீர்களா?

! தவறு செய்தி வாசித்தவருடையதோ, அல்லது காமிராமேனுடையதோ, எப்படியானாலும் அது ஒரு சுவாரஸ்யமான தவறு!

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

? கனவுகள் — அவற்றின் பலன்கள். உங்கள் கருத்து என்ன?

! தேர்தல் வாக்குறுதிகளை நம்புகிறவர்கள் இதையும் நம்பலாம்.

* எம். கல்யாண சுந்தரம், திருநரையூர்

? ஜெத்மலானியின் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களுக்கு ராஜீவ் காந்தி இதுவரை பதில் கூறவில்லையே?

! ஏன் சொல்லவில்லை! 'ஆட்சியின் ஸ்திரத்தன்மையைக் குலைக்க, அயல்நாட்டுச் சதிகாரர்கள், உள்நாட்டுச் சதிகாரர்களுடன் சேர்ந்து செய்யும் சதி' என்று திரும்பத் திரும்பக் கிளிப் பிள்ளை போல் கூறி வருகிறாரே! எதிர்க் கட்சியினர், பத்திரிகைகள், கிருஷ்ணய்யர், ஜெத்மலானி போன்ற முன்னாள் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், மற்றும் கட்சிக்குள்ளேயே எதிர்க் கோஷ்டியினர் ஆகிய எல்லாருடைய குற்றச்சாட்டுக்களுக்கும் அந்த ஒரே பதில்தான்! எவ்வளவு சாமர்த்தியம்! அடடா!

* ஆர். மைதீன் பாட்சா, வல்லம்

? எம்.எல்.ஏ.க்களுக்கு எம்.ஜி.ஆர். பொட்டலம் வழங்கியதாகக் கருணாநிதி கூறுகிறாரே, அது என்ன ஸார் பொட்டலம்?

! ஆர்.வி. வணங்கும் தில்லி முருகன் கோயில் பிரசாதமாகத்தான் இருக்கும்; வேறெதையும் கற்பனை செய்து கொள்ளாதீர்!

* குரு. வைத்தியநாதன், கோவிந்தபுத்தூர்

? தூங்கும் மனைவியை எப்படி எழுப்புவது?

! தண்ணீர் லாரி வந்துவிட்டதாகச் சொல்லுங்கள்! அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து கொள்கிறவள், உங்கள் வீட்டுக்குரிய இரண்டு குடம் தண்ணீரை நீங்கள் பெற்றுச் சுமந்து கொண்டு வரும்வரை தூங்கவே மாட்டாள்!

* வி.எஸ். கிருஷ்ணமூர்த்தி, சென்னை—26

? பஞ்சாப் பிரச்னையைத் தீர்க்கத் தன்னிடம் ஒருவரும் ஆலோசனை கேட்கவில்லை என்று ஜெயில் சிங் அங்கலாய்க்கிறாரே?

! சாகிற காலத்தில் சங்கரா சொல்பவருக்கும் பதவிக் காலம் முடியும் சமயம் பரபரப்படையும் ஜனாதிபதிக்கும் அதிக வித்தியாசமில்லை.

* ஆர். நாகராஜன், செம்பொனார்கோயில்

? கல்கியின் பக்கங்கள் வர வர ஸீரியஸாகி வருகின்றனவே?

! அதற்காக, "கிருஷ்ணய்யர் வெங்கடராமய்யரைத் தோற்கடித்தால், ராஜீவ் அய்யரின் மனநிலை எப்படி இருக்கும் என்பது பற்றி கி. ராஜேந்திர அய்யர் என்ன எழுதுவார்? — நாகராஜ அய்யரின் கேள்வி எப்படி?" என்று நீர் கேள்விகள் எழுப்ப வேண்டுமாக்கும்! இது கல்கியின் பக்கங்களை மேலும் ஸீரியஸாக்குகிறது, அய்யரே!

* ஆர். மாதவராமன், கிருஷ்ணகிரி

? சோதனையைச் சாதனையாக்குவது என்பது இயலாத ஒன்றா?

! அதெப்படி சொல்ல முடியும்? சோதனைகள்தான் சாதனைகளுக்கு வழி வகுக்கின்றன. உதாரணமாக ராஜீவையே எடுத்துக் கொள்ளுங்கள். அவர் மீதும் அவருக்கு நெருங்கியவர்கள் மீதும் பலமான ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இச்சோதனைகளிலிருந்து மீள அவர் முதலில் அருண் நேரு, சுக்லா, அரீஃப் கான் ஆகியோருக்குக் கல்தா கொடுத்தார். பிறகு அருண் சிங், வி.பி. சிங் ஆகியோரை வெளியேற்றினார். பின்னர் ராஜ தந்திரமாக அருமை நண்பர் அமிதாப்பையும் பலி கடா ஆக்கினார். இப்போது வி.பி. சிங் கோஷ்டிக்கும் சோதனைக் கட்டம்தான். இந்தச் சோதனைகளை இரு தரப்பில் யார் சாதனையாக மாற்றப் போகிறார்கள்? அதை அறியத்தான் உலகமே காத்திருக்கிறது!

* எம். ரமேஷ் குமார், போடிநாயக்கனூர்

? தி.மு.க.வின் எதிர்காலம் யார் கையில் இருக்கிறது?

! பரங்கி மலை ஊழலில் சம்பந்தப்பட்டவர்களிடம் இல்லை. ஊழல் என்று சந்தேகம் தோன்றியதுமே தயங்காமல் நடவடிக்கை எடுத்த தலைமையின் கண்டிப்பில் இருக்கிறது.



எனக்குப் பிடித்த நாடுகள்!



"**ஏ**ன்ன சார்! பொழுது எப்படிப் போகிறது?'' என்று ஜெமினி கணேஷிடம் கேட்பவர்கள் வசமாக மாட்டிக் கொள் வார்கள். பொரிந்து தள்ளிவிடுகிறார் மனு ஷர்!

''நான் எப்பவும் பிஸிதான் தெரியுமா? என்னிடம் வந்து யாராவது கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்களேன் என்று சொன் னால் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது'' என்று ஆரம்பிக்கிறவர் தொடர்ந்து அடுக் கிக் கொண்டே போகிறார்:

''காலை ஐந்து மணிக்கு எழுந்து விடு வேன். தினமும் கட்டாயம் டென்னிஸ் ஆடுவ துண்டு. மாலை நேரமிருந்தால் ஷட்டில் காக் அல்லது பிரிட்ஜ். புத்தகங்கள் படிப்பேன். புத்தகங்கள் என்றால் வெறும் பொழுது போக்கு நாவல்கள் அல்ல. இலக்கியப் புத்த கங்கள் படிப்பேன். தப்பித் தவறிச் சென் னையில் 'போர்' அடித்தால் பெங்களூர் போய்விடுவேன், கால்ஃப் விளையாட. அங்கும் சரிப்படா விட்டால் இந்தியாவின் வேறெந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் கிளம்பி விடுவேன்; அப்படியும் திருப்தி யில்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது அயல் நாடு.''

அவர் சர்வ சாதாரணமாகக் கூறியதைச் சற்றுப் பிரமிப்புடன் கேட்டுக் கொண்டிருக் கும் போதே நமக்கு ஒரு புதிர் போடுகிறார்:

''உலகின் ஏதாவது ஒரு நாட்டுப் பெய ரைச் சொல்லுங்கள் பார்ப்போம்...''

''.......''

''நீங்கள் எந்த நாட்டின் பெயரைச் சொன்னாலும் அங்க எனக்கொரு நண்பர் இருப்பார். அவர் பெயரையும் அவர் பற்றிய விவரங்களையும் சொல்லுவேன்!''

''உங்களைப் பற்றிச் சொல்லுங்கள் சார்... நீங்கள் பெங்களூரில் — நட்சத்திர ஹோட் டல் கட்டப் போவதாகச் சொல்கிறார் களே?''

''ஒரு சில காரணங்களுக்காக அந்த முயற் சியைக் கைவிட்டுவிட்டேன். அதற்கென வைத்திருந்த நிலத்தை விற்றுவிட்டேன். ஒரு வேடிக்கை என்னவென்றால், அந்த நிலத்தை என்னிடமிருந்து வாங்கியவர் அதனைத் திரும்பவும் எனது நெருங்கிய நண்பருக்கு விற்க, இப்போது நண்பர் அதில் பெரிய ஆஸ்பத்திரி கட்டி, மக்களுக்கு நன்மை செய் யத் திட்டமிட்டிருக்கிறார். இது தெரிந்திருந் தால் நான் நண்பருக்கு நிலத்தை இலவச மாகவே தந்திருப்பேன்!''

''தெலுங்குப் படம் ஒன்றில் நடித்துள் ளீர்கள் போலிருக்கிறதே?''

''இயக்குனர் பாலசந்தர் எனது ரொம்ப நாளைய நண்பர். 'ருத்ரவீணா'வில் சிரஞ் சீவிக்கு அப்பாவாக நடிக்க முடியுமா என்று கேட்டார். 'பின்னே இந்த வயசில் சிரஞ் சீவிக்குப் பிள்ளையாகவா நடிக்க முடி யும்?' என்று தமாஷாகக் கேட்டுவிட்டு ஒப்புக் கொண்டேன். படம் வெளியானால் தான் ரசிகர்கள் எந்த அளவுக்கு என் நடிப்பை வரவேற்கிறார்கள் என்பது புரி யும்.''

தொடர்ந்து, இன்றைய தமிழ் சினி



"வீட்டிலிருந்து சங்கிலியை எடுத்துக் கொண்டு சென்னைக்கு ஓடி வந்தேன். அதை விற்றுச் சில நாட்கள் தள்ளினேன். அதன் பின் கார்ப்பரேஷன் குழாய்த் தண்ணீரைக் குடித்தே ஒரு வாரம் ஓட்டினேன்' என்று இயக்குனர் எஸ்.ஏ. சந்திரசேகரன் இங்கே பேசினார். இன்று அதுமாதிரி ஒருவர் ஓடி வந்தால், அவர் கதி என்ன ஆகும் என்று யோசித்துப் பார்க்கிறேன். கார்ப்பரேஷன் குழாயில் தண்ணீரே வருவதில்லை! குழாய்த் தண்ணீர் குடித்துக்கொண்டுகூடக் காலத்தை ஓட்ட முடியாதே!"

ஒரு கூட்டத்தில்: **பாலுமகேந்திரா**

கூறக் கேட்டவர்: **ஜூலி**

மாவை விளாசுகிறார் ஜெமினி:

"அந்தக் காலத்துல சார்... ஹீரோக்கள் என்ற முத்திரையுடன் நாங்கள் மூன்று பேர் தான் இருந்தோம் — எம். ஜி. ஆர்., சிவாஜி, நான். இன்றைக்கு ஏகப்பட்ட நடிகர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் 'ஹீரோ'க்கள். ஆனால் என்ன பயன்? கமல் போன்ற திறமை சாலிகளான ஒரு சிலரைத் தவிர யாருக்கும் நடிப்பு சுத்தமாக வரவில்லையே! சினிமாக் களின் தரமும் ரொம்பத் தாழ்ந்து போச்சு. காபரே டான்சுக்கும் சண்டைக் காட்சிக் கும்தான் அதிக முக்கியத்துவம் தரப்படு கிறது. பணம் பண்ணுவது மட்டுமே குறி யாக இருக்கிறதே தவிரச் சமுதாய நோக்கு இல்லை! நானும்தான் காதல் காட்சிகளில் நடித்துக் 'காதல் மன்னன்' பட்டம் கூட வாங்கியிருக்கிறேன். ஆனால் இன்றைக்குக் காதல் காட்சிங்கற பெயரிலே கைகளையும் கால்களையும் வலிப்பு வந்த மாதிரி உதறிக் கொண்டு...... சே...!"

— இந்த இடத்தில் ஜெமினி ஆடிக் காட்டவே ஆரம்பித்து விடுகிறார். அவசரம் அவசரமாக அடுத்த கேள்வியைப் பிரயோ கிக்கிறோம்:

"அரசியலில் நுழையும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா சார்?"

"1963 லேயே காமராஜ் காங்கிரசில் சேரச் சொல்லிக் கூப்பிட்டார். நான் தான் 'நமக்கெதற்கு அரசியல்?' னு ஒதுங்கி விட்டேன். நியமனம் செய்யப் பட்டால் அரசியல் பொறுப்பு ஏற்க நான் தயார்தான்."

தமது மனைவி; பெண்கள் கமலா, ஜிஜி; மருமகன்கள்; பேரக் குழந்தைகள் சகிதம் தமது சென்னை, நுங்கம்பாக்கம் நெடுஞ் சாலை வீட்டில் தற்போது வசிக்கிறார் ஜெமினி.

"எனக்கு இப்போது வாழ்க்கை ரொம்ப மகிழ்ச்சியாய் இருக்கிறது" என்று சொல் கிறவரிடம் சில பழைய விஷயங்களைக் கிண்டினால் என்ன என்று தோன்றவே,

"உங்கள் வாழ்க்கையில் பல பெண் களுடன் சம்பந்தப்பட்டிருக்கிறீர்கள். அதற் காக இப்போது வருத்தப்படுகிறீர் களா?" என்று கேட்கிறோம்.

"ஆமாம்! என் அருமை மனைவி குழந் தைகளை விட்டுவிட்டுப் பலருடன் என் பொன்னான நேரத்தைச் செலவழித் ததற்காக வருத்தப்படுகிறேன். என் அனு பவங்களிலிருந்து பெண்கள் விஷயத் தில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் தெரிந்து கொண் டிருக்கிறேன். அவர்களிடத்தில் அனாவசிய மாக அனுதாபப்பட ஆரம்பித்தால் நமக் குத்தான் பிரச்னையாக முடியும்.... ஆனால் இப்போது அதையெல்லாம் சொல்லி என்ன பயன்?"

"உங்கள் வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதி னால் சுவையாக இருக்குமே?"

"சுய சரிதம் எழுதினால் உண்மையை மறைக்கக் கூடாது! நான் உண்மையை எழுதினால் என்னுடன் தொடர்பு வைத்தி ருந்த பல பெண்களின் வாழ்க்கை யெல்லாம் பாழாகிவிடும். இப்போது எல்லோரும் கல்யாணமாகிக் குழந்தை குட்டிகளுடன் நிம்மதியாக இருக்கிறார் கள். அதைக் கெடுப்பானேன்? மேலும் எனக்கு இன்னமும் பணம் பாக்கி வைத் திருக்கிற தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள் போன்றவர்களின் பெயரும் 'ரிப்பேராகி' விடும். எதற்கு வீண் வம்பு?"

சந்திப்பு: **மௌலஷ்மி**

புகைப்படம்: **சோமு**

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543 434157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—; விமானத் தபால் ரூ 650/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)

ஓ! அப்படி ஒரு தெளிவான செயல்பாடு...



இதை நிரூபிக்க வார்த்தையேதும் தேவையில்லை.

CROWN-TV

வேறு எந்த டிவி-ஐயும்விட அதிக இல்லங்களில் காணப்படும் ஒரே பெயர்

மேலும் கிடைக்கிறது மாடல் சிடி-701 எம்
(ரிமோட் கண்ட்ரோலுடன்)

Registered as a Newspaper in Srilanka



அன்னையர், அறிவர்: கேட்பரிஸ் போர்ன்விடா கோகோ, மால்ட், பால் மற்றும் அசல் சீனியின் ஊட்ட நலன்களைக் கொண்டது. போர்ன்விடா குழந்தைகள் மிக விரும்பும் அத் தனிச் சுவையை பாலின் குணத்துடன் அளிக்கிறது.

தினமும் போர்ன்விடா அளிக்கப்படும் குழந்தைகள் வேலையிலும் விளையாட்டிலும் கூர்மையோடிருக்கிறார்கள். அது அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் சுறுசுறுப்பையும் அளிக்கிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் நலன் அளிக்கிறது.

அதன் தனிச் சுவையுடன் இணைந்திட்ட இன்றைய வளர்ச்சி.

கேட்பரிஸ்
போர்ன்விடா



BM/9175 TAM